வேதாரண்யம்



ஆசிரியர்
முனைவர் இரா.ப.கருணானந்தன்

பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,
சிறப்பு ஆணையர்

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை, சென்னை - 8

வேதாரண்யம்

வேதாரண்யம்

ஆசிரியர்

முனைவர் : இரா. ப. கருணானந்தன்

பதிப்பாசிரியர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

சிறப்பு ஆணையர்

வெளியீடு :

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை – 600 008.

2006

BIBLIOGRAPHICAL DATA

Title	**: VEDHARANYAM**
Author	**: Dr. R. P. Karunanandan**
Copy right	**: Tamil Nadu State Dept. of Archaeology**
Subject	**: History**
Language	**: Tamil**
Edition	**: First**
Publication No of year	**: 176 / 2006**
Type Point	**: 11**
Paper	**: 100 GSM**
Type setting	**: ANNAI GRAPHICS** 73, Srinivasa perumal Sannathi Ist Street, Royapettah, Chennai - 14. Ph : 24800 006
Printer	**: The Chennai Printers** **Industrial Cooperative Society Ltd.,** **118, Triplicane, Chennai -600 005.** **Phone : 28446287**
Publisher	**: State Dept of Archaeology** Tamil Valarchi Valagam Holls Road, Egmore Chennai - 600 008.
Price	**: Rs. 47.00**

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் விதமாக தொல்லியல் சான்றுகளாக விளங்கும் கோவில்கள், கோட்டைகள், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள் ஆகியவற்றை பாதுகாத்து வரும் பணியினையும், அவற்றிலுள்ள செய்திகளை அறியும் வண்ணம் நூல்களாக வெளியிடும் பணியினையும் செம்மையாக ஆற்றி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக முதுகலை பட்டம் பெற்ற (தொல்லியல், வரலாறு, தமிழ் மற்றும் சமஸ்கிருதம்) மாணவர்களுக்கு இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தால் பயிற்சி அளித்து முதுநிலை பட்டயச் சான்றிதழ் வழங்கி வருகிறது. இப்பயிற்சியில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் கோயில் மற்றும் கோயிலைச் சார்ந்த ஊரினைப் பற்றியும் ஆய்வுநூல் சமர்ப்பிக்கின்றனர். இந்நூலில் சிறந்தவற்றை தேர்வு செய்து துறையின் சார்பாக நூலாக வெளியிடப்படுகிறது. இதில் முனைவர் இரா.ப. கருணானந்தன், அவர்கள் (1975-76) சமர்ப்பித்த 'வேதாரண்யம்' என்ற ஆய்வு நூலை தொல்லியல் துறை நூலாக வெளியிடுகிறது.

இன்றைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம் வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூரினைப் பற்றியும், வேதாரண்யேசுரர் கோயிலினைப் பற்றியும் அதன் சிறப்பினையும் தேவாரப்

பாடல்கள் சிறப்புறக் கூறுகின்றன. அவற்றொடு மேலும் இவ்வூரில் வாழ்ந்த சான்றோர்களைக் குறித்தும் இந்நூலாசிரியர் மிகச் சிறப்புற கூறியுள்ளார்.

குறிப்பாக மறைக்காட்டிறைவன் கோயில் கதவு திறவாமல் நெடுநாள் இருந்தமையைத் திறப்பதற்காக அப்பரும், சம்பந்தரும் பாடிய பாடல்கள் சிறப்பான உவமையுடன் கூறப்பட்டுள்ளது. வேதாரண்யேஸ்வரர் கோயில் செப்புத்திருமேனிகள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்களைக் குறித்துச் சிறப்புடன் விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

மேலும் இவ்வூர் சமுதாய அமைப்பினைப் பற்றியும் விவரித்துள்ளார். வேதாரண்யம் ஊரினைப் பற்றியும் அதன் தொடர்பான வரலாற்று பின்னணிகளையும் வேத காலமும் முதல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை புராண, இதிகாசங்களிலிருந்தும் மற்றும் கல்வெட்டுகள், இலக்கியங்கள் மூலமும் வெளிப்படுத்தி யிருப்பது இந்நூலை படிப்பவர்களுக்கு மகிழ்வாகவும், சுவையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலை மாணவராக இருந்த போது எழுதிய முனைவர் இரா. ப. கருணானந்தன், பாராட்டுக்குரியவர். இவர் இத்துறையில் 25 ஆண்டுகளாக காப்பாட்சியர் மற்றும் கல்வெட்டாய்வாளர் பதவிகளில் பணியாற்றியுள்ளார். இன்று அவர் அமரராக இருந்த போதிலும் அவர் நூலினை வெளியிடுவதில் இத்துறை பெருமைப்படுகிறது. இந்நூல் பதிப்புப் பணியினை மேற்கொண்ட சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் முனைவர். சு. இராசகோபால் மற்றும் திரு. கி.சு. சம்பத், சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் ஆகியோருக்கு எனது பாராட்டுதல்கள்.

இந்நூலை வரலாற்று ஆர்வலர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் படித்து மகிழ்ந்து மேலும் பல நூல்கள் வெளிவர நல்லாதரவினை நல்கிட மனமார கேட்டுக் கொள்கிறேன்.

நாள் 23-2-2006
சென்னை - 8.

சிறப்பு ஆணையர்

.....உள்ளுரை.....

	பதிப்புரை	.....	3
1.	இயற்கைச் சூழல்	.....	7
2.	ஊரும் பேரும்	.....	13
3.	ஊரமைப்பு	.....	19
4.	சான்றோர் பலர் யான் வாழும் ஊரே	.....	25
5.	கோவில் – கட்டிட அமைப்பு	.....	31
6.	செப்புத் திருமேனிகள்	.....	38
7.	சிற்பமும் ஓவியமும்	.....	47
8.	திரு விழாக்கள்	.....	53
9.	கோவிலும் சமுதாயமும்	.....	68
10.	மறைக்காட்டிலக்கியம்	.....	74
11.	தலபுராணங்கள்	.....	84
12.	கல்வெட்டுச் செய்திகள்	.....	95
13.	இன்றைய வரலாற்றுப் பொன்னேட்டில் வேதாரண்யம்	.....	136
14.	பிற்சேர்க்கை	.....	139

வேதாரண்யம்

1. இயற்கைச்சூழல்

ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்க்கும் இறையுறையும் தலங்களுள் அப்பரும் சம்பந்தரும் சேர்ந்து அற்புதம் நிகழ்த்தியருளிய தலம் திருமறைக்காடு என்னும் வேதாரண்யம். இனிய வயல்கள், நெடிய உப்பங்கழிகள், படர்நெறிக்காடு, மடல்விரிதாழைகள். வேதமாக்கடல் இன்ன பிற இனிதே சூடி நெடிதுயர்ந்த பனிமலைப்போல் நடுவாகக் கோயிலைக் கொண்டு அமைந்தது வேதாரண்யம். வளமிகு தஞ்சை மாவட்டத்தைச்* சேர்ந்த நகரமேயாயினும் வேதாரண்யம் இன்று நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் உள்ளது. இந்நூல் எழுதப்பட்ட 1976 ஆண்டில் வழங்கியபடி இந்நூலில் தரப்பட்டுள்ளது. கடலோரத்தில் இருப்பதால் இங்கு மருத நிலத்திற்குறிய வளத்தைக் காண இயலாது. தஞ்சாவூரிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவும், நாகப்பட்டினத்திலிருந்து 45 கிலோமீட்டர் தொலைவும், திருத்துறைப் பூண்டியிலிருந்து 35 கிலோமீட்டர் தொலைவும் உடையது. இந்நகருக்கு பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. காரைக்குடி மாயூரம் தொடர் வண்டிப் பாதையில் திருத்துறைப் பூண்டியினின்று பிரியும் கோடிக்கரை கிளை ரயில் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது.

---

*வேதாரண்யம் இன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நூல் எழுதப்பட்ட 1976ஆம் ஆண்டில் வழங்கியப்படியே இந்நூலில் தரப்பட்டுள்ளது.

நிலவளம் :

பசிய தாழைகள் மரங்களென நீண்டு வளர்ந்து நம்மை வரவேற்கும். ''பூக்கும் தாழை புறணி அருகெலாம்'' என்பது அப்பர் வாக்கு, வேதாரண்யத்தின் ஒருபகுதி வெண்மணல் நிலம், மற்றுமொரு பகுதிகடல், எஞ்சிய பகுதி உப்பளமும் காடுமே யாகும். ஆதலின் வேதாரண்யம் நெய்தலும், முல்லையும் கலந்த நிலப்பகுதியினால் ஆகியது. வெண்மணல் பகுதியில் இயற்கையாக தோன்றிய பனையும், தாழையும் கண்ணுக்குப் பெருவிருந்து அளிக்கும். இடையிடையே சவுக்குத் தோப்புகள் உயர்ந்து நிற்கும். உழைப்பின் நினைவாக உயர்ந்து நிற்கும் ஏற்றமும் அதனையொட்டிய புன்செய் நிலமும் கடல்மேல் கலமென அங்கங்கேயுள்ளன. மழை மிகுதியாகப் பெய்யுமாயின் இந் நிலங்களே நெல்விளையக்கூடிய நிலமாக மாறி விடுவதும் உண்டு.

புன்செய் நிலங்களில் புகையிலை, மிளகாய், கேழ்வரகு, கம்பு, சணல், வேர்க்கடலை, எள், பயிறு, கும்முட்டிக்காய் முதலியன விளைவிக்கப் பெறுகின்றன. இப்பகுதியின் பணப்பயிர் புகையிலையே ஆகும். புகழ்பெற்ற ஸ்வஸ்திக் புகையிலை தொழிற்சாலை வேதாரண்யத்தில் உள்ளமை, அப்பகுதியில் புகையிலை ஏராளமாக விளைகிறது என்பதை நன்கு சுட்டி நிற்கும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் வேதாண்யம் காட்டிலிருந்து கிடைக்கும் பழு பாகற்காய் என்பது இப்பகுதிக்கேயுரிய காய்வகையும் உடற்கு நலம்தருவதும் ஆகும். மற்றுமொன்று அங்கு விளையக்கூடிய முருங்கைக் காய்கள், குட்டையாகக் காய்க்க மாட்டா, நீட்டமாகவே காய்க்கும் ஆதலின் இவற்றை வேதாரண்யம் மக்கள் யாழ்பாணத்து முருங்கை எனும் பெயரால் அழைப்பர். ஆறுமாதப் பயிராகிய தண்டுக்கீரையும் குறிப்பிடத்தகுந்தவற்றுள் ஒன்று. மானாவாரியாக திருடஞ்சம்பா, வாடஞ்சம்பா, சீங்கனி கொடை வாழை. கருப்பு என்னும் செழுமையான நெல் வகைகளை அப்பகுதியினர் விளைவிக்கின்றனர்.

முல்லையெனும் காடு :

சோழநாட்டில் காடுகளைத் திருத்துறைப் பூண்டி வட்டத்தில் மட்டுமே காணமுடிகிறது. இவ்வட்டத்தில் 210 சதுரகிலோ மீட்டர் பரப்புக்குக் காடுகள் உள்ளன. இனி அகத்தியன் பள்ளிக்கு அருகிலுள்ள வேதாரண்யம் காடு 4,500 ஏக்கர் பரப்பளவை உடையது. 10 கிலோமீட்டர் நீளமும் 5 கிலோமீட்டர் அகலமும் உடையது. குறைந்த அளவு மழையே பெய்வதால் நீண்ட அகன்ற இலையுள்ள மரங்கள் வளருவதில்லை, பாலைப்பழம், துவரம்பழம், கொழுஞ்சிப்பழம் என்னும் காட்டுப் பழங்களும், சீந்தில் கொடி என்னும் மூலிகையும், கோழி ஆவரை என்ற கொட்டையும், பூனைக்காய்ச்சிக் கொட்டையும் இக்காட்டில் மலிந்து கிடக்கின்றன.

நீர்வளம்

திருமறைக்காட்டுப் பதிகங்களில் முதல் மூவரும் இந்நகரின் நீர்வளத்தையே மிகுதியாகப் போற்றியுள்ளனர். மறைக்காட்டை அறிமுகப்படுத்த வரும் பிள்ளையார்.

" பொங்கு வெண்மணற் கானற்பொரு கடற்றிரை தவழ்முத்தம்
கங்குல் ஆறிருள் போழும் கலி மறைக்காடு"

என்று கடலின் செழுமையைத்தாம் கூறுவார்.

வளவனாறு, முள்ளியாறு, மனங்கொண்டான் ஆறு, உப்பனாறு என்று நான்கு ஆறுகள் இப்பகுதியில் உள்ளன. இவைகளைப் பேராறுகள் என்று சொல்லமுடியாது. பெருமழை காலங்களில் மட்டும் இவற்றில் நீரோடும். பெரும் புயலின்போது கடல்நீர் இவ்வாறுகள் வழியாக நிலத்திற்குள் புகுந்து வேதாரண்யம் பகுதியைத் தமிழ் நாட்டினின்று துண்டித்துத் தனித் தீவாக மாற்றி விடுதலும் உண்டு. இக்காரணத்தாலேயே வேதாரண்யம் பகுதியிலுள்ள சில ஊர்கள் மணியந்தீவு, ஓணான் தீவு, புலிபாய்ந்தான் தீவு என்று தீவு என முடியும் பெயர்களாக உள்ளன எனலாம். தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதியைத் தமிழில்

புலம் என்றழைப்பர். நீர்குரவப்புலம், ஆயக்காரன் புலம், கத்திரிப்புலம், கருப்பம்புலம், தாமரைப்புலம், நெடும்புலம் என்ற ஊர்ப்பெயர்கள் இந்த அடிப்படையில் பெயர் பெற்றவை.

இவ்வூர் கடலோரத்தில் இருப்பதால் பெரும்பாலான கிணறுகளில் நீர் உப்புக்கரிக்கவே செய்கிறது. எனவே ஊரைச் சுற்றிலும் ஊருணிகளை அமைத்து அவற்றில் மழைநீரைச் தேக்கி அவற்றையே குளிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். வேதாரண்யேஸ்வரர் கோவிற்குள் மட்டும் மொத்தம் ஏழு கிணறுகள் உள்ளன. இவ்வேழு கேணிகளில் மட்டுமே நீர் உப்புத்தன்மை இன்றிச் சுவையாக உளது. அதிலும் விசுவாமித்திரர் தீர்த்தத்திலுள்ள தண்ணீரானது உடலுக்கு எத்தகு ஊறும் விளைவிக்காது என்று மேனாட்டு அறிவியலார் ஆய்ந்து கண்டதாகக் கூறப்படுகிறது. எனவே குடிநீர்க்கென ஊரவர் இக்கிணற்று நீரையே எடுத்துச் செய்கின்றனர்.

வேதாரண்யம் கால்வாய் :

நீண்டு வளைந்து செல்லும் வேதாரண்யம் கால்வாயும் அதற்கு நிழல் பிடிக்கும் தென்னை மரங்களும் மலையாள நாட்டை நினைவூட்டும் இக்கால்வாய் 1863–67ல் வெட்டப்பெற்று 1874ல் செப்பம் செய்யப்பெற்றது. இக்கால்வாயை வெட்டுதற்கும் செப்பம் செய்தற்கும் 1,08,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது. கோடிக்கரையினின்று நாகப்பட்டினம் வரை செல்லும் இக்கால் வாய் 57 கிலோ மீட்டர் நீளமும், 5½ மீட்டர் அகலமும் உள்ளது.

வேதாரண்யம் உப்பளத்தினின்று நாகப்பட்டினம் துறைமுகத் திற்கு உப்பைக் கொண்டு செல்வதற்கென்றே இக்கால்வாய் வெட்டப்பட்டது. உப்பு, விறகு, வைக்கோல் முதலியன இக்கால்வாய் வழியாகச் செல்கின்றன.

இக்கால்வாயை பண்டைய மக்கள் போக்குவரத்திற்கும் பயன்படுத்தினர். இது பண்டைக் காலத்திலிருந்த இப்போக்குவரத் தினையே ஆங்கிலேயர் மேம்படுத்தினர் என்பதைக் காட்டுகிறது.

பிரமிடெனத் தோன்றும் உப்பளங்கள் :

நீர் எங்குமே உழவுத் தொழிற்குத்தாம் பயன்படுத்தப் பெறும். ஆனால் இங்கு நீரானது அன்றாட வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாத உப்பை விளைவிக்கப் பயன்படுகிறது. இவ்வாறு வேதாரண்யம் பகுதியின் குடிக்கப் பயன்படா நீர் உணவிற்குப் பயன்படுவது குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. வேதாரண்யத்தினின்று பொடி நடையாகக் கோடிக்கரை செல்லும் வழியில் நடந்து சென்றால் எகிப்திற்கு வந்துவிட்டோமோ என்றே எண்ணத்தோன்றும் அவ்வளவும் தொல்லியல் பெருமை சான்ற பிரமிடுகளோ என வியந்து அருகே சென்றால் அத்தனையும் உப்புக்குவியலாய்ப் போய்விடும் அங்கு வாழும் மக்கள் உப்பு உற்பத்தியைத் தொழில் என்று கூறுவதில்லை. விவசாயம் என்றே கூறுகின்றனர். கிணறுகளும், ஏற்றங்களும் ஏற்றத்தின் மூலமாகக் கிணற்று நீர் வாய்க்காலின் வழியோடிப் பாத்திகளில் பாய்வதும் நமக்கு விவசாயத்தைத்தான் நினை வூட்டும். பாத்திகளில் அளவாக நீரைபாய்ச்சிப்பின்னரே உப்பை விளைவிப்பர்.

வேதாரண்யம், தம்பிக்கோட்டை, அதிராம் பட்டினம், காட்டுமாவடி, நெய்தவாசல், தரங்கம்பாடி, நாகப்பட்டினம் முதலிய இடங்களில் உப்பளங்கள் உள்ளன. என்றாலும் மிகப் பெரிய உப்பளம் என்னும் பெருமையைக் கொண்டது. வேதாரண்யம் உப்பளம். 30 மைல் நீளமும் 5 மைல் அகலமும் கொண்டு விளங்குவதால் தமிழகத்தினுடைய மிகப்பெரிய உப்பளம் எனும் சிறப்பையும் தட்டிச் செல்கிறது. பட்டினப்பாலை கூறும்.

''வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி'' என்பதனையும் ''உமணர் ஒழுக்கை'' என்னும் சங்க காலக் காட்சியையும் இங்கு தாம் காண இயலும். எனவே சங்க காலம் தொடங்கி இங்கு உப்புத் தொழில் நடைபெற்று வருகிறது எனக் கருதலாம். இங்கு மட்டும் 20 லட்சம் டன் உப்பு ஆண்டுதோறும் விளைவிக்கப்படுகிறது. இவ்வூர் உப்பு நீர் ஜிப்சம் செய்யவும் ஏற்றது.

மேட்டூர் கெமிகல் கம்பெனியார் வேதாரண்யத்திலும், அதிராம்பட்டினத்திலும் இராசயணப் பொருள்களின் ஏற்படுத்தியில் வெள்ளை உப்பை பயன்படுத்துவதற்காக உப்பளங்களை குத்தகைக்கு எடுத்து மேட்டூருக்கும், ஆலவாய்க்கும் உப்பை அனுப்புகின்றனர்.

வேதாரண்யேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமாக 100 ஏக்கர் உப்பளம் உள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது.

✸

2. ஊரும் பேரும்

வேதாரண்யம் ஊர்ப்பெயரின் அமைப்பையும், மாற்றத்தையும் வரலாற்று அடிப்படையாக விளக்குவது இப்பகுதி. இவ்வூர் இன்றும் காட்டுப்பகுதியில்தான் இருக்கிறது. எனவே, ஊர்ப்பெயரின் இறுதியில் காடு, ஆரண்யம் சொல்லாட்சி இருத்தல் இயல்பே. நான்கு மறைகளும் ஈசனை வழிபட்ட காடு இது வாகையால் மறைக்காடு எனப்பண்டை நாளில் பெயர் பெற்றிருந்தது எனலாம்.

> " **சதுரம் மறைதான் துதிச்செய்து வணங்கும்**
> **மதுரம் பொழில்சூழ் மறைக்காடு"**

எனும் சம்பந்தருடைய திருவாக்கும் இதனை மெய்ப்பிக்கும். இருப்பினும் கோவில் அங்கு ஏற்படுதற்கு முன்னர் இவ்வூர் எப்பெயர் பெற்றிருந்தது என ஆய்தல் தகும். இன்றும் வேதாரண்யம் காட்டில் மான்கள் மிகுதியாக உள்ளன. ஆலமரங்கள் மிகுதியாக இருந்த ஊர் ஆலங்காடு என்றும், வேல மரம் மிகுதியாக இருந்தால் வேற்காடு என்றும் அழைக்கப் பெறும். அதுபோல இவ்வூர்க்காட்டில் மரைகள் (மான்கள்) பெருத்த எண்ணிக்கையில் காணப்பெறுவதால் 'மரைக்காடு' என்று முன்னர் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். கோவில் ஏற்பட்டவுடன் அவ்வூரில் மறைவல்லார் மிக்கு வாழ்ந்தமையால் 'மறைக்காடு' என ஆகியிருத்தல் தகும். சங்க கால்லத்தில் இவ்வூர் இருந்ததா என்பதற்கு சங்க இலக்கியச் சான்றுகள் இல்லை. இவ்வூர்ப்பெயர் முதலில் கிடைக்கும் அப்பர், சம்பந்தர் பாடல்

தொடங்கி, அனைத்துக்கல்வெட்டுக்களும் திருமறைக்காடு என்றே அழைத்துள்ளன. கல்வெட்டில் தவறாகக்கூட 'மரைக்காடு' என்னும் சொல்லாட்சி காணப்படுவதில்லை.

திருநாவுக்கரசர் தம்முடைய அடைவு திருத்தாண்டகத்தில் இறைவன் உறையும் காட்டுப் பதிகளையெல்லாம் தொகுத்துக் கூறுவர்.

" மலையார் தம்மகளொடு மாதேவன்சேரும் மறைக்காடும்
வண்பொழில் சூழ்தலைச்சங்காடு
தலையாலங்காடு தடங்கடல் சூழ்ந்தன் சாய்க்காடு
தள்ளுபுனற் கொள்ளிக்காடு
பலர்பாடும் பழையனூர் ஆலங்காடு பனங்காடு
பாவையர்கள் பாவம் நீங்க
விளையாடும் விளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடைய விளை வேறமன்றோ''

அப்பருடைய பாடல் முழுவதிலும் மறைக்காடு என்னும் சொல்லாட்சியே காணப்பெறுகிறது. சுந்தரருடைய பாடல் களிலும் 'மறைக்காடு' என்னும் பெயரே உள்ளது. ஆனால் சம்பந்தருடைய பாடல்களில் சிறு மாற்றத்தைக் காணலாம். அவருடைய பாடல்களில்,

" மறைவனமமர் தருபரமனே''
" மறைக்காட்டுறை மைந்தா''
" மறைக்காடு அமர்ந்தாரே''
" எழில் வேதவனமே''

என்னும் நால்வகையான சொல்லாட்சிகள் உள்ளன. ஆதலின் பல்லவர்கள் காலத்தில் திருமறைக்காடு, மறைவனம். வேதவனம் என்னும் மூன்று பெயராலும் அழைக்கப்பெற்றது எனலாம்.

இன்றைய நாகப்பட்டினம் வட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம் இரண்டும் அருகருகே அமைந்து கடலோரமாய் விளங்குகின்றன. இப்பகுதியில் இன்றும் உப்பு அதிகமாக

விளைவிக்கப்பெறுகிறது. எனவே முற்காலச் சோழர் இப்பகுதியை 'அளநாடு' என்று அழைத்தனர். அளம் என்றாலே உப்பளம் எனப் பொருள்படும். இனி ஆட்சி இயலுக்கு ஏதுவாக இவ்வளநாடு அளநாடு, இடையளநாடு, உம்பளநாடு என மூன்று பகுதியாகப் பகுக்கப்பெற்றன. நாகப்பட்டினம் வட்டத்தின் மேற்பகுதி அளநாடு எனவும், நாகப்பட்டினம் வட்டத்தின் கீழ்ப்பகுதி இடையள நாடு எனவும் அதற்குக்கீழே உள்ள வேதாரண்யம் பகுதி உம்பளநாடு எனவும் அழைக்கப்பெற்றன.[1] அளநாடு அளநாட்டிற்கு இடையில் உள்ள இடையளநாடு, அளநாட்டிற்கு மேற்கேயுள்ள உம்பளநாடு என இலக்கண அறிவோடு நாட்டைப் பகுத்துள்ளமை பாராட்டத்தக்கது. செம்பியன் மாதேவி அளநாட்டுள்ளும், தலை ஞாயிறும், திருக்குவளை (திருக்கோளிலி)யும் இடையள நாட்டுள்ளும், வேதாரண்யம், கோடிக்காடு என்பன உம்பள நாட்டுள்ளும் அடங்கும் ஊர்களாம். உம்பள நாட்டை நினைவுறுத்தும் வண்ணம் 'உம்பளச்சேரி' என்னும் ஊர் வேதாரண்யம் அருகே உள்ளமையையும் நினைவிற் கொள்ளலாம். உம்பள நாட்டிற்குச் செல்லும் வழி உம்பளப் பெருவழி எனவும் கல்வெட்டில் அழைக்கப்பெறுகின்றன.

ஆதித்தன் காலம் முதல் முதலாம் இராஜராஜன் காலம் வரை ''உம்பள நாட்டுப் பெருந்தேவதானம் திருமறைக்காடு'' என்றே அழைக்கப்பெற்றது.[2] முதற்குலோத்துங்கள் காலத்திலும், இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் நாட்டின் பெயரில் மாற்றத்தைக் காண்கிறோம். முதற் குலோத்துங்கன் காலத்தில் தின சிந்தாமணி வளநாட்டுக் குன்றூர் நாட்டு திருமறைக்காடு என அழைக்பெறலாயிற்று.[3] தினசிந்தாமணி என்பது எங்ஙனம் வளநாட்டின் பெயராயிற்று? முதற் குலோத்துங்கனுடைய பட்டத்தரசியாக விளங்கியவர் மதுராந்தகி. குலோத்துங்கனுடைய அம்மானாகிய இரண்டாம் இராஜேந்திர சோழன் மகள் இவருக்கு

தினசிந்தாமணி என்ற பிறிதொரு பெயரும் உண்டு. இவள் ''சிவனிடத்துமையெனத் தினசிந்தாமணி புவனமுழுதுடையார்'' என்று கல்வெட்டுக்களில் மிகச்சிறப்புடன் குறிப்பிடப் பட்டுள்ளாள்[4]

எனவே, முதலாம் குலோத்துங்கன் உம்பளநாடுஎன இருந்ததை மாற்றி தன் மனைவியின் பெயரால் தினசிந்தாமணி வளநாடு என அழைத்தான். மேலும் நாடு வளநாடு எனவும் இவன் காலத்தில் பகுக்கப்பெற்றது. வளநாட்டின் பகுதியாகக் குன்றூரைத் தலைமையாகக் கொண்ட குன்றூர் நாடும் அமைக்கப்பெற்றது. கல்வெட்டுக்களில் தினசிந்தாமணிச் சதுர்வேதிமங்கலம் (71/1913) தினசிந்தாமணி நல்லூர் (303–1910) என்ற ஊர்ப் பெயர்களிலும் அவளுடைய பெயரைக் காணமுடிகிறது. தினசிந்தாமணி என்னும் பெயர் சமணத் தொடர்புடையது போல் தோன்றுகிறது.

இம்மாற்றம் நீண்டநாள் வரை நிலைபெறவில்லை இயறகையோடு அமைந்த உம்பளநாடு எனும் பெயரே இப்பகுதிக்கு ஏற்றதென உணர்ந்த ஆட்சியாளர் மூன்றாம் குலோத்துங்கள் காலம் முதல் மூன்றாம் இராசேந்திரன் காலம் வரையும். ''உம்பள நாட்டுக் குன்றூர் நாட்டு திருமறைக்காடு'' என நிலையாக எவ்வித மாற்றமும் இன்றி அழைக்கலாயினர்.[5]

வேதவனம் எனும் சொல்லாட்சி

சோழர் கல்வெட்டுக்கள் மறைக்காடு என்றே அழைக் கின்றன. என்றாலும் சம்பந்தர் பாடலிற் காணப்பெற்றது போல் இவ்வூரை 'வேதவனம்' என்றும் கல்வெட்டுக்கள் சில இடங்களில் கூறுகின்றன. குறிப்பாக சில ஆட்பெயரைச்சொல்லும் போதும், நாழியின் பெயரிலும் வேதவனம் என்னும் சொல்லாட்சி காணப் பெறுகிறது. சான்றாக, வேதவனமுடையான் பிள்ள நான விக்கிரம

சோழபட்டன் (449/17) வேதவனநாயக நாழி (461/17) வேதவன நாயகர் (534/17) வேதவனக்கோன் (534/17) இவை முறையே குலோத்துங்கள் III, இராஜேந்திரன்III, ஆகியோர் காலத்தன ஆகும்.

ஊர்ப்பெயரோடு வேதம்

வேதத்தோடு தொடர்புடைய கோவில் ஊர்கள் தமிழகத்தில் பல உள்ளன. ரிக் வேதம் இறைவனை வழிபட்ட ஊர் சீர்காழிக்கு 4 கல் தொலைவில் உள்ள புள்ளிருக்கு வேலூர். மறைகளே மலைகளாக நிற்கவே திருக்கழுகுன்றம் வேதகிரி என்று அழைக்கப்பெற்றது. கடவுள் வேதத்திற்குப் பொருள் சொன்ன மையால் காஞ்சிக்குத் தென்மேற்கு 19கல் தொலைவில் உள்ள ஊர் ஒன்று திரு ஒத்தூர் என்று அழைக்கப்பெற்றது.[6]

மேலே குறிப்பிட்ட ஊர்கள் அனைத்தும் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் என்பதும் எண்ணத்தக்கது. தம்முடைய ஊரையும், ஊரில் குடிகொண்டுள்ள இறைவனையும் வேதத் தோடு தொடர்புபடுத்திக் கொள்வதை மக்கள் விரும்பி இருத்தல் வேண்டும். எனவே வேதம் சார்ந்த பெயரைத் தம்முடைய ஊர்களுக்கு இட்டுக்கொண்டனர். அத்தகைய சூழ்நிலையில்தான் நான்கு வேதங்களும் வழிபட்டதாக 'திருமறைக்காடு' என்னும் பெயரில் ஊர் தோன்றுவதாயிற்று. மூன்றாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டு ஒன்று 'மறைஞ்ஞான வாயில்' என்னும் ஊரைக் குறிப்பிடுகிறது.[7] அவ்வூர் இன்று மறைஞாய நல்லூர் என்று அழைக்கப்பெறுகிறது. வேதங்கள் மறைக்காட்டு இறையை வழிபட்டு கோவிற்கதவைச் சாத்திவிட்டு மறைந்தது இவ்வூரில் தான் என்பர். மேலும் அவ்வாறு விடைபெற்ற வேதங்கள் செடி. கொடிகளாக மாறிநின்ற இடம் 'நாலுவேதபதி' என்னும் ஊரே என்றும் பொதுமக்கள் கூறுவர். ஆதலின் வேதத்தின் தொடர்பை

வேதாரண்யத்தைச் சுற்றியுள்ள இன்றைய ஊர்களில் கூட் காணலாம்.

அடிக்குறிப்பு

1. Political Geography of the Chola Country - Y. Subbrayalu
2. தெ.இ.க. தொகுதிகள் 12:24, 19:120, 17:500, 472
3. தெ.இ.க.தொகுதி 17:456
4. பிற்காலச் சோழர் வரலாறு பகுதி 2, சதா சிவ பண்டாரத்தார் பக்கம்.314.
5. தெ.இ.க. தொகுதி : 17:445, 536,
6. திருத்தலப் பயணம் – ராய.சொ.
7. தெ.இ.க. தொகுதி 17:539.

3. ஊரமைப்பு

சோழர் ஆட்சியில் உம்பள நாட்டின் பகுதியாகவும். பிற்காலப் பாண்டியர் ஆட்சியில் உம்பர் வளநாட்டின் பகுதியாகவும் விளங்கிய திருமறைக்காடு இப்போது திருத் துறைப் பூண்டி வட்டத்தில் வேதாரண்யமாகத் திகழ்கிறது. $79^{0}55^{0}$ கிழக்கு தீர்க்க ரேகையும் 10^{0} 25^{0} வடக்கு அட்ச ரேகையும் பொருந்து மிடத்தில் உள்ளதென பூகோளக் கணக்குப்படிக் கூறலாம். முல்லையும். நெய்தலும் மயங்கிய பகுதியை நிலமாகக் கொண்டு கடற் கரை நகரமாக ஒளிர்வது வேதாரண்யம். மதுரைக்காஞ்சி உலகுபுரந் தூட்டும் பேரன்னை மீனாட்சி உறையும் கோவிலை மொட்டாகக் கொண்டு – சுற்றியுள்ள தெருக்களை இதழ்களாக இருத்தி மதுரை நகரை தாமரை மலருக்கு உவமையாகக் கூறும். இவ்வுவமை கொஞ்சம்கூட வேறு பாடின்றி வேதாரண்யத்திற்கும் பொருந்தும். 14.5 சதுரமைல் பரப்பளவுள்ள வேதாரண்யம் நகரில் நடுவாக ஓங்கி நிற்பது வேதாரண்யம் கோவிலே. இதனைமையமாகக் கொண்டு தெருக்கள் சுற்றிச்சுற்றி அமைக்கப்பெற்றுள்ளன. ஊரைச் சுற்றிலுமுள்ள நீர் நிலைக்குள் இருப்பதைப் போன்ற தோற்றத்தையே ஏற்படுத்தும்.

தெருக்கள்

கோவில்லைச் சுற்றி முதலில் அமைந்திருக்கும் தெரு மடவிளக மாகும். கோவிலைச் சூழ்ந்த பகுதியை மடவளாகம் என்றழைப்பர். இது மேல மடவளாகம், வடக்கு மடவிளாகம், கீழ மடவிளாகம்,

தெற்கு மடவளாகம் என நான்கு பகுதியை உடையது. தெற்கு மடவளாகம் தவிர பிற அனைத்திலும் இன்று அந்தணர்கள் வாழ்கின்றனர். மடவளாகத்தை அடுத்து கோவிலைச் சுற்றியிருப் பது தேரோடும் வீதி. இதனை தசரத மஹாராஜா வீதி என்ற ழைக்கின்றனர். தசரதர் இக்கோவிலை வழிபட்டதாகவும் அன்று முதல் தெரு அவர் பெயரைப் பெறுவதாயிற்று என்று மக்கள் நம்பு கின்றனர். இத்தெரு நான்கு பகுதிக்கேற்ப மேலவீதி, வடக்குவீதி, கீழவீதி, தெற்குவீதி என்று மட்டுமே இன்று அழைக்கப் பெறுகின்றன. இத்தெருக்களிலும் ஒவ்வொரு திசையிலும் கோவில் தொண்டு செய்வாரே தொழிற்கு ஏற்பப் பிரிந்து வாழ்கின்றனர். சோழர்காலம் தொடங்கிய இன்று வரை கோவில் திருப்பதியம் ஓதுவார் தெற்குத் தெருவிலே வாழ்ந்து வருகின்ற னர் என்பது குறிப்பிடத்தக்கது. கருகலன் சோழன் வீதி என்று ஓர் வீதியும் உள்ளது. கரிகாலன் சோழன் வீதி என்பது இவ்வாறு மருவி இருக்கக் கூடும்.

1971ஆம் ஆண்டு எடுக்கப்பெற்ற கணக்குப்படி இவ்வூரின் மக்கள்தொகை, 21,476 ஆகும். இவ்வூர் பேரூராட்சி வகையைச் சார்ந்து. மஹாராஜபுரம், பனையங்காடு, பறையகாடு, நாகத்தோப்பு, நட்டுவன் சந்து, கொள்ளுத்தீவு, வலியத்தீவு, தீவுக்காடு, மணியன் தீவு, அக்கரை தீவுக்காடு, கூத்தங்காடு, சிறைமீட்டான் காடு, பண்ணின் நேர் மொழியாள்புரம் என்பன போன்ற பெயரிலே சிறப்புவாய்ந்த பல குப்பங்களைத் தன்னகத்துள் கொண்ட மிகப்பெரிய பேரூராட்சியாகும்.

உரம் பெருக்கும் கல்விச் சாலைகள்

வேதாரண்யம் பேரூராட்சி அலுவலகத்திற்குள் நுழைவாருக்கு ஐயம் வந்துவிடும். அலுவலகம் என்று நினைத்து கலைக்கூடத்திற்குள் வந்துவிட்டோமோ என்று எண்ணத்

தோன்றும். ஆம் அங்குள்ள 18ஆம் நூற்றாண்டுச் சுவரோவியங்கள் அவ்வளவு எழில் வாய்ந்தவை. உள்ளத்தை ஈர்க்கும் திரிபுராந்தகர், கலியாண சுந்தரர், சோமாஸ்கந்தர் என்பன போலும் ஓவியங்களை வரைந்து நாட்டுப்பணி பலபுரிந்து நகரத்தார் அகட்டிடத்தில் வேதபாடசாலை நடத்திவந்தனர். இப்போது வேதபாடசாலை நடவாமையால் பேரூராட்சி அலுவலமாக மாறி நிற்கிறது. மற்றுமொரு வேத பாடசாலையும் அவ்வூரில் இருந்ததாகக் கூறுவர். தாயுமானவர் பெயரால் பாடசாலையொன்றும் சீரிய முறையில் இயங்கிவருகிறது. அரசு உயர்நிலைப்பள்ளியொன்றும், 15 தொடக்கப்பள்ளிகளும் (வேதாரண்யம் பேரூராட்சி ஊர்கள் அடங்கலும்) வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கத்தக்க கஸ்தூரிபா காந்தி கன்யாகுருகுலமும் என அங்குள்ள கல்விச் சாலைகள் கணக்கிலடங்கா.

மடமும் பந்தலும்

சான்றோர் பலர் யான் வாழும் ஊரே என்று பெருமை கொண்டார் சங்கப்புலவர். அறம் வளர்க்கும் சான்றோர்களும் அவர்கள் வளர்க்கும் அறநிலையங்களும் வேதாரண்யத்தில் இன்றும் உள்ளனர். சாதுக்கள் மடத்தினுடைய தொண்டு முன்னரே கூறப்பெற்றது கோவிலின் தென் புறத்தில் திருவாதிரை மடம் உள்ளது. இம்மடத்தில் நூற்றாண்டு கடந்த அழகிய சுவரோவியங்களும் உள்ளன. ஜி.டி. வைரமுத்துப் பிள்ளை என்பவரால் நிறுவி நடத்தப் பெறுவது மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தின் அன்னதானம் படைக்கப்பெறும் தூய சைவர் மட்டுமே அன்னதானம் நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என்பது இம்மடத்தினுடைய தனித்தன்மையாகும்.

சாவளர்த்தும் குளம்தொட்டும் மேவினர்க்கு வேண்டுவன செய்தளித்தும் தொல்பொருள் காக்க உழவாரம் ஏந்தியும் பணி செய்து காட்டினார் முதல் தொண்டர் திருநாவுக்கரசர். அவர்

வழியில் நின்று அவர் பெயராலே தண்ணீர்ப்பந்தல் நிறுவினார் அப்பூதிஅடிகள், சிறக்க வாழ்ந்து காட்டிய இச்சான்றோர்களைப் பற்றி காரைக்குடிப் பகுதியில் உள்ள நேமத்தான்பட்டி லட்சுமண செட்டியாரும், நாராயண செட்டியாருமாகச் சேர்ந்து இவ்வூரில் திருநாவுக்கரசர் என்னும் திருநாமத்தால் தண்ணீர்ப் பந்தல் ஒன்றை 50 ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர்.

✸

சமுதாயவியல்

இங்கு அகமுடையார், அம்பலகாரர், கவுடர், உப்புக் குரவர், யாதவர் முதலிய இனத்தாரும்; அரிஜனங்களில் வைக்கர், பள்ளர், பறையர், வெட்டியர் முதலியோரும், முகமதியாரும், கிறித்தவர்களும், ஜைனமுதலியாரும், நகரத்தார், ஈரோடு வன்னியர், தேசிகர் முதலியோர் சிறிய அளவிலும் வாழ்கின்றனர். மீனவர்கள் வாழ்க்கை தனித்தன்மை வாய்ந்தது. இவர்களுள் அகமுடையாரே பெருகிய எண்ணிக்கையினர். உப்புக் குரவர் தங்களைச் செட்டியாரின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்வர். ஜைன முதலியார்கள் தம் வழிபாட்டிற்கென்று ஜைனமடம் ஒன்றை நிறுவியுள்ளனர். என்றாலும் சமயக்காழ்ப்பு இல்லாது இப்பிரிவினர் இந்துக்களோடு இணைந்தே வாழ்கின்றனர். சமணத்தாரேயாயினும் வேதாரண்யேசுவரர் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் அக்கோயில் திருப்பணிக்கும், பிறவிழாக் களுக்கும் பல்லாற்றானும் பேருதவி புரிந்துள்ளார்கள். இச்சமயத் தாரின் சமயக் காழ்ப்பில்லா பண்பைக் கண்ட சைவ சமயத்தார் 1960ஆம் ஆண்டுத் திருப்பணியின் போது மேலக்கோபுரத்தி லிருந்த சமணர் கழுவேற்றப் பொம்மைகளை அகற்றிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தார்க்கு இக்கோயில் மீது தனித்த ஈடுபாடு உண்டு. யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பி புலவரும், நீர்வையம்பதி பீதாம்பரப் புலவரும் வேதாரண்யேசுவரர்பால் ஆறாக் காதல் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கரணவாய் வரணி ஆதீனத்தைச் சேர்ந்தவர்களே என்றும் வேதாரண்யேசுவரர் கோவில் தர்மகர்த்தா வாக இருத்தற்கு இயலும். இவ்இறைபால் ஈடுபாடு கொண்டு இங்கு வந்து தங்கிவிட்ட ஈழத்தார்கள் யாழ்ப்பாணத்தார் வீதி எனும் தெருவில் குழுமமாக வசித்து வருகின்றனர். காலப் போக்கில் இங்கே மணஞ்செய்து இந்திய மக்களோடு இரண்டறக் கலந்து விட்டனர்.

சீந்தி வலையர்

வேதாரண்யம் காட்டில் சீந்திவலையர் எனப்பெறும் ஆதிவாசிகள் வாழ்கின்றனர். சீந்திக் கிழங்குகளைத் தோண்டித் தின்று வாழ்வதால் இவர்கள் இப்பெயர் பெற்றனராதல் வேண்டும். 35 குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இக்காட்டில் உள்ளனர்.

✸

4. சான்றோர் பலர்யான் வாழும் ஊரே

நோயும் திரையும் மூப்புமின்றியான் வாழ்தற்குக் காரணம் என்னூரில் சான்றோர்கள் பெருகியிருப்பதே என்றார் சங்கப் புலவர். சான்றோர் பலர் ஊராதலின் உண்டாலம்ம இவ்வுலகம் என வியந்தார் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி வேதாரண்யம் நகருக்கு இத்தகு பெருமை நிரம்ப உண்டு. வரலாற்று காலம் தொடங்கி இன்றுவரை வேதாரண்யம் நகரில் வாழ்ந்து சிறந்த சான்றோர் பலராவர்.

பரஞ்சோதிமுனிவர்

திருவிளையாடற் புராணம் இயற்றய பரஞ்சோதி முனிவர் பிறந்தருளிய தலம் இவ்வூரேயாகும். சைவவேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவர் பரம்பரையைச் சார்ந்தவர்கள் திருத்துறைப் பூண்டிக்கு அருகிலுள்ள குறுக்கை முதலிய சிற்றூர்களில் இன்றும் வாழ்கின்றனர். வேதாரண்யத்திற்கு மேற்கே பரஞ்சோதிபுரம் என்ற ஊரும், அவ்வூர் சிவன் கோவிலில் பரஞ்சோதி முனிவர் உருவச்சிலை இருப்பதும், சிவலிங்கம் பரஞ்சோதிலிங்கம் என்று அழைக்கப்பெறுவதும் நோக்கத்தக்கவை. மேலும் 'வேதாரண்ய புராணம்' என்னும் தல புராணத்தையும் இவர் இயற்றியுள்ளமை இக்கருத்தை வலிமை பெறவைக்கிறது. இதைத்தவிர பரஞ்சோதி முனிவர் வேதாரண்யத்தில்தான் பிறந்தார் என்பதற்கு வேறு அகச்சான்றுகள் அகப்படவில்லை. பரஞ்சோதி இயற்றிய 1000

பாடல் கொண்ட திருவிளையாடற் புராணமே இன்று பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. அவருடைய விருத்தப்பாக்கள் இனிமையும் தெளிவும் உடையவனவாக இருத்தலே இதற்குக் காரணம் என டாக்டர் மு.வ. அவர்கள் வரைவர். இவருடைய தந்தையார் பெயர் மீனாட்சி சுந்தர தேதிகர் என்பர். இவரும் நிரம்ப அழகிய தேசிகரும் ஒருங்கு பயின்றதாகக் கூறப் பெறுவதால் இருவரும் ஒரு காலத்தவரேயாவர். பரஞ்சோதிமுனிவர் மதுரை அறுபத்து நான்கு திருவிளையாடற் புராணம் போற்றிக் கலி வெண்பா, மதுரை பதிற்றுப் பத்தந்தாதி என்ற நூல்களையும் இயற்றியுள்ளார். கலைக்களஞ்சியம் இவரை கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும் குறிப்பிடுகிறது.

நிரம்ப அழகியதேசிகர்

இவ்வறிஞரும் வேதாரண்யத்தில் பிறந்தவரே. சைவ சமயம் பரப்ப 16ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பெற்ற மடங்களுள் துழாவூர் மடமுமொன்று. கமலை ஞானப் பிரகாசரி டம் உபதேசம் பெற்று இம்மடத்தில் பிரசித்தம் பெற்ற ஆசிரியராக நிரம்ப அழகிய தேசிகர் விளங்கினார். ஆதலின் பிறந்தகத்தால் வேதாரண்யநிரம்ப அழகிய தேசிகர் என்றும் அழைக்கப் பெறுகிறார். இவர் மதுரையில் தங்கி மாணவர்களுக்கு சைவ சித்தாந்த நூல்களைக் கற்பித்தார் இவர் சேதுபதியால் பாராட்டப் பெற்றவர்.

அழகிய சேது புராணம், திருப்பரங்கிரிப்புராணம், திருவையாற்றுப் புராணம், திருஞானசம்பந்தர் மாலை என்னும் நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 'சேது புராணம்' மிக விரிவாகவும, பெருங்காப்பியத் தன்மை பொருந்தியும் இலக்கியச் செறிவும் கொண்டதாகப் பல்லோரால் விரும்பிப் படிக்கப் பெறுவது, வேணுவன புராணமும் இவர் செய்திருத்தல் வேண்டுமென்பர். இவருடைய பணிகளுள் குறிப்பிடத்தக்கது

சைவ சித்தாந்த சாத்திரங்களான சிவஞான சித்தியாருக்கும். திருவருட்பயனுக்கும் பலர் உரையெழுதியிருந்தாலும் இவர் செய்த அளகைச் சம்பந்த முனிவரும், திருவையாற்றுச் செப்பேச புராணம் செய்த ஞானக்கூத்தரும் இவர்பால் பயின்றவரே இனிய பணிகள் பல செய்த இச்சான்றார் நன்மாணாக்கரையும் உருவாக்கி யுள்ளார் என மகிழலாம்.

தாயுமானவர்

திருமறைக்காட்டில் பிறந்த தாயுமானவர் வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளிலும் வல்லமை பெற்றவர். திருச்சியி லிருந்து ஆட்சிசெய்த விஜயரங்க சொக்கநாதரிடம் அமைச்சராக இருந்து பதவியைத் துறந்து உலகியல் கடந்த ஞான நிலை பெற்றார் இறைவன் அவர் இதயத்தே வீற்றிருத்தலை.

" எத்திக்கும் தானாகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே"

(பராபரக்கண்ணி – 7)

என இனிமையாகச் சொல்வார். சைவ சித்தாந்தம் அத்வைதம் ஆகிய இருநிலைகளிடையே ஒருவகைச் சமரசம் கண்டவர். உபநிடதக் கருத்துக்களையும் மற்ற ஞான நூல்கள் பகரும் அறிவுரைகளையும் எளிய தமிழில் தந்தவர். மக்களிடையே எவ்வகை வேறுபாடும் கருதாமல் அனைவரிடத் தும் அன்பு பூண்ட பெருமனம் படைத்தவர். அவர் இறைவன் பால் வேண்டுவது இதனை நன்கு உணர்த்தும்.

" எவ்வுயிரும் என்னுயிர்போல எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருள் கருணை செய்யாய் பராபரமே"

(பராபரக்கண்ணி 65)

சமயப் போராட்டங்களைக் கடந்து சமரச ஒளிகண்டும் வள்ளலாருடைய சோதிவழிபாட்டிற்கு வழியமைத்தும் வாழ்ந்து காட்டியவர் தாயுமானவர்.

காலம்

கோடிக்கரை ஞானியார் பாடல் ஒன்று தாயுமானவ சுவாமிகள் இரண்டறக் கலந்த நாளைக்கூறும்,

" துகளறு சாலி வருடமா யிரத்தைஞ்
ஞாற்றொடென் பத்துமூன்று தொடரு
மிகு சுப ஜிருதாம் வருடம் தைமாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூரணத் திதியினி
லருந்த மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கரை யதனில் தாயுமானவனார்
சிவத்தினில் கலந்தற்றினமே"

ஆதலின் சகாப்தம் 1583ஆம் ஆண்டு கி.பி 1661 ஆகிறது. எனவே, இப்பாடற் கருத்துப்படி சுவாமிகள் கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனலாம். வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம் பிள்ளை குடும்பத்தார் தம்மை தாயுமானவருடைய பரம்பரை என்று வழிவழியாகச் சொல்லி வருவதோடு – திருத்துறைப்பூண்டி மணற்குடையில் வாழும் ஒரு குடும்பத்தார் தங்களை ஒட்டக்கூத்தர் பரம்பரையென்று நினைவுபடுத்த மாற்றிமாற்றி ஒட்டக்கூத்தர் பெயரைச் சூட்டிக் கொள்வது போல, இவர்களும் பரம்பரைபரம், பரையாக தாயுமானவர் என்னும் பெயரைப் புனைந்து வருகின்றனர். ஆகவே தாயும் ஆகி அருள்சுரந்த இச்சான்றோர் அவதரித்து பெருமைபடுத்தியது வேதாரண்யத்தையே எனலாம்.

ஆத்மபோதவுரை ஷேசாத்திரி

ஆத்மாவைப் பற்றிய அறிவை போதித்தல் ஆத்மபோத மாகும். ஸ்ரீ சுங்கராச்சாரிய சுவாமிகள் ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு ஆத்மபோதம் என்னும் அழகிய நூலை இயற்றியருளி னார். இந்நூல் அறுபத்தெட்டு சமஸ்கிருத சுலோகங்களைக் கொண்டது. சரீரத்திற்குள் வியாபித்திருக்கும் ஜீவாத்மாவம்

எங்கும் கலந்து நிற்கும் பரமாத்மாவும் ஒன்றே என்று கூறும் அத்வைத தத்துவ நூல் இது.

இத்தகு சிறந்த நூலைத் தமிழ் மக்களும் படித்துப் பயன்பெற வேண்டுமென்று தமிழில் உரைநடையாகவும், பாடலாகவும் மொழிபெயர்த்தவர் பலர். அவர்களுள் வேதாரண்யம் சேஷாத்திரியும் ஒருவர். வேதாரண்யம் சேஷாத்திரி எழுதிய 'ஆத்மபோதவுரை' என்னும் நூலை பழஞ்சுவடிகளைப் பாதுகாத்து வைத்திருக்கும் சென்னை தொல்லெழுத்து நூலகத்தார் ஓலைச் சுவடியினின்று பெயர்த்து ஏட்டில் எழுதி வைத்துக்காத்து வருகின்றனர். நூலின் இறுதியில் ''இந்த ஆத்மபோதத்தைத் தமிழிலே எழுதுவித்தார் வேதாரண்யத்திலிருக்கும் சேஷாத்திரி' என்ற குறிப்பு காணப்படுகிறது.

சர்தார் வேதரத்தினம் பிள்ளை

இந்திய விடுதலைப்போரின் இன்றியமையாத திருப்பு முனைக்கு உழைத்தவருள் குறிக்கத்தக்கவர் வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவருடைய தேசபக்தி அளவிடற்கரியது. காந்தியடிகள் பால் பேரன்பு பூண்டு அவருடைய கொள்கைகளை கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலமாகச் செயற்படுத்திக் காட்டினார். திருமறைக்காட்டில் 25-2-1897-ல் பிறந்தார். தந்தையார் அப்பாக்குட்டிப்பிள்ளை. தாயார் தங்கம்மாள். இவர் எட்டாம் வகுப்புவரைதாம் கற்றார். எனினும் தமிழை நன்கு கற்றதோடு ஆங்கிலம், இந்தி, வடமொழி, உருது, தெலுங்கு, மலையாளம், வங்காளம் முதலிய மொழிகளையும் கற்றுத் தெளிந்தார். காந்தியை 1920-ல் வடநாட்டில் கண்டார். உப்புச்சத்தியாகிரகத்தில் இவர் ஈடுபட்டதன் விளைவாக ஆங்கிலேய அரசு இவரைக் கைது செய்ததோடு இவருடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்தது.

இவருடைய சிறந்த பணியை என்றும் மனத்தில் கொள்வதற்காக நெய்வேலி மாவட்ட தொழிலாளிகள் மாநாட்டில் சர்தார் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தனர். தமக்கு வேண்டிய கதர் உடைக்குத்தாமே நூற்றுக்கொள்வதும். திங்கிட்கிழமை தோறும் உண்ணாநோன்பும், மௌனமும் மேற்கொண்டதும் இவருடைய பண்புகளுள் குறிக்கத்தக்கன. இவர் 24.8.1961 அன்று 64–ஆம் வயதில் சென்னையில் இறைவனடிப் பேற்றை அடைந்தார். சான்றோர்கள் நம்காலத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு இவர் சிறந்த சான்றாவார்.

✸

5. கோவில்—கட்டிட அமைப்பு

வேதாரண்யம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. கருவறை கிழக்கே நோக்கியது. கருவறை அதனையொட்டி அர்த்தமண்டபம் மகாமண்டபம், தியாகேசர் மண்டபம் முதலியன உள்ளன. கருவறையைச் சுற்றி திருச்சுற்று மாளிகை உள்ளது. இத்திருச்சுற்றில் கருவறைக்கு நேர் கிழக்காகச் சிறிய கோபுரம் ஒன்று உள்ளது. இக்கோபுரத்தை ஒட்டி நீண்ட தூண் மண்டபம் ஒன்று உள்ளது. பின்னர் இரண்டாம் திருச்சுற்றில் வடக்கே அன்னை ஆலயமும் உள்ளது. இறுதியாகக் கோவிலைச் சுற்றி பெருமதிலும், கிழக்கும், மேற்கும் இரண்டு கோபுரமும் இருக் கின்றன. இவை தவிர பரிவார ஆலயங்களும், தீர்த்தங்களும் பிற மண்டபங்களும் ஆங்காங்கு உள்ளன.

பல்லவர் காலம்

அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் வாழ்ந்த பல்லவர் காலத்தில் இக்கோவில் இருந்திருக்கிறது. வேதாரண்யம் கோவில் தல விருட்சங்களுள் ஒன்றாக புன்னை மரம் உள்ளது. இப்புன்னை மரங்கள் அப்பர் வாழ்ந்த காலத்தில் மறைக்காட்டில் மிகுதியாக இருக்கவே அவற்றைத் தம் பாட்டிடைப் செய்து பாடுவாராயினர்.

" புன்னை ஞாழல் புறணி அருகெலாம்
மன்னி னார்வலங் கொள்மறைக் காடரோ" (5–9–3)

" சுரக்குப் புன்னைகள் சூழ்மறைக் காடரோ"

அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்த காலத்தில் கட்டிடக் கோவிலாக இருந்தது அது கட்டிடமா? மண் கட்டிடமா? என்பதைத் தெளிவாக வரையறுக்க இயலாது.

" **நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே**" (5–10–2)
" **பெரிய வான்கதவம் பிரிவிக்கவே**" (5–10–4)
" **தொலைவி லாக்கதவம் துணை நீக்கமே**" (5–10–5)

என்னும் அப்பருடைய வாக்கால் கதவின் உயரம், திட்பம், முதலியவற்றை அறியலாம். கதவின் உயரத்தைக் கொண்டு கோவில் கட்டிடத்தின் அமைப்பையும் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். மற்றுமொன்று சேக்கிழார் பெரியபுராணக் குறிப்பு. அப்பரும், சுந்தரரும் மறைக்காட்டு மறைக்கதவம் திறந்து அற்புதம் நிகழ்த்தி ஆண்டு இருந்தனர். அதுபோது சமணத்தின்று மன்னனை மீட்க வருகவென்னும் மங்கையர்கரசியார் அழைப்பு சம்பந்தர்க்கு எட்டியது. இருவருமாக மதுரைச் செலவைப் பற்றி மறைக்காட்டு கோபுரத்தில் அமர்ந்து ஆலோ சனை செய்தனர்.

' மற்றவர்க்கு அருள் புரிந்து பிள்ளையாரும் வாகீசமுனிவருடன் கூடச்சென்று பெற்றமுயர்த் தவர்பாதம் பணிந்துபோந்து பெரிய திருக்கோபுரத்திலிருந்து தென்னாடு உற்றசெயல் பாண்டிமா தேவியாரும் உரிமையமையச் சருமுரைத்து விட்டவார்த்தை
சொற்றினிமன் வைருக்குப் புகலிமன்னர்
சொல்லியெழுந்தருளு தற்குத் துணிந்தபோது'(6,5)

ஆதலின் சேக்கிழார் அப்பர் சம்பந்தர் காலத்தில் மறைக் காட்டுக் கோவிலின் கோபுரம் இருந்தது எனக் கருதியிருக்கிறார் என்பது இப்பாட்டால் தெரிய வருகிறது. அவர்கள் காலத்தில்

இருந்ததோ என்னவோ சேக்கிழார் காலத்தில் மறைக்காட்டில் கோபுரம் இருந்திருக்கிறது என்பது மட்டும் வெளிப்படை.

முற்காலச் சோழர் காலம்

விசயாலயன் தொடங்கி முதலாம் இராசராசன்வரை இங்கு முற்காலர் சோழர் காலம் எனக் கொள்ளப் பெறுகிறது. வேதாரண்யக் கல்வெட்டுக்களுள் காலத்தால் முந்தியது முதல் ஆதித்த சோழன் கல்வெட்டுக்களே, இவன் சக்யாத்திரி மலையி லிருந்து கீழைக்கடல் வரையில் காவிரியின் இரு மருங்கிலும் ஏராளமான கற்கோயில் கட்டினான் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன.[1]

மேலும் முற்காலச் சோழர்கள் காலத்தில் பாடல் பெற்றபல கோயில்கள் செங்கல்லால் காலத்தில் பாடல் பெற்றபல கோயில்கள் செங்கல்லால் இருந்து கற்றளிகளாக மாற்றப் பெற்றன என்றும் கருதப்படுவதால்[2] வேதாரண்யம் கோவில் முதலாம் ஆதித்தன் காலத்தில் கற்றளியாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும் என்று கருதலாம். அதாவது கி.பி. 73–ல் இம்மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். திரு. எஸ்.ஆர். பால சுப்பிரமணியம் அவர்களும் தம்முடைய நூலில் மறைக்காட்டுக் கோயிலை "ஆதித்தன் காலக்கோயில்" என்றே கூறியுள்ளார்.[3]

வேதாரண்யம் கோவிலில் ஆதித்தன் காலக் கல்வெட்டுக்கள் உள்ளன. எனவே குடந்தை கீழ்க்கோட்டம் போன்றது அழகிய கோட்டங்களையும், பேரழகு சிற்பங்களையும் கொண்டு விளங்கும் என்று ஆவலோடு சென்றால் ஏமாற்றமே காத்து நிற்கும். ஆதித்தன், பராந்தகன், இராசராசன், ஆகியோர் கல் வெட்டுகள் தூண்களிலும் காணப்பெறுகின்றன. ஆதலின்

இப்போது கோவில் கட்டிட அமைப்பில் அவர்கள் காலப் பகுதியில் சிறிதளவு கூடக்காண முடியாது. ஆதித்தன், பராந்தகன், இராசராசன் முதலியோர் கலைத்தன்மையை இத்தூண்களிற் கண்டு ஆறுதல் கொள்ள வேண்டியதுதான். முற்காலச்சோழர் கல் வெட்டுக்கள் சுவர்களிலும் வெட்டப்பட்டிருந்தன. என்பதற்குச் சான்றாக சண்டிகேசுவரர் கருவறைச் சுவருக்குள் சிதைந்துபோன கல்வெட்டுப் பகுதிகள் சில உள்ளன. இனி வேதாரண்யம் கல்வெட்டு ஒன்று பெரும் புலியூருடையான் ஐயாறனம் பலத்தாடியும், இடையளநாட்டுச் சிறிஞார் கிழவன் களப்பாள தன்னிச்சையும் ஒன்று சேர்த்து புவனி விடங்கர்க்குத் தனியாகக் கருவறை ஒன்றை அமைத்தனர் என்று கூறுகிறது.[4] அக் கருவறைக்கு இராசராச சோழனுடைய வெற்றிப் பெயராகிய 'கேரளாந்தகன்' என்பதைப் பெயராகச் சூட்டி மகிழ்ந்திருக் கின்றனர்.

பிற்காலச் சோழர் காலம்

இன்று எஞ்சியுள்ள கட்டிடப்பகுதிகள் பிற்காலச் சோழர் காலத்தனவே. கட்டிடப் பகுதிகள் யாருடைய காலத்தில் கட்டப் பெற்றன என்பதற்குக் கல்வெட்டுக்களும் வலிமையான சான்றுகளாக நிற்கின்றன. ஆதலின் கல்வெட்டுக்கள் உள்ள இடங்களை முதலில் பகுத்துக் காண்போம். கருவறை தெற்குச் சுவரில் மூன்றாம் குலோத்துங்கனுடைய மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன.

அர்த்த மண்டபத் தெற்கு சுவரில் மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாம் ராஜேந்திரன், மூன்றாம் இராஜராஜன் ஆகியோருடைய 5 கல்வெட்டுக்கள் உள்ளன. அர்த்தமண்டபவடக்குச் சுவரில் முதற்

குலோத்துங்கள், மூன்றாம் குலோத்துங்கள், மூன்றாம் ராஜராஜன் மூன்றாம், ராஜேந்திரன் முதலியோருடைய பதினோறு கல்வெட்டுக்கள் தியாகராசர் கருவரை தெற்குச் சுவரில் மூன்றாம் ராஜேந்திர னுடைய ஒரே கல்வெட்டு மட்டும் உள்ளது. தெற்குப் பிரகாரச் சுவரில் மூன்றாம் ராஜேந்திரன் மூன்றாம் ராஜராஜன் ஆகியவரின் இரு கல்வெட்டுக்கள் உள்ளன. மேற்குப் பிரகாரச்சுவரில் மூன்றாம் ராஜராஜன், மூன்றாம், ராஜேந்திரன் இவ்விருவருடைய மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. வடக்குப் பிரகாரச் சுவரில் மூன்றாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் ராஜேந்திரன் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளைக் கொண்டும், கட்டிட அமைப்பைக் கொண்டும் இனிமேலே செல்வோம்.

கருவறையும், அர்த்தமண்டபமும்

கருவறை அதிட்டானத்திலும் அர்த்த மண்டப அதிட்டானத் திலும் பத்மம், ஜகதிப்படை விருத்தக் குமுதம், கம்பு, கண்டம், யாளிவரி என்பன உள்ளன. இவ்வதிட்டானம் பெறும்பாலும் இராஜேந்திர சோழனுடைய கங்கை கொண்ட சோழீச் சுரத்தை ஒத்துள்ளது. கருவறைச் சுவரில் கோட்டங்களும், தோரணங்களும் இல்லை. அர்த்த மண்டபச்சுவரில் கோட்டங்களும், தோரணங் களும் அழகு குன்றி ஆனால் பிற்காலச் சோழர் பாணியில் காணப் பெறுகின்றன. கொடுங்கைக்கு கீழ் மேலாக பூதவரி, யாளிவரி, கடு முதலியன உள்ளன. கருவறை மேலே உள்ள விமானம் வட்டமான வேசர (Vesara) சிகரத்தை உடையது. விமானம் கலசத்தைத் தவிர முழுமையும் கல்லால் ஆகியது. சிகரத்தின் கீழேயுள்ள கிரீவத்தின் நான்கு திசைகளிலும் சிற்பங்கள் உள்ளன. விமானம் முழுமையும் மேலே சுதையால் பூசப்பட்டுள்ளது.

கிரீவத்தில் இப்போது இருக்கும் சுதைச் சிற்பங்கள் கடைசித் திருப்பணி காலத்தன. விமானத்தின் நான்கு மூலைகளிலும் அமர்ந்துள்ள நந்தி மட்டும் முழுக்கல்லால் ஆயின. இது வரைகூறப்பெற்ற கட்டிட அமைதியைக் கொண்டும், கருவறை அர்த்த மண்டபங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களைக் கொண்டும்பார்க்கும் போது முதற்குலோத்துங்கன் காலக் கட்டிடப் பகுதிகளே இவை என முடிவு செய்யலாம். முற்காலச் சோழர் காலத்துக் கோயில் என்ன காரணத்தினாலோ முதற்குலோத்துங்கன் காலத்தில் முழுமையாக மாற்றிக்கட்டப் பெற்றது. அவ்வாறு மாற்றம் செய்யும் போது முற்காலச் சோழர் காலத் தூண்களை மட்டும் பயன்படுத்திக் கொண்டனர்.

திருச்சுற்று மாளிகை

கருவறையைச் சுற்றிலும் நீண்டசதுர அமைப்பில் திருச்சுற்று மாளிகை உள்ளது. திருச்சுற்று மாளிகையில் கிழக்கே சிறிய சோபுரம் உள்ளது. கிடைத்துள்ள கல்வெட்டுப் பகுதிகளையும், கட்டிட அமைப்பையும் கொண்டு நோக்க இவை இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தன என்றால் பொருந்தும்.

மகாமண்டபம்

விஜய நகர மன்னர்கள் காலத்தில் அர்த்த மண்டபத்திற்கு முன்பாக மகாமண்டபம் எழுப்பப் பெற்றது. மகா மண்டபத்திற்கு எதிரேயுள்ள திருசுற்றுப் பகுதி இவர்கள் காலத்தில் கற்களால் வேயப்பெற்றது. அவற்றில் பன்னிரு ராசிகளும், 27 நட்சத்திரங் களும் பொறிக்கப்பெற்றன. திருச்சுற்று மாளிகையின் வடபுறத் தில் நடவரசர்க்குத் தனிக்கருவரை அமைக்கப் பெற்றது. மகாமண்டபத்தூணிரண்டில் அம்மண்டபத்தை அமைத்த

இவருடைய கற்சிற்பங்கள் உள்ளன. நடராஜர் மண்டப அதிட்டானத்தில் தனியாக சிறிய அளவில் சிற்பங்கள் செதுக்கப் பெற்று பொருத்தப்பட்டுள்ளன. சிறிய கோபுரத்தை ஒட்டி வெளியே உள்ள வாயில் மண்டமும் விஜயநகர் காலத்தைச் சார்ந்ததே. இம்மண்டபத்து தூண்களில் வீரபத்திரர் சிற்பங்கள் சிறிய அளவில் செக்கதுப் பெற்றுள்ளன. தூண்களில் மேற்பகுதி யில் வாயைத் திறந்து உள்ளயாளிகளைக் காணலாம். பிற கட்டிட அமைப்புகள் 19–ம் நூற்றாண்டின.

அடிக்குறிப்பு

1. தமிழக கோயிற் கலைகள் – பக்கம் . 62
2. தமிழக கோயிற் கலைகள் பக்கம் . 59
3. **Early Chola Art Part I Page 183**
4. தெ.இ. க. தொகுதி 17:509.

6. செப்புத் திருமேனிகள்

உலகம் வியக்கும் அழகு வாய்ந்த செப்புத் திருமேனிகள் நிறைந்து காணப்பெறுவது தமிழ் நாட்டிற்றான். நகர்வலம் வருதற்குக் கற்சிற்புங்கள் பயன்படமாட்டா. ஆதலின் வலம் வருதற்கென்றே கோவில்களுக்குச் செப்புத் திருமேனிகள் செய்தளிக்கப் பெற்றன.

தேவாரக் காலம்

பல்லவரும் பாண்டியரும் ஆண்ட காலம் தேவாரக் காலமாகும். அக்காலத்தில் வேதாரண்யம் கோவிலில் செப்புத் திருமேனி இருந்ததா என்பது வினா? சுந்தரர் இராஜசிம்ம பல்லவன் காலத்தில் வாழ்ந்தவர் அவருடைய திருநாவலூர்ப் பதிகப் பாட்டொன்றில் மறைக்காட்டு இறைவன் கோடியக் கரையில் உள்ள மோடியம்மையைப் பூண்பதற்காக யாரும் அறியா வண்ணம் சென்றார் என்னும் குறிப்பு தொக்கி நிற்கிறது.

> " வேதங்கொண் டோடிய வெள்விடை ஏறியோர் மெல்லியலை
> ஆகங் கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை
> ஆளுங் கொண்டார்
> போகங் கொண்டார் கடற்கோடியின் மோடியைப் பூண்பதாக
> நாகங்கொண்டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே" (7-17-3)

இப்பாடற் குறிப்பானும் பல்லவர்கள் காலத்து செப்புத் திரு மேனிகள் இருக்கின்றன என்னும் ஆய்வாளர்களுடைய கருத்

தாலும் மோடியம்மை விழா உற்சவத்திற்கு சென்றது. செப்புத் திருமேனி மூர்த்தியே என்று ஒருவாறு முடிவு செய்யலாம். ஆதலின் தேவாரக் காலத்தில் சந்திர சேகர மூர்த்தி போலும் செப்புத் திருமேனி வேதாரண்யம் கோவிலில் இருந்தது எனலாம். இனி கோவிலில் இன்றுள்ள செப்புத் திருமேனிகளின் அமைதியை நோக்குவோம்.

புவனிவிடங்கரும், தியாகராசரும்

புவனிவிடங்கதேவர் முதல் ஆதித்தசோழனுடைய ஆறாம் ஆட்சியாண்டிலேயே[1] வேதாரண்யம் கோவிலில் இருந்திருக் கிறார். இவ்விடங்கர் என்பவர்தாம் யாவர்? டங்கம் என்றால் உளி. விடங்கர் என்றால் உளியால் செதுக்கப்படாதவர் என்று பொருளாகும்[2] தமிழகத்தில் ஏழு தலங்கள் சப்தவிடங்க தலங்கள் என்று கூறப்பெறுகின்றன.

“ சீரார் திருவாரூர் தென்னானக நள்ளாறு
காரார் மறைக்காடு காறயில் – பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்திதருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்’’

என்று ஒரு பாடலும் உள்ளது.[3] ஒவ்வோர் ஊரிலும் விடங்கர் வேறுவேறு பெயராலும், வேறு வேறு நடனத்தையும் கொண்டு விளங்குகிறார்.

1. திருவாரூர் – வீதிவிடங்கர் – அசபாநடனம்
2. திருநள்ளாறு – நகரவிடங்கள் – உன்மத்த நடனம்
3. திரு நாகைக்காரோணம் – சுந்தரவிடங்கர் வீசிநடனம்
4. திருக் காறயில் – ஆதிவிடங்கர் – குக்குட் நடனம்
5. திருக்கோளிலி – அவனிவிடங்கர் – பிருங்க நடனம்

6. திருவாய் மூர் – நீலவிடங்கர் – கமல நடனம்

7. திருமறைக்காடு – புவனிவடங்கர் – அம்ஸபாத நடனம்

விடங்கர் உள்ள இடங்களிலெல்லாம் நடனம் கூறப்பெறுதுலால் விடங்கர் என்பவரே நடராசர் என்று தோன்றுகிறது. எனினும் மறைக் காட்டி உள்ள விடங்கர் பச்சை ரத்தினத்தாலாகிய லிங்கமாவர். வேதாரண்யம் கோவிலில் சோமல் கந்த மூர்த்தியை தியாகராசர் என்று அழைக்கின்றனர். பச்சை ரத்தினத்தாலாகிய லிங்கமே புவனிவிடங்கர் என்று அழைக்கப் பெறுகிறது. சோமாஸ்கந்த மூர்த்தியும் புவனிவிடங்கரும் ஆதித்தன் கல்வெட்டில் குறிக்கப் பெறுவதாலும் மிகப் பழமை வாய்ந்த சிற்ப அமைதி உள்ளதாலும் இவையிரண்டும் முற்காலச் சோழர்க் காலத் தொடர்க்கத்தைச் சேர்ந்தன என்று கூறலாம்.

நடராசர்

பராந்தக சோழரின் மகன் கண்டராதித்த சோழர் சிறந்த சிவபக்தி பூண்டவர். இவரது தேவியார் செம்பியான்மா தேவியார் என்று புகழ்மிக்க சோழப் பேரரசியாவர். இவர் பல கோவில் களுக்குச் செப்புத் திருமேனிகளும் தங்கக் குடங்களும், வெள்ளிக் கலன்களும் செய்து கொடுத்துள்ளார். தமிழகத்தில் உள்ள செப்புத் திருமேனிகளில் மிகவும் எழிலுடன் தனித் தன்மை வாய்ந்தவை செம்பியன் மாதேவியால் செய்தளித்தவையாகும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுவர்[1] இத்தகு தேவியின் காலத்தைச் சேர்ந்து நடராசரும் சிவகாம சுந்தரியுமாகிய செயுத்திருமேனிகள் என்று திரு. S.R. பாலசுப்பிரமணியம் அவர்கள் வரைந்துள்ளார்.[2]

செவ்வக பீடத்தின் மீது பத்மபீடம் உள்ளது. அப்பத்ம பீடத்தில் முயலகன் கிடக்கின்றான். இறைவன் முயலகன் மீது

வலக்காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி நடம்புரிகிறார். முடியில் கொக்கிறகு அரவ, ஊமத்தம் பூ முதலியான உள்ளன விரிசடைக் கற்றைகள் பக்கத்திற்குப் பதின்மூன்று உள்ளன. பிரபையில் இருபத்து மூன்று தீச்சுடர்கள் இருக்கின்றன. தோளின் இருபுறமும் ஒரு மலரலாகிய வாகுமாலை உள்ளது. நான்கு கைகளில் மேலிரு கைகளுள் வலப்பக்கம் டமரும், இடப்பக்கம் அனலும் உள்ளன. முன்னிரு கைகளுள் வலம் அபயத்திலும் இடப்பக்கம் கஜஹஸ் தத்திலும் உள்ளன. முன் வலக்கையில் அரவு சுற்றியுள்ளது. கைகளில் கடகமும் காப்பும் உள்ளன. யக்ஞோபவீதம் பிரிவு களின்றி விளங்குகிறது. உதரபந்தம் உள்ளது இடுப்பு முதல் தொடைவரை ஆடை அணி செய்கின்றது. கலீர் கலீர் என ஒலிப்பதற்காக மணிகள் கோர்க்கப் பெற்ற சதங்கையணி கால்களில் காணப் பெறுகின்றன. முயலகன் இடக்கையினால் பற்றியுள்ள பாம்பானது நழுவிச் சென்று முயலகனை நோக்கிப் படமெடுத்தவாறு உள்ளது. முயலகன் இடக்காலை பத்மபீடத்தின் மீது மடித்தவாறு ஊன்றி வலக்காலால் உதைத்தவாறாக உள்ளனன். பேரழகு வாய்ந்தது இச்செப்புத் திருமேனி.

சிவகாமி

நடராசரோடு இணைந்து பத்ர பீடத்தின் மேலே பத்மபீடம் உள்ளது. அப்பத்மபீடத்தின் மீது திரிபங்கமாக அன்னை நிற் கின்றார். கரண்ட மகுடமும், மகுடத்திற்குப் பின்புறம் சிரச்சக் கரமும் விளங்குகின்றன. வளர்க்கப்பெற்ற காதுகளில் குண்டலங்கள் இல்லை. ஆனால் செவிப்பூ உள்ளன. மார்பில் ஆரங்கள், யக்ஞோபவீதம் கழுத்துப் பொட்டு முதலியன இருக் கின்றன. வலக்கையில் மலரேந்தும் நிலையும் இடக்கை லோல ஹஸ்தத்திலும் அமைந்துள்ளன. கைகளில் கடகம், காப்பும்,

நடுவிரல் தவிர்த்து பிற விரல்களில் மோதிரமும் அணிவிக்கப் பெற்றுள்ளன. இடுப்பில் தொடங்கி கணுக்காலக்குச் கொஞ்சம் மேலாகக் கூடி இரு கால்களுக்கும் தனித்தனியான ஆடைகள் காலில் சதங்கையுள்ளன.

நீலோத்பவ அம்பாள்

பத்ர பீடத்தின் மீது பத்மபீடம், அப்பீடத்தின் மேல் வலது காலை நேராக ஊன்றி இடக்காலை குஞ்சிதமாக வைத்து நின்றுள்ளார். கரண்ட மகுடமும் மகரிகையும் உள்ளன நெற்றி மாலையும் செவிப்பூவும் இருக்கின்றன. நீண்டு வளர்ந்துள்ள காதுகள் உள்ளன. தோள் பட்டையில் பக்கத்திற்கு மூன்று மலர்கள் விளங்க வாகுமாலை தொங்குகின்றன. கேயூரம், முன்கைகளில் மூன்று வளைகள் அணி செய்கின்றன. இருகைகள் வலக்கரம் கடக ஹஸ்தம், இடக்கரம் லோலஹஸ்தம் ஆடைகணுக்கால் வரையும் தொங்குகிறது. இடைக்கட்டு, குறங்குச் செறி, மணிகள் கோர்க்கப்பெற்ற பாதசரம் முதலியனவும் இருக்கின்றன. பின்புறம், 14 பிரிவாக தொங்கும் தாழ்சடைக் கற்றைகள் உள்ளன. இத்திருமேனி கி.பி.12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

ரிஷபாந்திகர்

ரிஷபாந்திகரை வேதாரண்யத்தில் காட்சி கொடுத்தவர் என்று அழைக்கின்றனர். திரு. C. சிவராம மூர்த்தி அவர்கள் இப் படிமத்தை 13–ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கூறியுள்ளார்கள். இறைவன் பத்மபீடத்தின் மீது இடக்காலை நேராக ஊன்றி, வலக்காலை சற்றே வளைத்து ஊன்றியும் நின்றுள்ளார். ஜடை பின்புறமாக முடியப் பெற்றுள்ளது. நெற்றிமாலை இருக்கிறது. வலதுபக்கக் காதில் மகரகுண்டலமும, இடது பக்கக் காதில் பத்ர

குண்டலமும் விளங்கின்றன. 4 மலர் களுடன் கூடிய வாகுமாலை இரண்டு தோள்களிலும் இருக்கின் றன. இரு ஆரங்கள் மார்பை அழகு செய்கின்றன. வலக்கை ரிஷபத்தின் மீது ஊன்றும் நிலையிலும், இடக்கை கடி ஹஸ்தத் திலும் உள்ளன. மகர பணியுடைய தோள்கட்டு, கடகம் மூன்று காப்பு இருக்கின்றன. நடுவிரல் தவிரமற்ற விரல்கள் யாவற்றிலும் மோதிரம் அணிவிக்க வேண்டும். அம்மோதிரங்கள் விரல்களின் அடிக்கணுவிலேயே அணிவிக்கப்படவேண்டும். என்னும் சிற்ப இலக்கணப் படியே விரல்களில் மோதிரங்கள் அணிவிக்கப் பெற்றுள்ளன. யக்நோபவீதம் பிரம்மசூத்திரத்தின் கீழே இரண்டாகப் பிரிந்து செல்கிறது. உதரபந்தம் உள்ளது. இடுப்பு முதல் தொடைவரை வரையாடை அணிவிக்கப் பெற்றுள்ளது. அடுப்பில் கீர்த்திமுகம் விளங்குகிறது. வலது கெண்டைக்காலில் மணி ஒன்று கட்டப் பெற்றுள்ளது. கால்களில் மணிகள் கோர்க்கப் பெற்ற சதங்கையணி கலீரென ஒலிப்பதற்கெனச் சூட்டப் பெற்றுள்ளன. அழகிய திருமேனிகளுள் இதுவும் ஒன்று.

இடப்புறமாக ஒய்யாரமாக தேவி நிற்கின்றாள் இடக்காலை நேராக ஊன்றி வலக்காலை சிறிது மடித்து நின்றநிலை கரண்ட மகுடமும் விளங்குகின்றன. ஒவ்வொரு பக்கமும் ஐந்து மலர்களுடன் விளங்கும் வாகுமாலை உள்ளன. வலக்கை மலரேந்தும் நிலையிலும் இடக்கை லோல ஹஸ்தத்திலும் காணப் பெறுகின்றன. யக்ஞோபவீதம் இரண்டாக பிரிந்து செல்கிறது. வயிற்றில் த்ரிவல்யம் உள்ளது. இடுப்பிலிருந்து கணுக்கால் வரையில் ஆடையுள்ளது. இடுப்புக் கட்டில் மகரமுகம், குறங்குச் செறி முதலியன உள்ளன. பின்புறம் ரிஷபம் நின்ற நிலையில் உள்ளது. ரிஷபம் நுனி நாக்கால் மூக்கைத் தடவியவாறு உள்ளது.

சண்டிகேசுவரர்

பத்ரபீடத்தின் மீதுள்ள பத்மபீடத்தில் இடக்காலை குஞ்சித மாகவும் வலதுகாலை ஸ்தூதிகமாகவும் வைத்து அஞ்சலி ஹஸ்தத்தில் நின்றுள்ளார். ஜடா மகுடம் உள்ளது. 2 மலர்களுடன் இரண்டு தோள்களிலும் வாகுமாலை விளங்குகிறது. மார்பில் 3 ஆரங்கள் அழகு செய்கின்றன. பட்டையான புரிநூல் உள்ளது. உதரபந்தம் உள்ளது. இடதுபுற வயிற்றையொட்டி பரசு இணைக்கப் பெற்றுள்ளது. கைகளில் மும்மூன்று கடகம், காப்பு முதலிய உள்ளன. தோள்வரை, சொருகப் பெற்றுள்ளது. அரைஞான் தடிப்புடன் காணப்பெறுகிறது. கால்களில் பாதசரங்கள் இருக்கின்றன. இது கி.பி. 13–ம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புத் திருமேனி.

பிக்ஷாடனர்

பத்மபீடத்தின் மேல் வலக்காலை குஞ்சிதமாகவும், இடது காலை நேராகவும் வைத்து நிற்கும் நிலை பாத அணி உள்ளது. விரிந்த வட்டவடிவம் போன்ற ஜடாமகுடம் உள்ளது. நடுவே கபாலமும், வலதுபுறம் அரவும், இடதுபுறம் பிறையும் இருக் கின்றன. வலது காதில் மகரகுண்டலம், இடது காதில் பத்ர குண்டலம் இருக்கின்றன. பக்கத்திற்கு மூன்று மலர்களுடன் விளங்கும் வாகுமாலைகள் உள்ளன. வாகுவலயம் இருக்கிறது. கழுத்தில் அணிகள் பல உள்ளது. முப்புரி நூலில் பிரமம் முடிச்சுக்குக் கீழே இரண்டாகப் பிரிய தாழ்ந்த புரிபட்டையாக விளங்குகிறது. நான்கு கைகள் மேலிருகைடமரு ஹஸ்தம், சிம்ஹகர்ன ஹஸ்தம், கீழிருகை களுள் கபாலம் ஏந்தியுள்ளார். உதரபந்தம் உள்ளது. இடையில் ஆடையில்லை, அரவு ஒன்று படமெடுத்தவாறாக உள்ளது. கெண்டை மணி பாதசரம் முதலியனவும் இருக்கின்றன.

கால்களில் பாதகுறடு அணிந்துள்ளார். இறைவனுக்கு வலப்புறம் முன்னிருகால் களைத் தூக்கி நின்று தளிர்பெறும் நிலையில் மான் இருக்கிறது. வலப்புறம் தட்டைத் தலையில் தாங்கிய நிலையில் இணைந்த மற்றொரு குள்ளப் பூதமும் உள்ளது. இது கி.பி. 14–ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

கல்யாண சுந்தரர்

பத்ம பீடத்தின் மீது உயர்ந்த பாதகுறடு அணிந்து இறைவன் நின்றுள்ளார். ஜடா மகுடமும் சிரஸ் சக்கரமும் இருக்கின்றன. வலது காதில் மகர குண்டலம், இடது புறக்காதில் பத்ரகுண்டலம், மூன்று மலர்களைக் கொண்ட வாகுமாலை ஒவ்வொரு பக்கத்த திலும் உள்ளன. புரிநூல் பிரம்மமுடிச்சுக்குக் கீழே இரண்டாகப் பிரிந்து செல்கிறது. உதரபந்தனம் உள்ளது. மேலிருகைகளுள் வலப்பக்கம் மழுவும் இடப்பக்கம் மானும் இருக்கின்றன. முன்னிரு கைகளுள் இடக்கை வரதமாக, வலக்கை தேவியின் வலது கையைப் பிடிப்பது போலும் பாவத்திலும் உள்ளது. இடுப்பிலிருந்து தொடை வரை ஆடையுள்ளது. ஆடைக்கட்டின் மீது சிம்மமுகம் உள்ளது. வலது கொண்டைக் காலில் வீர கெண்டை மணி தொங்குகிறது. கால்களில் சதங்கை அணிகள் இருக்கின்றன. வலது முன்கை சுட்டு விரல் ஏனோ உடைந்து விட்டது. கிரீடத்தின் வலப்புறம் பாம்பும், இடப்புறம் பிறையும் விளங்குகின்றன.

இறைவனுக்கு வலப்புறமாக பத்மபீடத்தின் மீது தனியாக தேவி நின்றுள்ளார் செவிப்பூக்கள் இரு காதுகளிலும் மகர குண்டலங்கள் உள்ளன. 3 மலர்களுடன் விளங்கும் வாகு மாலை இரு தோள்களிலும் உள்ளன. தேவிக்கு இரு கைகள் இடக்கை கடகஹஸ்தம், வலக்கை இறைவனது வலதுகையோடு இணைதற் குரிய பாவம். மார்பில் கச்சையில்லை, கழுத்தில் தாலியும்

ஒற்றைப் புரிநூல் உள்ளன. இடுப்புமுதல் கணுக்கால் வரை ஆடையுள்ளது. கால்களில் சதங்கையணி உள்ளது. இவை கி.பி.15–ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

அதிகார நந்தி

மேலிருகைகளில் மானும் மழுவும் ஏந்தி முன்னிரு கைகளால் அஞ்சலித்த நிலை ஜடா மகுடம் உள்ளது. பத்ர மண்டலம், இடமும், வலமுமாக விளங்கின்றன. இடுப்பிலிருந்து தொடைவரையிலான அரையாடை அதிகாரநந்திக்கு இடப்புறம் கரண்டமகுடம் கடக ஹஸ்தம், லோலஹஸ்தம் கொண்டு நிற்கும் தேவி தனிப்பீடத்தில் உள்ளார். குறிப்பிடத்தகுந்த இச்செப்புத் திருமேனிகள் தவிர 63 நாயன்மார்களும் பிரதோசமூர்த்தி, பிள்ளையார், பள்ளியறை நாச்சியள் போன்ற படிமங்களும் உள்ளன இவைகள் பிற்காலத்தைச் சேர்ந்தன.

அடிக்குறிப்பு

1. தமிழகக் கோயிற் கலைகள் – பக்கம் – 35
2. South Indian Bronzes Sivaramamurthi - Lalit Kala
3. சிற்பரத்தினம், சரசுவதி மஹால் வெளியீடு

7. சிற்பமும் ஓவியமும்

வேதாரண்யம் கோவிலில் பழமை வாய்ந்த சிற்பங்கள் என ஒன்றிரண்டே உள்ளன. மறைக்காட்டு மணாளர், துவாரபாலகர், சண்டிகேசர் என்பன பழமை வாய்ந்தவை யாழைப் பழித்த மொழியாள் என்று அம்பாள் பெயரை தேவாரப் பாடல்களே குறிக்கின்றன. எனவே பெயரை தேவாரப் பாடல்களே குறிக்கின்றன. எனவே பழமை வாய்ந்த அம்பாள் சிற்பம் முன்னர் இருந்திருக்க வேண்டும். ஆயின் கிடைத்துள்ள கல்வெட்டுக்களுள் ஒன்று கூட அம்பாற் பெயரையும் அவற்றுக்கென்று தனியாகக் கோவில் இருந்த தென்னும் கருத்தையும் குறிப்பிடவில்லை. கல்வெட்டு ஒன்று (194/17) மூலஸ்தானத்தின் தெற்கில் மோஹன தேவர் என்று ஒருவர் வீற்றிருந்ததாகக் குறிப்பிடுகிறது. அதே கல்வெட்டு அவரை தென்றளிமாதேவர் என்றும் அழைக்கிறது. எனவே சோழர் காலத்தில் கோவில் கருவறைக்குத் தெற்கே மோஹன தேவர் என்பார்க்குத் தனி ஆலயம் இருந்தது என உணரலாம். அது இப்போது இராமநாதேஸ்வரர் ஆலயமாக உள்ளது. இராமன் வழிபட்ட லிங்கம் என்று இக்கோவில் கொண்டாரை இன்றைய மக்கள் அழைக்கின்றனர்.

மறைக்காட்டு மணாளர்

இறைவன் அகத்தியர்க்காக மணக்கோலம் இங்கு காட்டியதன் சிறப்பாக கருவறை லிங்கத்தின் பின்னர் மறைக்காட்டு

மணவாளர் கோலத்தைச் சிற்பமாக அமைத்துள்ளனர். அப்பருடைய பதிகம் ஒன்றின் இறுதி அடியாக மறைக்காட்டு 'மணாளன் தானே'[1] என்னும் சொல்லாட்சியைப் பெய்துள்ளார். எனவே அப்பர் காலத்திலும் மணவாளர் சிற்பம் இருந்திருக்க வேண்டும். அடுத்து மறைக்காட்டு மணவாளர் சிற்பம் கல்வெட்டி லும் குறிக்கப்பெற்றுள்ளது. மூன்றாம் ராஜராஜ சோழன் காலத்தில் குலோத்துங்க சோழ பட்டினத்து வியாபாரி நெல்வேலியுடையான் பெரியான் சேல்கலாண்டான் என்பவன் மறைக்காட்டு மணவாள நாயனாரும், நாச்சியாரும் சாத்தியருள்வதற்காகப் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப் பெற்ற கவசங்களைக் கொடுத்தனன்.[2] எனவே இப்போதுள்ள மணவாளர் சிற்பம் மூன்றாம் இராஜராஜனுக்கும் காலத்தால் முந்தியது என்று அதன் பழமையை உணரலாம். மணவாளர்க்கு இப்போது ஆண்டுக் கொரு முறை. சந்தனக்காப்பு சாத்தி என்றும் அப்படியே வைத்திருப்பதால் அவர்க்கு அணிவிக்க வேண்டியே தேவை யில்லை. எனவே சோழர் காலத்தில் மணவாளர்க்கு சந்தனக் காப்பிடும் வழக்கம் இல்லை எனலாம். அங்கிகளையே சாத்தி வழிபட்டனர் என்றும் அறிதல் வேண்டும். சந்தனக் காப்பு சாத்தப் பெறுவதால் மணவாளர்க்குரிய மாரங்கி, கிரீடம், அபயவரதக் கைகள், கர்ணபத்திரம், விபூதிப்பட்டம் முதலியனவும், அம்மைக் குரிய மாரங்கி, நெற்றிப்பட்டம், பொட்டு, கிரீடம், அபயவரதக் கைகள் முதலியனவும் பயன்பாடு இன்றியே கோவிலில் உள்ளன.

மணவாளரின் இடக்கையும், அம்மையின் வலக்கையும் கல்யாண சுந்தரரில் இருப்பதுபோல கோர்த்த பாவனையில் ஆயின் விரல்கள் இணையாது தனித்தே உள்ளன. ஆனால் கல்யாண சுந்தரரைப் போல நின்ற கோலம் இல்லை. அமர்ந்த நிலையாகும். இடையில் ஸ்கந்தர் இல்லை. இறைவன் வலக்கை அபயத்திலும், அம்மையின் இடக்கை வரத முத்திரையிலும் உள்ளன. கருவறை சுவரோடு இணைந்த சிற்பம் இல்லை

சுவருக்கு சிறிது தள்ளி ஆனால் லிங்கத்திற்குப் பின்னாக தனித்த மேடையில் செய்து வைக்கப் பெற்றுள்ளார்.

துவார பாலகர் இருவர்

கருவறை வாசலில் இரு துவாரபாலகருடைய கற்சிற்பங்கள் எஞ்சியுள்ளன. இருவருக்குமே கரண்ட மகுடம் உள்ளன. இருவரும் பத்ரகுண்டலமே அணிந்துள்ளனர். இடக்காலை சுற்றி வளைத்து ஊன்றியும், வலக்காலை பரசுமேல் வைத்தும் நின்ற நிலை. கைக்கடகம், உதரபந்தம், மேலாடை இன்றி இடுப்பில் சிறிய ஆடை முதலியன உள்ளன. கழுத்து அணிகளும் பூப்போன்ற பூணூலும் இருக்கின்றன. இருவருக்கும் இரு கைகளே உள்ளன. வலப்பக்கம் உள்ள துவாரபாலகரின் வலக்கை தர்ஜனி ஹஸ்தத்திலும், இடக்கைப்பகுதி தரையில் ஊன்றி பரசின் மேலும் இருக்கின்றன. இடப்பக்கம் உள்ள துவாரபாலகரின் வலக்கைப் பகுதி தண்டு மேலும் இடக்கை விஸ்மய (வியப்பு) ஹஸ்தத்திலும் இருக்கின்றன. இவை கி.பி. 13–ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களாகும்.

சண்டிகேசுரர்

பத்ரபீடத்தின் மீது இடக்காலை மடித்து வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். ஜடாபாரம் தலையை அலங்கரிக் கிறது. இருகாதுகளிலும் தோடுகள், மார்பில் பட்டையான அணி உள்ளன. வலக்கை மழு ஏந்தி இடக்கை தொடைமீது ஊன்றிய நிலை பட்டையான யக்ஞோபவீதம் உள்ளது. சிற்பம் சிதைந்த வாறு பாதுகாப்பற்ற நிலையால் கோவிலின் ஒரு மூலையில் கிடக்கின்றது. கோவில் விமானம் முதற்குலோத்துங்கன் காலத்தது என்றாலும் நான்கு மூலையிலும் உள்ள நந்தி தவிர பிற விமானச் சிற்பங்கள் அனைத்தும் பிற்காலத்தில் செய்து வைக்கப் பெற்ற சுதைச் சிற்பங்களே விமானத்தின் கிரீவப்பகுதியில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே யோகநரசிம்மர், வடக்கே பிரம்மா,

கிழகே யானை மேல் இந்திரன் முதலியோரது சுதைச் சிற்பங்கள் இருக்கின்றன. கொடுங்கையின் கீழ் மேல் உள்ள பூதவரி, யாளிவரிச் சிற்பங்கள் சோழர் காலத்தைச் சேர்ந்த பேரழகு வாய்ந்தவை. விஜய நகர காலத்துச் சிற்பங்கள் சில உள்ளன. அவை பெரும்பாலும் தூண், சுவர் முதலிய பகுதிகளில் புடைப்புச் சிற்பங்களாகவே உள்ளன. பன்னிருராசி, 27 நட்சத்திரம், வாட்பயிற்சி பெறும் மறவர், மத்தளம் வாசிக்கும் கலைஞன், வீரபத்திரர் முதலியன விஜய நகர சிற்பங்களுள் குறிப்பிடத் தகுந்தன விஜய நகரச் சிற்பங்கள் அனைத்தும் மிகச் சிறிய சிற்பங்களாய் உள்ளன.

ஓவியம்

வேதாரண்யம் கோவில் கருவறை வெளிச்சுவரில் கோஷ்டங்கள் இல்லை. ஓவியம் வரையவேண்டுமென்று கருதி கோஷ்டங்களை அமைக்காது விட்டனர் போலும். இப்போது கருவரைச் சுவரில் உள்ள ஓவியங்கள் அனைத்தும் தஞ்சையை ஆண்ட நாயக்கர் காலத்தைச் சேர்ந்தன என்றாலும் சோழர் காலத்தில் ஓவியங்கள் இருந்திருக்க வேண்டும் என்று கருதுமாறு ஓவியச்சிதைவுகள் ஓவியங்களுக்கு உள்ளே காணப் பெறுகின்றன. மேலும் சோழர் காலத்தில் பயன்படுத்தப்பெற்ற பஞ்சமுக வாத்தியம் நடராசர் ஓவியத்தில் உள்ளது. எனவே அக்கால ஓவியங்களுக்கு மேலே தஞ்சை நாயக்க அரசர்கள் காலத்தில் வண்ணங்கள் தீட்டப் பெற்றிருக்க வேண்டுமென்று கருதஇடமுள்ளது. கோஷ்டங்கள் இருந்தால் எவ்வாறு இருக்குமோ அதைப்போலவே கருவறையின் தெற்குச் சுவரில் தட்சிணாமூர்த்தி, மேற்கே விஷ்ணு, வடக்கே பிரம்மா என்று ஓவியங்கள் உள்ளன.

நடராசர்

ஓவியத்தில் காளிதாண்டவம் என்று எழுதப்பெற்றுள்ளது நடராசரின் வீரசடையில் இடப்புறம் பிறையும் வலப்புறம், கூப்பிய கரங்களுடன் கங்கையும் உள்ளன. வலக்காதில் மகர குண்டலமும், இடக்காதில் பத்தரகுண்டலம் தோள் மலர் உள்ளது. காலில் இறைவன் சிலம்பு அணிந்துள்ளார். கீழே முயலகன் படுத்து, நிமிர்ந்து வலது பக்க சுண்டுவிரலை சூசி ஹஸ்தமாக வைத்துள்ளான். இடப்புறம் அம்மை கடக ஹல்தம், லோல ஹஸ்தம் கொண்டு நின்றுள்ளார் வயிற்று அணியில் பிரபை யுள்ளது. அம்மையின் மகுடம் கிரிட மகுடமாகும். இறைவனுக்கு வலப்புறம் பஞ்சமுக வாத்தியம் வாசிப்பவராக நந்தி தேவர் உள்ளார். அவருடைய நான்கு கைகளுள் முன்னிருகை வாத்தியத்தை வாசிக்க, பின்னிருகை விஸ்மய ஹஸ்தத்தில் உள்ளன.

திரிபுராந்தகர்

வலப்புறம் மகரகுண்டலம், இடப்புறம் பத்ர குண்டலம் முழங்கை வரை வாகுமாலை உள்ளன. இறைவனின் நிற்றல் வடிவத்தை திரிபங்கம் எனல் வேண்டும். இடுப்பிலிருந்து முழங்கால் வரை அரையாடை மேலிருகைகளுள் வலம் மழுவும், இடம் மானும் உள்ளன. முன்னிருகையில் வலம் அம்பும், இடக்கை வில்லையும் கொண்டுள்ளன.

கஜசம்ஹாரமூர்த்தி

இறைவனின் இடக்கால் வலப்பக்கம் திரும்பிய தும்பிக் கையுடன் யானையின் தலைமேல் உள்ளது. வலக்கால் தூக்கிய நிலை ஜடாபாரத்தின் இடப்புறம் பிறைஉள்ளது. தலையில் கங்கை உள்ளாள் இருப்புற காதிலும் பத்ர குண்டலமே உள்ளன.

இறைவனுக்கு நெற்றிக்கண் உள்ளது. இறைவனுக்கு எட்டுக் கைகள், மேலிருகைகள் யானையின் தோலை உரிக்கின்றன. கீழிருகை தாடன முத்திரையில் இருக்கின்றன. இடையில் உள்ள கைகளில் குறுவாள் கேடகம் போன்ற ஆயுதங்கள் விளங்கு கின்றன. யானையின் வாலும், பின்கால்கள் இரண்டும் மேலே காட்டப் பெற்றுள்ளன. இறைவனுக்கு இடப்புறமாக அம்மை அச்சத்தோடு கந்தனைத் தூக்கியவாராய் நோக்குகிறாள். பராசக்தி என்று அம்மையின் அருகே எழுதப்பட்டுள்ளது. நான்முகன், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, காமதேவன் மூர்த்தி ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை.

குறிப்பிடத்தக்க இவை தவிர சப்த கன்னிகள் சிற்பமும், கௌரிபிரசாத் மூர்த்தி, பிக்ஷாடனர், காலசம்ஹார மூர்த்தி, வீரபத்திரர், ரிஷபவாகனர் 63 நாயன் வரலாறு முதலிய ஓவியங் களும் உள்ளன.

அடிக்குறிப்புகள்

1. ஆறாம் திருமுறையில் உள்ள திருமறைக் காட்டுப் பதிகம்.
2. தெ.இ.க. தொகுதி 17: 455.

8. திருவிழாக்கள்

இறைவனின் பெருமையை உலகோர் உணர்ந்து கொள்ளவும், இறைவனுடைய அழகுமிக்க வீதிவலத்தைக் கண்டு உள்ளத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஊர் மக்கள் வேற்றுமை மறந்து ஒன்று சேர்வதற்குமாக ஆன்றோர்களால் திருவிழாக்கள் கோவில்களில் ஏற்படுத்தப் பெற்றன. திருவிழாக்கள் பெரும் பாலும் இறைவன் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடலை அடிப் படையாக கொண்டவை எனலாம். சில திருவிழா நிகழ்ச்சி மூலமாக வரலாற்றைக் கூட அறிந்து கொள்ள முடியும். சில திருவிழாக்கள் அருகில் உள்ள ஊர் மக்களோடு தொடர்பு கொள்வதற்கும் உதவு கின்றன. இன்னும் சில திருவிழாக்கள் நாட்டு மக்களையே ஓரிடத் தில் சேர்க்கும் வண்ணம் பெருமை பெற்று விடுகின்றன. ஆதலின் வேதாரண்யம் கோவிலில் நடைபெறும் திருவிழாக்கள் வரைப் படுத்திக் காண வேண்டுவது இன்றியமையாததாகிறது. சித்திரை யில் தொடங்கி பங்குனி வரையுள்ள விழாக்கள் நிரலாக சொல்லப் பெறும்.

வருடப் பிறப்பன்று வருடம் பிறக்கும் நேரத்தில் தியாக கேசர்க்கு (சோமாஸ் கந்தர்) அபிஷேகம் நடைபெறும். தியாகேசர்க்கு நடைபெறும் விசேட அபிஷேகங்களில் இதுவும் ஒன்றாகும்.

பரணி நட்சத்திர நாள்

பிட்சாடனர் வீதிவலம் வருவார். இவ்வுலா காலை சந்தியில் நடத்தப்பெறும் இந்நட்சத்திரநாள் சிறுத்தொண்டர்பால் இறை பிள்ளைக்கறியமுது கேட்ட நாளாகும்.

மணக்கோலக் காட்சி விழா சித்திரையில் நிகழும் விழாவாகும் உலகையேகாக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்குக் கயிலையில் திருமணம் நிகழ்ந்தது. இறைவனை மணக்கோலத்தில் கண்டு தரிசிக்க உலகமே அம்மலைக்குச் சென்றது. அவர் திருமணத் தின் போது அம்மையப்பனின் அழகிய மணக்கோலத்தைக் காண இயலவில்லையே என தெற்கே ஒரு உள்ளம் ஏங்கிகிடந்தது. அகத்தியான் பள்ளியில் இறைவனை லிங்கமாக வடித்து வழிபட்டுக் கண்ணீர் கசிந்தது அவ்வுள்ளம். கல்லுக்குள் தேரைக்கும் உணவு படைத்தவராயிற்றே அவ்வுள்ளத்தின் ஏக்கத்தை நீட்ட விடுவாரா? அம்மையோடு கணங்கள் புடைசூழ மணக்கோலத்திலே அப்பன் வேதாரண்யத்தில் அகத்தியருக்கு காட்சிக் கொடுத்தான். சித்திரை மாதம் அமாவாசை கழித்த சப்தமி திதியன்று இந்நிகழ்ச்சி நடந்தது என்று புராணங்கள் கூறும் ஆதலின் இந்நாளில் வேதாரண்யம் கோவிலில் இன்றும் இந்நிகழ்ச்சியை நினைவூட்டும் வண்ணம் விழா நிகழ்த்தப் பெறுகிறது. கருவறையில் சுவாமிக்குப் பின் புறமாக மணக் கோலச் சிற்பம் உள்ளது. இச்சிற்பத்திற்கு முதல் நாளில் அபிஷேகம் நடைபெறும். அன்றுதான் அச்சிற்பத்தினுடைய பண்டைய அழகையும் கண்டு ரசிக்க இயலும். அபிஷேகத்தின் பின்னர் சிற்பத்தின் மேலே கெட்டியாகச் சந்தனப் பூச்சைப பூசி விடுவர். மணக்கோலத்தில் இருப்பவர்கள் எப்போதும் மணத்தோடு இருக்க வேண்டும் என்று கருதி இவ்வாறு செய்யப்

பெறுகிறது. இந்நாளில் பூசப் பெறும் சந்தனப்பூச்சு அடுத்த ஆண்டு இதே நாளில்தான் அபிஷேகத்திற்காக களையப் பெறும். இத்தகைய அபிஷேகம் முடிந்த மறுநாள் உச்சிக்காலத்தில் அகத்தியன் பள்ளிக்கோவிலிலிருந்து அகத்தியர் (செப்புத்திரு மேனி) வேதாரண்யம் கோவிற்கு வந்து வன்னி மரத்தடியில் மர்ந்து பின் உள்ளே சென்று உள் பிரகாரம் உண்டியல் அருகே நின்று மணக்கோலம் காட்சிபெறுவர். இவ்விழா புராணக்கதையை நினைவு படுத்துவதோடு மட்டும் நின்று விடவில்லை. இவ்விழாவால் இரண்டு கோவில்கள் இணைகின்றன. கோவிலில் பணியாற்றும் குருக்கள், தொண்டர்கள் இணைகின்றன. கோவிலில் பணியாற்றும் குருக்கள், தொண்டர்கள் இணை கின்றனர் கோவிலைச் சார்ந்த இரு ஊர்ச் சமுதாயமும் இணை கின்றன. ஆதலின் இவ்விழாவைச் சமுதாய இணைப்பு விழா என்று கூடச் சொல்லலாம்.

சமய விழாவும் சித்திரையில் நிகழும் விழாவாகும். நெஞ்சம் நெகிழ்ந்து உடல் தளர்ந்த காலத்திலும் உழவாரப் பணி புரிந்த திருநாவுக்கரசர், இறைமையோடு இரண்டறக்கலந்தது சித்திரை சதய சித்திரத்திலாகும். அப்பெருமான் நினைவாக அதே காட்சியை நினைவூட்டுமாறு உற்சவம் நடத்தப் பெறுகிறது. அப்பர் (இவ்வாறு வரும் இடங்களில் எல்லாம் உற்சவர் செப்புத் திருமேனிகள் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.) காலையில் புறப்பட்டு சேதுபதி மண்டபத்தில் அமர்ந்து கொள்வார். உச்சிக் காலத்தில் மூலவர்க்கு அபிஷேக ஆராதனை நடக்கும். உற்சவர் இரண்டாம் காலத்தில் பிரகாரம் சுற்றி சுவாமி சந்நதியை அடைவார். அங்கு ஓதுவாரால் கயிலாயப் பதிகம் பாடப் பெறும் (திருப்புகலூர்ப் பதிகம்)

பின்னர் அர்த்த ஜாம தரிசனத்தில் அப்பர் முக்தியடைதல் நிகழ்ச்சி நடைபெறும். அஃதாவது அர்த்த மண்டபத்தில் அப்பரை வைத்துப் பூட்டிவிடுவர். இவ்விழாவில் மற்றுமொரு சிறப்பு குறிக்கத்தக்கது. மற்ற பெரியார்கள் முக்தியடையும் விழாக்கள் நிகழ்த்தப் பெறும்போது மூர்த்தங்களை உள்பிரகாரம் உண்டியல் அருகே வைத்துப் பின்னர் எடுத்து வந்து விடுவர். ஆனால் அப்பர் ஒருவரை மட்டும் ஐக்கியம் அடையும் நாளில் இறைவன் அருகிலேயே இருக்குமாறு வைத்துக் கதவைப் பூட்டி விடு கின்றனர். இதிலிருந்து அப்பருடைய பெருமையையும், வேதாரண்யம் மக்கள் அவர்க்குத் தரும் மதிப்பையும் அறிந்து கொள்ளலாம். சதயவிழா ஆதித்த சோழன் காலத்திலும் திருமறைக் காட்டில் நிகழ்ந்திருக்கிறது என்று ஒரு கல்வெட்டு வழி அறிந்து கொள்ளலாம். சதய விழா ஆதித்த சோழன் காலத்திலும் திருமறைக்காட்டில் நிகழ்ந்திருக்கிறது என்று ஒரு கல்வெட்டு வழி அறிந்து பெருமிதம் கொள்ளலாம். மூன்றாம் இராஜராஜன் காலத்தில் சித்திரைத் திங்களில் வசந்த விழாவும் இவ்வூரில் நடை பெற்றிருக்கிறது.

வைகாசி வசந்தவிழா பத்துநாள் நடைபெறும் கல்யாண சுந்தரர் 10 நாளும் மாலை ஒரு வேளை மட்டும் பிரகாரம் புறப்பாடு கொள்வார். 10ம் நாள் தீர்த்த உற்சவத்தன்று வன்னியடி மண்டபத் தடியில் துர்வாச மகரிஷியால் நந்திக்கு ஏற்பட்ட மீன் சாபத்தை (திருவிளையாடற் புராணக் கருத்து) இறைவன் நீக்கி வைப்பார். இந்நிகழ்ச்சியை நினைவூட்டுதற்காக இதற்கென்றே அமைக்கப் பெற்றுள்ள வன்னி மரத்தடித் தொட்டியில் உயிருள்ள மீனைப் போட்டு தீபாராதனை நடத்துவர். இறைவன் அம்மீனைக் கையிலே பிடித்து மீன் வடிவத்திலிருந்து நந்தியை மீட்பது

போலும் நடித்துக்காட்டப் பெறும். இத்தகு ஐதீக நிகழ்சிகள் காண்பார் தம் நெஞ்சுக்கு இதம் தரும் என்பதில் ஐயமும் வேண்டுமா? நந்தியின் பாவம் தீர்ப்பார் நம் பாவமும் தீர்த்து வைப்பார் எனும் நம்பிக்கை எழுதற்காக இத்தகு விழாக்கள் நடத்தப்பெறுகின்றன எனலாம்.

வைகாசி மூல நட்சத்திரத்தில் உமைப்பாலுண்ட சம்பந்தப் பிள்ளையார்க்கு ஆச்சாள் புரம் என்னும் இடத்தை திருமணமும் இறைவனோடு ஐக்கியமும் நிகழ்ந்தன என்பர். சம்பந்தர் காலைச் சந்தியில் புறப்பட்டு கோயிற்குக் கிழக்கேயுள்ள சம்பந்தர் ஆலயத்திற்கு செல்வார். அங்கு அவர்க்குத் தோத்திர பூரணியோடு திருமணம் நிகழும். பின்னர் கோவிற்குத் திரும்ப, உச்சிக்காலத்தில் சம்பந்தர் இறைவனோடு ஐக்கியமாதல் நிகழும் உண்டியல் அருகே உற்சவமூர்த்தங்களை வைத்து தீபாராதனை காட்டி – மூர்த்தங்களை எடுத்து வந்துவிடுவர். ஐக்கியத்தின் போது தேசிகர் (ஓதுவார்) பாடல்கள்பாடுவார்.

மாணிக்கவாசகர் ஆனி ஆனி மாதத்தில் முத்தி பெற்றார். அந்நாளில் காலைசந்தியில் நடராசருக்கும், மாணிக்கவாசகருக் கும் தீபாராதனை நடைபெறும். நடராசருக்கு எதிரேயுள்ள மண்டபத்தில் மாணிக்கவாசகரை வைத்து முக்தி விழாவை நிறைவு செய்வர். மற்ற பெரியார்களை முக்தி நாளில் மூலவர்க்கு எதிரெவைப்பர். ஆனால் மாணிக்க வாசகர் தில்லையில் நடராசரோடு ஐக்கியமாயினராதலின் இவரை மட்டும் நடராசர்க்கு எதிரே வைக்கின்றனர்.

ஆனி உத்திரம் விழா நடராசர் உற்சவமாகும். முதல்நாள் இரவு நடராசர் சிவகாமி இருவர்க்கும் அபிஷேகமும்,

அலங்காரமும் நடைபெறும். மறுநாள் (உத்திரநாள்) காலை மண்டபத்தில் வைத்து வழிபாடு நடத்தி பட்டறைமேல் வைத்து நான்கு வீதியிலும் ஊர்வலம் வருவர். பட்டறை என்பது உற்சவ மூர்த்தங்களை வைத்துச் செல்லுதற்கு ஏற்ற வண்டியாகும். தேரோடும் தெருவில் ஊர்வலம் வரும்போது ஈசானமூலையில் வந்தவுடன் சிவகாமி அம்மையார் ஈசனின் தலையில் உள்ள கங்கைப் பெண்ணாளைக் கண்டு விடுகிறாள். எனவே கோபங் கொண்டு இறைவனையும் விடுத்து அவர்க்கு முன்னரே கோவிலுக்குள் வந்து விடுவார். அவருடைய முகத்தில் என்று மில்லாமல் ஒருவகை சினத்தை (வாடலை) அன்று காணலாம். பின்னே வந்த இறைவன் வன்னி மரத்தடி மண்டபத்தில் எழுந்தருளிருப்பார். இவர்கள் ஊடலைத் தவிர்த்து இணைக்க வேண்டுமே? அம்மையும், அப்பனும் சேர்ந்தது தானே உலகம்? அவர்களை இணைக்க சுந்தரர் தூது செல்வதாக அக்கோயில் குருக்கள் ஏற்பாடு செய்துள்ளனர். எவ்வடியார்க்காக இறைவன் தூது நடந்தாரோ அவரே இறைவனுக்காக தூது செல்வது தானே சாலப் பொருத்தம். எனவே சுந்தரர் இருவர் பாலும் தூது சென்று ஊடலை தனிவிப்பார். அதுபோது ஓதுவார் தேவாரத்தில் உள்ள சில தூதுப் பாடல்களை இருவரிடமும் பாடுவார். ஊடல் தனிந்த அம்மை வெட்கத்தோடு சென்று இறைவனோடு கலப்பார். இந்நிகழ்ச்சியில் பாடுதற்காகவே 'வேதாரண்யஸ்வரர்தூது' என்னும் ஏடு முன்னம் இருந்ததாகக் கூறப்பெறுகிறது.

ஆடிப்பூரஉற்சவம் அம்பாள் உற்சவமாகும். ஆடி புரத்திற்கு பத்து நாட்களுக்கு முன்பு துவஜாரோகனம் செய்வர். குருக்கள் அவர்கள் ரட்சாபந்தனக் காப்பைக் கட்டி கோவிற்குள்ளேயே இருந்தும், விரதம் இருந்தும் கொடியை ஏற்றி வைப்பர். கொடி

ஏற்றிய நாளிலிருந்து ஊரார் ஊரைவிட்டு வெளியே செல்லுதல் கூடாது. அதனைக் கொடித்தடை என்பர். கொடித்துணியில் ரிஷபம் போட்டிருக்கும். கொடிக் கம்ப உச்சியில் தர்ப்பைப்புல் செருகியிருப்பர் இவ்வாறு கொடியேற்றம் செய்த நாளிலிருந்து அம்பாள் கணபதியோடு காலை மாலை இருவேளையும் வீதி புறப்பாடு கொள்வார் காலை புறப்பாடு கேட்கத்திலும் மாலை புறப்பாடு காமதேனு, அன்ன வாகனம், இந்திரவிமானம், பூதவாகனம், சிம்மம், யானை, ரிஷபம் (வெள்ளியால் செய்யப் பெற்றது) கைலாச வாகனம் முதலிய வாகனங்களில் ஒவ்வொரு நாளும், 9ஆம் நாள் ரதத்திலும் 10ஆம் நாள் புஷ்ப பல்லக்கிலும் வலம் வருவார் அந்தணர் சமுதாயத்தினர் மட்டும் ஆடிபூரத்தன்று இரண்டாங்காலத்தில் கன்னியை முன்னிறுத்தி தோஷம் கழிப்பர்.

சுந்தரர் ஐக்கிய உற்சவம், ஆடி சுவாதி நட்சத்திரத்தன்று வெள்ளைக் குதிரையில் சேரமானும், வெள்ளையானையில் சுந்தரரும் இரண்டாங் காலத்தில் பிரகாரம் சுற்றி வந்து பின்னர் இறையோடு கலப்பார். இவ்விழாவின்போது கயிலாயப் பதிகம் பாடப் பெறும். ஆடி மாதப் பிறப்பன்று மறுமுறையாக தியா கேசர்க்கு அபிஷேகம் நடைபெறும்.

ஆவணி வீரஹத்தி விநாயகர் உற்சவம் : இராமனைப் பிடித்திருந்த ஹத்தியை நீக்கிய விநாயகர் வீரஹத்தி விநாயகர் ஆவர். விநாயகருடைய படிமத்தின் இடக்கால் ஹத்தியை உதைக்கும் பாவத்தில் இருக்கிறது. இவ்வுற்சவம் அமாவாசை கழித்த சதுர்த்தியில் நிகழும். பத்து நாட்களுக்கு முன்பு கொடியேற்றம் செய்து அன்றுமுதல் மூன்று நாட்களுக்கு காலை மாலை இரு வேளையிலும் விநாயகர் கேடகத்தில் புறப்படுவர். நான்காவது நாளிலிருந்து முறையே மூசிகவாகனம் பூத வாகனம்,

யானைவாகனம், சின்ன ரிஷபம் (வெள்ளியாலாகியது), சிம்ம வாகனம் முதலியவற்றிலும் 9, 10ஆம் நாள் கேடகத்திலும் வீதி புறப்பாடு நிகழும்.

ஆவண மூலத்தில் புட்டுத் திருவிழா கல்யாண சுந்தரர் உச்சிக் காலத்தில் புறப்பட்டு கிழக்குக் கோபுர வாசலுக்கு எதிரேயுள்ள தேரடிக்குச் செல்வார். மண் திட்டினை மண்வெட்டி யால் வெட்டி தட்டில் வைத்து தீபாராதனை நடத்துவர். மாணிக்க வாசகரும், சுந்தரரும் உடன் வருவர். இவ்விழாவில் மாணிக்கவாசகர் மூர்த்திம் கலந்து கொள்வது ஏற்புடையதே ஆனால் சுந்தரர் மூர்த்தத்தையும் உடன் கொண்டு செல்லுதல் ஏனென்று புலப்படவில்லை.

புரட்டாசி தேவேந்திர ஆராதனை புரட்டாசி பௌர்ணமி திதியன்று தியாகேசர்க்குத் தேவேந்திரனால் பூசிக்கப்பெற்ற தேவேந்திர ஆராதனை நிகழும். இது சாயரட் சையில் நடக்கும். உற்சவம் இல்லை. நவராத்திரி விழாவில் அம்பாளுக்கு ஒன்பது நாளும் சாயரட்சையில் அபிஷேக ஆராதனையும், அம்பாள் உற்சவருக்கு கொலு அலங்காரமும், இரண்டாங் காலத்தில் விஷேச தீபாராதனையும் நடைபெறும். ஒவ்வொரு நாளும் கண்ணன், கப்பல் வியாபாரி முதலிய அலங்காரங்களில் இறைவியை அலங்கரிப்பர். இவ்வலங்காரக் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். விஜய தசமி பத்தாம் நாள் மாலை நான்கு மணிக்கு சுந்தரர் குதிரையில் புறப்பட்டு தோப்புத்துரை (ஓர் கிலோ மீட்டர் தொலைவு) சூரப் பெருமாள் மண்டபத்தில் வன்னியா சூரனைச் சம்ஹாரம் செய்வர். வாழைக் கன்று அருகில் வன்னிக்கிளை நடப்பெற்றிருக்கும். சுவாமியிடம் குருக்கள் அதிகாரம் பெற்று பட்டாக்கத்தியால் வாழையை வெட்டி

வன்னியாசுரன் சம்ஹார நாடகமாகும். இவ்விழாவில் அம்பாளுக் காக சுந்தரர் சென்றார் என்பதை அறிதல் வேண்டும், இந்நாளில் 'அம்புபோடலும்' நிகழும்.

ஐப்பசி மாதப் பிறப்பன்று தியாகேசர்க்கு மீண்டும் விஷேச அபிஷேகம் நடைபெறும். ஐப்பசி ஏகதினத்து உச்சிக் காலத்தில் மூலவர்க்கு அன்ன அபிஷேகம் நிகழும் ஐப்பசி பரணி நட்சத்திர நாளில் பிட்சாடனர் வீதி புறப்பாடு நடைபெறும். பிச்சை எடுத்தல் அதுபோது நிகழும் ஊர் மக்கள் பிச்சையிடுவர். சூரசம்ஹார விழா அமாவாசை கழித்து சஷ்டி வரை 8நாள் விழா இருவேளையும் முருகன் வள்ளிதெய்வயானையோடு வீதி வலம் வருவார். ஆறாம் நாள் சூர சம்ஹார விழா நிகழும், மேலை வீதியில் சுரன் உடலில் கஜமுகாசுரன் சிங்கமுகாசுரன், தாரகாசுரன், ஆகியோர் தலைகளை ஒவ்வொன்றாக வைத்து இறைவன் தலைகளைக் கொல்வது போல ஒவ்வோன்றாக எடுத்து நடித்துக் காட்டுவர்.

ஐப்பசி மாதப் பிறப்பன்று தியாகேசர்க்கு நடைபெறும் அபிஷேக விழா ஆதித்த சோழன் காலத்திலேயே நிகழ்ந் திருக்கிறது.[1] இராஜராஜ சோழன் ஐப்பசித்திங்கள் சதய நாளில் பிறந்தான். [2] அவனுடைய பிறந்த நாளன்று மறைக் காட்டு இறைவன் 108 கலைசம் ஆடியருள்தற்காக ராசராச வாஜ்யமாராயர் என்னும் அதிகாரி ஏற்பாடு செய்திருக்கிறான் என்று ஒரு கல் வெட்டு அறிவிக்கிறது.[3] ஐப்பசி சதய நட்சத்திரத்தில் கொண்டாடப் பெற்ற இவ்விழா இப்போது வேதாரண்யம் கோவிலில் நிகழ்த்தப் பெறவில்லை.

கார்த்திகை சோமவாரம் நாள் : கார்த்திகை மாதத்தில் வரும் நான்கு சோமவாரங்களிலும் 1000 சங்குகள் வைத்து வேதாரண் யேஸ்வரர்க்குப் பூசை செய்து, சாயரட்சைப் போதில் அபிஷேக

ஆராதனை நடத்துவர். நாற்பது பதம் நெல்லில் பதத்திற்கு 25 சங்கு வீதம் வைத்து விழா நடைபெறும். விழாக்களுள் இது தனித் தன்மை வாய்ந்தது. திருக் கார்த்திகை இரண்டாங்காலத்தில் மகாபலி கல்யாண சுந்தரரை வழிபடுவர். அன்று சொக்கப் பானைகள் கொளுத்தப் பெறும்.

மார்கழி திருவெம்பாவை உற்சவம் : ஒன்பது நாள் விழா இறுதி திருவாதிரை நாளில் நடராசர் வீதி வலம் வருவர். மாணிக்க வாசகர் ஒன்பது நாளும் உள்பிரகாரத்தை காலை மாலை இருவேளையும் வலம் வருவார் நாள்தோறும் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெறும். வேதங்களுக்குக் காட்சி கொடுக்கும் விழா மார்கழி மாதம் வியதிபாத யோக நாளன்று நடைபெறும் இவ்விழா ஸ்தலபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே அந்நாளன்று சூரிய உதய காலத்தில் நான்கு வேதங்களுக் கும் இறைவன் காட்சி கொடுப்பார். நான்கு வேதங்களின் திருமேனிகளும் ஏரிக்கரையில் உள்ள கோவிலிலிருந்து காலையில் புறப்பட்டு வேதாரண்யம் கோவிற்கு வர தீபாராதனை நடைபெறும். பின்னர் கல்யாண சுந்தரர் நான்கு வேதங்களோடு ரிஷபவாகனத்தில் புறப்பட்டுச் செல்வார். அங்கு தீர்த்தம் கொடுத்து, நான்கு வேதங்களையும் அங்கேயே தங்கச் செய்து – கல்யாணசுந்தரர் மட்டும் உச்சிக் காலத்தில் திரும்பி விடுவார்.

தைமாதப் பிறப்பன்று மூன்றாம் முறையாக தியாகேசர்க்கு அபிஷேகம் நிகழும். தைப்பூசத்தன்று வீரஹத்தி விநாயகர் சின்ன ரிஷபத்தில் காலையில் புறப்பட்டு வேதாமிர்த தீர்த்தம் செல்வார். ஆங்கு தீர்த்தம் வழங்குவார். பிரமோற்சவப் பத்திரை (பட்டோலை) சுவாமி சந்நிதியில் அன்றுதான் வாசிக்கப் பெறும் பொங்கல் விழாவில் மாட்டுப் பொங்கலன்று காலையில்

அம்பாள் புறப்பட்டு மணிகர்ணிகையில் தீர்த்தம் கொடுப்பார். பின்னர் மடவிளாகம் சுற்றிவருவார். மடவிளாகம் சுற்றி வருதல் இவ்வொரு நாளில் மட்டுமே நிகழ்கிறது. மாலையில் சுந்தரர் குதிரையில் புறப்பட்டு அகத்தியான் பள்ளி கோவிற்குச் செல்வார். விழாவிற்கு அகத்தியரை அழைக்க வெற்றிலைபாக்கு வைத்து விட்டுத் திரும்புவார். முன்னர் அகத்தியர் வேதாரண்யம் கோவிலிற்கு எழுந்தருள்வது கூறப்பெற்றது. இவ்விழாவில் சுந்தரர் மூர்த்தம் அகத்தியான் பள்ளி ஊர்க்குச் சென்று வருவது சொல்லப் பெற்றது. 'உத்தர நயநம் பெற்ற சங்கிராந்தி நான்று' பராந்தகன் காலத்தில் இவ்விழா கோவிலில் நடைபெற்றிருக் கிறது.[4]

மாசிமகப் பெருவிழா வேதாரண்யம் கோவிலில் மிகப் பெரிய விழாவாகக் கொண்டாடப் பெறுவது. இம்மாசிமகப் பெருவிழா ஆதித்த சோழன் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனலாம்.[5] உத்தம சோழன் காலத்தில் மாசித்திருவிழா ஏழு நாளைக்குக் கொண்டாடப் பெற்றிருக்கிறது.[6] மாசித் திங்கள் ஐந்தாம் நாள் கொடியேற்றம் நடைபெறும். இதுவே விழாவின் தொடக்கமாகும்.

கதவம் திறப்பித்தல் விழாவும் மார்கழியில் நிகழ்கிறது. வேதங்கள் வழிபட்டு அடைத்துச் சென்ற கதவை அப்பரும் சம்பந்தரும் திறக்கவும் அடைக்கவும் செய்தனர் என்பதற்கு அவர்களுடைய பாடல்களே அகச்சான்றுகளாக உள்ளன. உற்சவத்தின் ஏழாம் நாள் அப்பரும் சம்பந்தரும் உச்சிக்காலத்தில் புறப்பட்டுச் சென்று வசந்த மண்டபத்தில் இருப்பர். பின் பிரகாரம் சுற்றிவந்து கொடிக்கம்பம் அருகே நிற்பர். இருவர்க்கும், ஓதுவார்க்கும் பரிவட்டம் கட்டப் பெறும். ஓதுவார் பத்துப் பாடல்கள் பாடி பதினோராம் பாடல் பாடும் போது பூட்டிய கதவு

திறக்க தீபாராதனை நடைபெறும். அப்பரும் சம்பந்தரும் பாடுவதாக அவர்கள் பாடிய பாடல்களை ஓதுவார் பாடுவார். இது மிகச் சிறந்த வரலாற்று உற்சவமாகும். மாசிகப் பெருவிழா வில்தான் அர்த்தநாரீசுவரர், ரிஷபாந்திகர் (காட்சி கொடுத்த நாயகர்) சந்திரசேகரர், புவனிவிடங்கர் முதலியோர் ஒவ்வொரு நாளாகத் திருவீதியில் எழுந்தருள்வர். மாசிமகப்பெரு விழாவில் கோடியக் காடு மோடி மண்டபத்திற்கு சந்திரசேகர மூர்த்தம் சென்று திரும்பி வருதல் விழா தேவார காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனலாம்.[7]

அம்ச பாதநடன விழாவின் இறுதிப் பகுதியில் தியாகேசரு டைய அம்ச பாத நடன விழா நடைபெறும். அம்ச நடனம் என்பது அன்ன பக்ஷி போல நடத்தல் என்னும் பொருளுடையது. தியாகேசர் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார். இம்மூர்த்தம் மட்டும் முன்னும் பின்னும் அசைவதற்கு ஏற்றவாறு அமையப் பெற்றிருக்கும் தியாகேசரை அசைவர்கள் தூக்குதல் கூடாது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களுடைய குடும்பத்தார், மற்றும் தேசிகர்களே தியாகேசரைச் சுமத்தற்கு உரிமை உடையவர்கள் . இவர்களைத் தலத்தார் என்று அழைப்பர் தியாகேசரை சுமந்து வரும்போது தியாகேசர் மூர்த்தத்தை அன்னம் நடப்பது போல ஆட்டிக் காட்டுவர். திருவிழாக் காட்சிகளுள் கண்டு களிக்கத் தக்கவற்றுள் மிகச் சிறந்தது தியாகேசர் புறப்பாடு ஆகும். தியாகேசர் (புவனி விடங்கர்) புறப்பாடு பற்றிய கல்வெட்டுக் குறிப்பை இனி நோக்குவோம். ''புவனிவிடங்க தேவர் திருவாதிரை விழா எழுந்தருளி பகுந்தபோது'' எனக் கல்வெட்டு குறிப்பிடுதலால்[8] முற்காலச் சோழர் காலத்திலிருந்து புவனி விடங்கர் ஆண்டு தோறும் வீதிபுறப்பாடு கொண்

டிருக்கிறார் என்றும் அவ்விழா இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் அறிந்து மகிழலாம்.

மாசித்திங்கள் சிவராத்திரி நாளில் நான்காவது காலத்தில் கல்யாண சுந்தரர் கண்ணப்பற்கு அனுக்கிரகம் கொடுத்தல் நிகழ்த்தப் பெறுகிறது. கண்ணப்பர் இறைவனை மூன்று பிரதட்சனம் சுற்றி வந்து இறைக்காட்சி பெறுவர். கண்ணப்பன் விலங்குகள் இறையைக் கொல்லுமோ என அஞ்சி வில்வ மரத்தின் மீதமர்ந்து – தூங்காதிருத்தல் பொருட்டு வில்வ இலையைப் பறித்துப் போட்டவாறே இருக்க – நான்காம் காலத்திற்றான் இறைவன் அவற்குக் காட்சி கொடுத்தார். ஆதலின் இவ் அனுக்கிரஹ விழா நான்காம் காலத்தில் நடத்தப் பெறுகிறது.

பங்குனி உத்திர விழா கங்கைக்குப் பாவ விமோசனம் நல்கிய விழாவாகும். பகல் பன்னிரண்டு மணிக்குக் காசி கங்கையி லிருந்து மணிகர்ணிகை தீர்த்தத்திற்கு நீர்வருவதாக ஐதீகம். எனவே பங்குனி உத்திரத்தன்று கங்கைக்குப் பாவ விமோசன விழா இங்கு நடத்தப் பெறுகிறது. இது குடந்தை மாமக விழா நிகழ்ச்சி போன்றது. புதிய சிவப்புத் துணியால் கங்கைக்குத் திருமாங் கல்யம் சாத்துவர். அதன் பின்னர் அவளை ஆவகரணம் செய்து, பூசை செய்து, பின் மணிகர்ணிகை தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வித்து கங்கையைப் புனிதப்படுத்துவர். இந்தியாவின் வடபகுதியில் ஓடுகின்ற கங்கைக்கு இந்தியாவின் தென் பகுதியில் பாவ விமோசன விழா நடத்தப்பெறுகிறது. ஆதலின் இவ்விழா இந்திய ஒருமைப்பாட்டுக்கு அடிகோலுகிறது என்று கூறலாம்.

நாள்வழிபாடு

நாள்வழிபாடு நித்திய பூசை எனவும் சந்தி எனவும் பெயர் பெறும். வேதாரண்யம் கோவிலில் ஆறு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மற்ற கோவில்களில் சூரிய சந்திரர் அல்லது விநாயகரில் தீபாராதனையைத் தொடங்குவர். இக்கோவிலில் வேதாரண்யேஸ்வரரிடமிருந்தே நித்திய பூசையைத் தொடங்குகின்றனர். வேதாரண்யேஸ்வரர்க்கு அடுத்த படியாக புவனிவிடங்கர்க்கும். பிறகு பிற தெய்வங்களுக்கும், பரிவார தெய்வங்களுக்கும், அம்பாளுக்கும் இறுதியாக வீரஹத்தி விநாயகர்க்கும் என நைவேத்தியம் தீபாராதனை முதலியன நடக்கும் இத்துணைக்கும் இறுவாயாகக் கடைசியில் பலி பீடத்தில் நைவேத்தியத்தை படைப்பர்.

பரிவார தேவதைகளுக்கு மட்டும் காலைசந்தி, மாலைசந்தி இருவேளையே நைவேத்தியம் படைப்பர். புவனி விடங்கராகிய லிங்கத்திற்கு காலை சந்தி சாயரட்சை இருவேளைகளில் மட்டும் அபிஷேக ஆராதனை, நைவேத்தியம் நடைபெறும். விலை யுயர்ந்த பச்சை ரத்தினத்தினாலான பெட்டகத்துள் பாதுகாப்பாக வைத்து இருவேளை மட்டும் பூசிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

சோழர்கள் காலத்தில் இத்தகு நித்திய பூசைகளுக்காகக் கொடைகள் பல வழங்கப் பெற்றுள்ளன.[9] நைவேத்தியமாகப் படைத்தற்கு அரிசி, தயிர், சருக்கரை முதலியனவும், ஆடியருள் தற்காக நெய்யும் அக்காலத்தில் கொடுக்கப் பெற்றிருந்தன. மூன்றாம் இராஜேந்திர சோழன் காலத்தில் திருவிக்கிரமன் சந்தி யென்று ஒன்று நிகழ்ந்திருக்கிறது.[10] இவ்விழாவில் இறைவன் இரு சந்தி ஆடி அருளவும் (அபிஷேகம்) அமுது செய்தருளவுமாக

ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இத்திருவிக்கிரமன் சந்தி என்பதுயாது என அறியுமாறில்லை.

அடிக்குறிப்புகள்

1. தெ. இ. க. தொகுதி 17 : 128
2. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1 பக்கம் 102
3. தெ. இ. க. தொகுதி 17 : 492
4. தெ. இ. க. தொகுதி 17 : 484
5. தெ.இ.க.தொகுதி 13: 128
6. தெ.இ.க.தொகுதி. 19:124
7. சுந்தரர் தேவாரம் திருக்கோவலூர்ப் பதிகம் (7-17-3)
8. தெ. இ. க. தொகுதி, 19 : 319
9. தெ. இ. க. தொகுதி, 13 : 128, 17 : 472
10. தெ. இ. க தொகுதி 17 : 491

9. கோவிலும் சமுதாயமும்

கோவிலைச் சார்ந்து சமுதாயத்தில் தோன்றியுள்ள சிந்தனைகள் பலவாகும். பண்டைச் சமுதாயம் கோவிலை அடிப்படையாகக் கொண்டே இயங்கியது. இன்றைய சமுதாயம் கோவிலை அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை. என்றாலும் சமுதாயத்தினுடைய நல் வாழ்விற்கு அடிப்படையாக இருப்பது கோவிலே எனலாம். கோவிலிற்கு இவ்வாறு நேர்ந்து கொண்டால் சுகமான வாழ்வு கிடைக்கும் என்று எழுந்துள்ள நம்பிக்கைகள் பலப் பல.

பிள்ளைப்பேறு வேதநதிக் கடலில் (வேதாரண்யம் கடல்) முழ்கி, மணிகர்ணிகையில் மூழ்கி நாற்பத்தெட்டு முறை வன்னி மரத்தைச் சுற்றினால் பிள்ளைப்பேறு கிடைக்கும் என்னும் நம்பிக்கை வேதாரண்யம் கோவில் வழிபடுவார்க்கிடையே உள்ளது. காட்சி கொடுத்த நாயகர் (ரிஷபாந்திகர்) மண்டபத்தருகே இரண்டு சிறிய தூண்கள் இருந்தன. சிற்பிகள் தம்முடைய வல்லமையைக் காட்டுதற்காக அவ்விரண்டு தூண்களை மட்டும் சுழலுமாறு செய்தனர் போலும். பிள்ளைப்பேறு இல்லாதார் அவற்றைத் தம் நம்பிக்கைக்குப் பற்றுக் கோடாகக் கொண்டனர்– முறைப்படி இறைவனை வழிபட்டு அத்தூண்களைச் சுற்றி விட்டால் மகப்பேறு கிட்டும் என்று நம்பலாயினர். எனவே அவற்றைப் பிள்ளைத் தூண்கள் என்றே அழைக்கின்றனர்–

கையை வைத்த மட்டில் தூண் தானாகச் சுற்றினால் கேட்டது கிடைக்கும் என்றும் நம்பப்படுகிறது. சுற்றிச் சுற்றியே ஒரு தூண் கீழே விழ இப்போது ஒன்று மட்டுமே எஞ்சியுள்ளது. வேண்டியவாறே மகப்பேறு கிட்டுமாயின் ஸ்தல விநாயகர்க்கு 3 உருண்டைவெல்லம் 3 மரக்கால் அவல், 3 தேங்காய் கலந்த அவல் நைவேத்தியத்தைப் படைக்கின்றனர் கலவையில் அனைத்தும் மூன்று என்னும் எண்ணிக்கையில் இருக்க வேண்டும். காரணம் யாது? நாங்கள் இருவராய் இருந்தவரை மூவராய் மாற்றியமைக்கு நன்றி என்று சொல்லத்தான் போலும் வேதாரண்யம் கோவிலில் இப்போது பிரபலமாய் இருப்பவர் துர்க்கையே. அத்துர்க்கையிடம் பிள்ளை வரம் வேண்டிப் பெற்றவர்கள் தொட்டில் பிள்ளையைத் துர்க்கை முன் கட்டும் பழக்கமும் இருக்கிறது. பிள்ளைப்பேறு இல்லாது போனமைக்குக் காரணம் யாது? முன் பிறவியில் நாகத்தை அடித்துக் கொன்றவர்க்கு இப்பிறவியில் மகவு பிறக்காது. இவ்வாறு உள்ளம் ஆறுதல் கொள்கிறது. வேதாரண்யம் கோவில் வன்னிமரத்தடியில் நாகதேவர். ஒருவர் உளர். தசரதர் இந்நாகதேவரை (ஐந்து தலை நாகர்) வேண்டியே இராமனைப் பெற்றார் என்றும் கூறுவர். நாக தோசம் நீங்க அவ்விடத்தில் நாகத்தைப் பிரதிஸ்டை செய்து வைப்பர். அவ்வாறு செய்து வைத்தால் நாக தோசம் நீங்கப் பிள்ளைப் பேறு கிடைக்கும் என்னும் நம்பிக்கை நிலவுகிறது.

பிற வேண்டுதல்கள்: பிள்ளைப்பேறு வேண்டிப் பெறுவதைப் போல கன்னியர் வெள்ளிக்கிழமை இராகு காலத்தில் துர்க்கையை வேண்டிக் கொண்டால் நினைத்தவாறே விரைவில் திருமணம் நிகழும் என்று நம்புகின்றனர். கணவன் உயிரோடு போராடிக் கொண்டிருந்தால் – மனைவி தன்னுடைய மாங்கல்யத்தை உண்டியலில் போட்டுப் பிழைக்க வைத்தலும்

உண்டு. பரு வந்தவர்கள் துர்க்கையிடம் வேண்டிக் கொள்வர். சின்னாட்களில் பரு நீங்கி விடும். நீங்கிய பின்னர் துர்க்கைக்கு எதிரேயுள்ள தொட்டியில் உப்பைக் கொண்டு வந்து கொட்டிவிட்டுச் செல்வர். இது காணிக்கையாக இருத்தல் வேண்டும்.

இராவணனைச் சம்ஹாரம் செய்து இராமர் திரும்பினார். இராவணனைக் கொன்ற வீரஹத்தி இராமனைப் பிடித்துக் கொண்டது. வாட்டியது – பேய்ச்சிரிப்புச் சிரித்தது. தோசம் நீங்குதற்காக இராமன் வேதாரண்யம் ஈச்சுரனை வழிபட்டான். வழிபாட்டின் பயனாக விநாயகர் இராமனிடம் ஒட்டிக் கொண்ட வீரஹத்தியை உதைத்து விரட்டினார்.

> **" குடக்கினை நோக்கி நின்று கொடியவெங் கூற்றமென்னத்**
> **தடக்கைமா தவன் பின் பற்றித் தான்தொடர்ந் தோடியேறும்**
> **தொடக்கெனும் பழியாம் அந்தத் தோகையைக் கண்டுகோபித்**
> **தடக்கினன் உங்கா ரத்தால் அவன்றனை அடராவண்ணம்''**

என்று விநாயகர், ஹத்தியை அடக்கியதைப் பரஞ்சோதி முனிவர் வேதாரண்ய புராணத்தில் பாடுவார். இவ்வாறு விநாயகரால் உதைக்கப் பெற்ற தோசமானது விநாயகர் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மேடைக்குள் அடங்கி விட்டது என்று கூறுவர். ஆதலின் அம்மேடையை வீரஹத்தி மேடை என்றும் அழைப்பர்.

முன்னர் கூறப் பெற்ற நம்பிக்கைகள் அனைத்தும் பாவம் நீங்குதற்காகவும், நல்வாழ்வு கிட்டுதற்காகவுமே அமைந்தன. ஆனால் இங்கு வீரஹத்தி மேடையைச் சுற்றிவந்தால் பாவம் பிடித்துக் கொள்ளும் என்று நம்பப் பெறுகிறது. சுற்றி வருதற்கு வாய்ப்பாக இருந்துவிடக் கூடாது என்பதற்காக அம் மேடையைச் சுற்றி வர இயலாதவாறு கம்பி போட்டும் மூடியுள்ளனர்.

வேதாரண்யம் கோவிலில் திருவிழாக்கள் என்பன உள்ளூரைச் சேர்ந்தவரும். அணித்தேயுள்ள ஊரவருமே கலந்து கொள்ளுதற்கு வாய்ப்பாக இருக்கின்றன. ஆனால் தமிழகத்தின் பல பகுதிகளைச் சேர்ந்தவரும் ஒன்றுசேரும் பெருவிழாக்களும் அங்கு நிகழ்கின்றன. ஆடி, தை அமாவாசை நாட்களிலும், இருபத்திரண்டு ஆண்டுக்கொரு முறை நிகழும் அர்த்தோத்திரய விழாவன்றும் இங்குள்ள கடலில் நீராடுவது மிகச் சிறப்பாகக் கருதப் பெறுகிறது. அந்நாட்களில் நீராடினால் வேண்டியவை வேண்டியவாறு பெறலாம் என்று நம்பப் பெறுகிறது.

இதுவரை வேதாரண்யம் கோவில் சமுதாயத்திற்கு நம்பிக்கை என்னும் இதமான மருந்தை எவ்வாறெல்லாம் வழங்கியது என்று கண்டோம். இப்பகுதியில் வேதாரண்யம் மக்களுக்குக் கோவில் – உயிர்காக்கும் தோழனாகத் திகழ்ந்த வரலாற்றைக் காணலாம். வேதாரண்யம் பகுதி கடலுக்கும் தாழ்வாக அமைந்திருக்கிறது. எனவே கொடிய புயல் காலங்களில் கடல்நீர் உள்ளே புகுந்து விடுவதும் உண்டு. 1952 ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் ஒரு நாள் இரவு இரண்டுமணி யாரும் எதிர்பாராத நேரத்தில் – உறக்க வேளையில் கொடிய புயல் காற்று வீசியது. கடல் நீர் நிலப் பரப்பிற்குள் புகுந்தது. கணக்கற்றோரை வீடு இழக்கச் செய்தது என்பது பெரிதில்லை 247 பேரின் உயிரைக் குடித்து ஏப்பம் விட்டது. இயற்கையின் சதி ஒருநாளோடு நின்று போய் விடவில்லை. 1955 ஆம் ஆண்டும் நவம்பர் மாதத்தில் (ஐப்பசி – கார்த்திகை) மீண்டும் புயல் வீசியது. வீடிழந்து வழியற்றுப் போனவர்களுக்கு இப்புயல் காலத்தில் தாய்போல அரவணைத்துக் காத்தது வேதாரண்யம் கோவிலே யாகும். மிகப் பெரிய கோவிலாதலினால் கடல் நீர் உள்ளே

புகுதற்கு இயலா ஆற்றல் கொண்டு வேதாரண்யம் பகுதி மக்களை புயல் காலங்களில் வேதாரண்யம் கோவில் காத்து வருகிறது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டு வாக்கில் கோவிலின் நிர்வாகம் வடபாதிமங்கலம் சொக்கப்பா முதலியார் கையில் இருந்தது. வடபாதி மங்கலம் என்பது திருவாரூர்க்கு அருகில் உள்ளது. தர்மகர்த்தா சொக்கப்பா முதலியாரிடம் தில்லை நாயகத் தம்பிரான் என்னும் ஈழத்தார் சமையல்காரராக வேலை பார்த்து வந்தார். அவர்கையில் சங்கு சக்கரக் குறிகள் இருத்தலைக் கண்ட சொக்கப்பா முதலியார் வேதாரண்யம் கோவில் தர்மகர்த்தாவாகத் தில்லைநாயக தம்பிரானை நியமித்தார்.

தில்லைநாயக தம்பிரான் அவர்கள் சுமார் 80 ஆண்டு காலம் நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்திவந்தார். தன்னுடைய காலத்திற்குப் பின்னர் கோவிலின் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் உள்ள தன்னுடைய குருபரம்பரையினரைச் சேர வேண்டும் என்று எழுதி வைத்துச் சென்றார். அவர் ஏற்பாட்டின் படி நிர்வாகம் யாழ்ப் பாணத்து வரணி ஆதீன சபைக்கு மாறியது. இச் சபையினர் நியமிப்பாரே வேதாரண்யம் கோவிலின் தர்மகர்த்தாவாக இருக்க முடியும் வரணி ஆதீன சபையில் ஒரு பத்து வீட்டார் உளர்.

தற்போது இந்துசமய அறநிலையத்துறை அலுவலர் ஒருவரின் உதவியுடன், யாழ்ப்பாணத்து வரணி ஆதினத்தைச் சேர்ந்த பரம்பரை தர்மகர்த்தா அவர்களால் கோவிலின் ஆட்சி நடைபெற்றுவருகிறது.

இக்கோயிலுக்கு ஏராளமான நன்செய், புன்செய் நிலங்கள் குன்னூர், கரியா பட்டினம், அகத்தியான் பள்ளி, பண்ணின் நேர்

மொழியாள் புரம், வடகட்டளை போலும் 49 சிற்றூர்களில் 13.501 ஏக்கர் 7 செண்டு என்று இருக்கின்றன. இக்கோவிற்கும் இதனைச் சேர்ந்த கோவிற்குமாக நிலம் இருப்பதைப் போல் உப்பளங்களும் சொந்தமாக இருக்கின்றன. தமிழ் நாட்டிலே அதிகமான நிலப் பரப்பு உள்ள கோவில் இது தான் என்று கூறலாம்.

✸

10. மறைக்காட்டிலக்கியம்

திருமறைக்காடு பற்றிய இலக்கியப் பாடல்கள் ஏராளமாக உள்ளன. பதிகப் பாடல்கள், தனிப் பாடல்கள், நூற்பாடல்கள் என்று கூட அவற்றைப் பகுத்துக் காணலாம். மறைக்காட்டு இலக்கியங்களை தேவாரக்காலம் சோழர்காலம், பிற்காலம் என்று பகுத்து நோக்குதல் எளிய முறையாகும்.

மறைக்காட்டுக் கதவம் திறந்தமை

மறைக்காட்டிறைவனை வழிபட்ட வேதங்கள் கலிகாலம் பிறந்துவிட்டது என்று கோவில் கதவைக் காப்பிட்டுச் சென்று விட்டன. எனவே அடியவர்கள் திட்டிவாசல் வழியாகச் சென்று வழிபட்டு வந்தனர். இந்நிலையைப் போக்குதற்காகச் சம்பந்தர் வேண்டுதற்படி அப்பர் கதவம் திறப்பிப்பதற்காகப் பாடினார்.

" பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே" (5.10.1)

அப்பருடைய பாடல் பதிகமாகவே நீண்டது. தமிழ் வெள்ளத்தில் திளைப்பதற்காகவே இறைவன் பத்துப்பாக்கள் பாடும் வரை திறவாது இருந்தான் போலும் இறுதிப் பாடலில் அப்பர் இறைவனை 'இரக்க மொன்றிலீர்' என்று ஊடல் கொள்ளவே.

இனிச் சோதித்தல் தகாது என்று பதிக இறுதியில் கதவைத் திறக்கச் செய்தான் கதவு திறந்து மூடவேண்டும் அல்லவா?

" சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே"

சம்பந்தர் இவ்வொரு பாடல் பாடிய அளவிலேயே கதவு சாத்திக் கொண்டது. இந்நிகழ்ச்சியின் பொருட்டு அப்பர் உள்ளத்தில் சிறு சஞ்சலம் இருந்தது என்று கூடச் சொல்லலாம்.

" திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தார் உந்நின்றர்" (வாய்மூர்பதிகம்–8)

என்பது அப்பர் வாக்கு மறைக் காட்டுக் கதவம் திறந்து மூடியமைக்கு மேற்காட்டிய அவர்களுடைய பாடல்களே சிறந்த அகச்சான்றுகளாம். அப்பர் என்று நினைத்தவுடனே அவர் மறைக்காட்டுக் கதவம் சிறந்த அருட்செயல்தான் முதலில் நினைவுக்கு வரும் அப்பரைப் பற்றிப் பாடுவார் அனைவரும் இச்செயலைப் பாராட்டியே பாடுகின்றனர்.

" மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலில்
பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர் பிரான்தன் அருந்தமிழே"
(பதினோராம் திரு முறை – திருத்தொண்டர் திருவந்தாதி – 25)

என்னும் நம்பியாண்டார் நம்பி வாக்கே சிறந்த சான்று

அப்பர் பாடல்கள்

திருநாவுக்கரசர் பாடல்கள் தேனினும் இனியன. அவருடைய பாடல்களில் இறைவனின் உருவமைதியைக் காணலாம்.

தத்துவத்தை அறியலாம். இலக்கியத்தை நுகரலாம் அனுபவத்தை உணரலாம். உருவமைதியைக் கூறும் மறைக் காட்டுப் பாடலிது.

" அங்கையுள் அனலும் வைத்தார் அறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணைவைத்தார் தம்மடி பரவ வைத்தார்
திங்களைக் கங்கையோடு திகழ்தரு சடையில் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மாமறைக் காடனாரே" (4.33.6)

இப்பாட்டால் வீணாதர தட்சிணாமூர்த்தி, சந்திர சேகர மூர்த்தி, அர்த்த நாரி முதலிய சிவ மூர்த்தங்களை உணர வைத்துள்ளமை தேற்றம்.

ஒரு பதிகம் முழுவதும் இறைவன் இராவணனுக்கு அனுக்கிரகம் வழங்கிய பாங்கையே கூறுகிறது. அப்பதிகத்தின் இறுதிப் பாடலில் இராவணன் தன்னுடைய நரம்புகளால் யாழமைத்து இருக்கிசைகள் பாடி இறைவனிடம் அருள் பெற்றான் என்னும் குறிப்பை அப்பர் வைத்துள்ளார்.

" கங்கைநீர் சடையுள் வைக்கக் கண்டலும் மங்கையூடத்
தென்கையான் தேர்கடாவிச் சென்றெடுத் தான்மலையை
முன்கையான் தேர்கடாவிச் சென்றெடுத் தான்மலையை
அங்கைவாள் அருளினானூர் அணிமறைக் காடுதானே" (4.34.10)

மறைக்காட்டைப் பொருத்த வரை வலம்வருதலே மிகச் சிறந்த வழிபாடு என்று அப்பர் கருதியிருக்க வேண்டும்

" துஞ்சும் போதும் துயிலின்றி ஏத்துவார்
வஞ்சின் றிவலங் கொள்மறைக் காடரோ"

" மருவி னார்வலங் கொள்மறைக் காடரோ"

" மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ."

என்று பாடல்தோறும் வலம் வரலைப் பற்றி அப்பர் கூறுவார். வேதாரண்யம் கோவில் தேரோடும் வீதியை வலம் வருதலை வழிபாட்டுக் கடமையாகக் கொண்டார் பலர்இன்றும்

வாழ்கின்றனர். மறைக்காட்டுக் கோவிலை வலம் வந்தால் ஓங்குவேள்விகள் ஒரு பதினாயிரம் செய்த புண்ணியத்தை அடைவர் என்று பரஞ்சோதி முனிவருடைய வேதாரண்ய புராணம் கூறும். வலங் கொள்ளுதல் சிறப்பென்று அப்பர் மறைக்காடு அன்பிலாலந்துறை என்ற இரு தலங்களுக்கு மட்டும் கூறியுள்ளார் அன்பிலாந்துறையை வலம் வருவாரை வானோர் வலம் வருவர் என்பது அப்பருடைய கருத்தாகும்.

அப்பருடைய பாடல் மூலம் மறைக்காட்டுப் பகுதியில் தாழை, புறணி, ஞாழல், நெய்தல், ஆம்பல் என்பன நிறைந் திருந்தன என்று அறிகிறோம். அப்பருடைய காலத்தில் கப்பல் போக்குவரத்து மறைக்காட்டில் இருந்தது.

> " **சங்கு வந்தலைக் குந்தடங் கானல்வாய்**
> **வங்க மார்வலங் கொள்மறைக் காடரோ''** (5.9.8)

என்பது அதனை உணர்த்தும்.

அப்பருடைய தேவாரத்தில் ஐந்து பதிகங்கள் மறைக்காடு பற்றியன. இவை தவிர இருபத்து நான்கு பிற பதிகப்பாடல் களிலும் மறைக்காடு பற்றிய குறிப்பை அப்பர் வைத்துள்ளார். தனித் திரு நேரிசைப் பாடல் ஒன்று அவருடைய உளக்கிடக்கை யையும், மறைக்காட்டிறைவனிடம் அவர் கொண்டுள்ள பேரன்பையும் நன்கு விளக்கும்.

> " **ஆசைவன் பாசம் எய்தி அங்குற்றேன் இங்குற்றேனாய்**
> **ஊசலாட்டுண்டு வாளா உழந்து நான் உழிதராமே**
> **தேசனே தேசமூர்த்தி திருமறைக்காடு மேய**
> **ஈசனே உன்றன் பாதம் ஏத்துமாறருள் எம்மானே''** (4–76–8)

அப்பருடை நினைவாற்றலுக்கு இப்பாடல் மிகச் சிறந்த சான்று

" வஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர் உருத்திரகோடி மறைக்காட்டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர் வீரட்டம் மாதானங்கே தாரத்தும்
வெஞ்சமாக் கூடல்மீயச் சூர்வைகாவே தீச்சுரம் விவீசுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும் கயிலாய நாதனையே காணலாமே" (6-70-8)

கயிலாய நாதனை மறைக்காட்டிலும் காணலாம் என்றது குறிக்கத் தக்கது.

சம்பந்தர் பாடல்கள் :

மறைக்காட்டுக் கோவிலுக்குப் பிள்ளையார் நான்கு பாடல் கள் பாடியுள்ளார். கோளறு திருப்பதிகமும் இங்குதாம் பாடப் பெற்றது என்பர். மறைக்காட்டுக்கடல் சங்கு, முத்து முதலிய வற்றைக் கரைக்குக் கொண்டுவரும். கடலில் கலங்கள் மிகுதியாக நிற்கும் என்பதை

" சங்கந் தரளமவை தான்கரைக் கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட்டுறை மைந்தா"

என்னும் வரியால் உணர்த்துவார்.

" குரவங்குருக்கத்திகள் புன்னைகள் ஞாழில்
மருவும் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா."

எனும் இப்பாடல் மறைக்காட்டின் இயற்கை வளத்தை உணர்த்தும் மறைக் காட்டில் வாழும் குருகு அயலே உள்ள தாழையை தன் இளம் பெடை எனக் கருதித் தழுவி ஏமாந்ததாம்.

" ஏழைவெண் குருகயலே யிளம்பெடைதன தெனக்கருதித்
தாழைவெண் மடற்புலகும்தண் மறைக்காடு."

மறைக்காட்டு சம்பந்தர் பாடலொன்று சமணர்களின் தோற்றத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

" பெரியவாகிய குடையும்பீலியுமவை வெயிற்கரவாக்
கரிய மண்டை கையேந்திக் கல்லென உழிதருங் கழுக்கள்

அரியவாக உண்டோது மலர் திறமொழிந்து நம்மடிகள்
பெரிய சீர் மறைக்காடே பேணு மின் மனமுடையீரே.''

சுந்தரர் பாடல் :

சுந்தரர் மறைக்காடு பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். மூவர் பாடலிலும் அம்மையின் பெயர் குறிப்பிடப்பெறும் ஊர் திருமறைக்காடே. 'அப்பர் பண்ணின்நேர் மொழியாள்' என்றார். சுந்தரர் 'யாழைப் பழித்தன்ன மொழி மங்கை என்றார் (7–71–1) சுந்தரர் கையாண்ட இப்பெயரே இப்போதும் அம்மைக்கு உள்ளது.

" அங்கங்களும் மறை நான்குடன் விரித்தானிடம் அறிந்தோம்
தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற்படப்பை
சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி
வங்கங்களும் உயர்கூம் பொடு வணங்கும் மறைக்காடே" (7–71–3)

நெய்தல் வளத்தைக் கூறியதோடு கலங்கள் தம்முடைய உயர் கூம்புகளால் இறையை வணங்கின என்று கூறியுள்ளமை சுவையுடையது.

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரோடு மறைக்காடு சென்று இறைவனை வழிபட்டார் என்று பெரியபுராணம் கூறும். அவர் மறைக்காட்டிறைவன் மேல் ஆறாக்காதல் கொண்ட காதலி ஒருத்தியின் மெய்ப்பாடுகளை அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

" துயரும் தொழும் அழும்சோரும் துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய் துயிர்க்கும் பெரும்பணி கூர்ந்து
அயரும் அமர்விக்கும் மூரிநிமிர்க்கும் அந்தோ இங்ஙனே
மயரும் மறைக்காட் டிறையினுக் காட்பட்ட வாணுதலே''
(11–ஆம் திருமுறை – பொன்வண்ணத்தந்தாதி 37)

சேரமான் பாடியது இவ்வகத்திணை பாடல் ஒன்றுதானாகும்.

சோழர் காலம்

திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர் நம்பியாண்டார் நம்பி. இராசராசன் கால இறுதியிலும் இராசேந்திரன் ஆட்சிக்கு வந்த தொடக்கத்திலும் நம்பியாண்டார் நம்பி வாழ்ந்திருக்க வேண்டும். இவர் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என்னும் நூல்களையும் யாத்துள்ளார். அவற்றுள் சம்பந்தர் மறைக்காட்டுக் கதவினை அடைத்த செய்தியைப் பாராட்டியுள்ளார்.

> " .... நித்திலங்கள்
> மாடத் தொளிரும் மறைக்காட் டிறைக் கதவைப்
> பாடி அடைப்பித்த பண்புடையான்."
>
> (ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை)

என்பது ஒரு சிறந்த சான்று மறைக்காட்டிறைவனைப் பற்றிய தனிப் பாடல்களை இவர் பாடவில்லை.

கல்லாடப் பாடல் :

கல்லாடர் செய்தது கல்லாடம். இந்நூல் சங்க இலக்கிய நடையில் அகப்பொருள் செய்திகளை முறையாகத் தொகுத்துச் சொல்வது கல்லாடத்தில் இறைவன் மாணிக்க வாசகருக்காக மண் சுமந்த திருவிளையாடல் சொல்லப்பெறுகிறது. மேலும் கல்லாடம் திருமுறையில் சேர்க்கப்பெறவில்லை எனவே கல்லாடம் மாணிக்கவாசகருக்குப் பின்னும் நம்பியாண்டார் நம்பி திருமுறை தொகுத்ததற்குப் பின்னும் கி.பி. 11 நூற்றாண்டு வாக்கில் இயற்றப் பெற்றிருக்க வேண்டும்[1] இக்கல்லாடத்தில் மறைக் காட்டிறை வனைப் பற்றிய பாடல் ஒன்று உள்ளது.

" ....
மறையடி வழுத்திய மறைவனத் தொருநாள்
மணிச்சுடர் நறுநெய் கவர்மதிக் கருப்பைக்
கிருவகை யேழெனும் திருவுல கனைத்தும் கொடுத்தவன்..."
(கல்லாடம் 94)

மறைக்காடு மறைவனம் என்று சொல்லப்பெற்றுள்ளது.

பெரியபுராணப் பாடல் :

சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவர்.[2] திருநாவுக்கரசர் புராணம், திருஞான சம்பந்தர் புராணம், சேரமான் பெருமாள் நாயனார் புராணம் ஆகிய மூன்று புராணங்களிலும் மறைக்காட்டைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. திரு வீழி மிழலையினின்று அப்பர் மறைக்காடு வந்தார் என்பர் சேக்கிழார். அப்பரும் சம்பந்தரும் ஒரே நாளில் அடுத்தடுத்து மறைக் காடு வந்ததாய்க் குறிப்பிட்டுள்ளார். கோபுரமும் மடங் களும் மறைக் காட்டில் இருந்தன எனப்பெரியபுராணம் குறிப்பிடும்.

அரசும், பிள்ளையும் ஒன்று சேர்ந்து மறைக்காட்டுக் கோவில் வாயிலை நண்ணினர் என்று கூற வந்த சேக்கிழார் அவ்வூரின் நெய்தல் வளத்தையும். உப்பளத்தின் செழுமையையும் நன்றாகப் படம்பிடித்துக் காட்டுவார்.

" மன்றல் விரவு மலர்ப் புன்னை மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறும் சிறுமடவர் முத்தம் கொழிக்கு மறைக்காட்டுக்
குன்ற வில்லியார் மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலுக் கோவும் அரசும் திருமுன்பு"
(திருநாவுக்கரசர் புராணம்)

இன்றும் சிறந்துள்ள உப்பளம் சோழர் காலத்திலும் அதற்கு முன்னும் சிறந்திருந்தது என்பதற்கு – இப்பாடல் சான்று. கோவிலுக்குள் சென்றவுடன்– முதலில் திருச்சுற்றை வலம் வரல் வேண்டும் என்னும் வழிபாட்டு முறையையும் இப்பாட்டால் தெளிய வைத்தார்.

சோழர்கள் காலத்தில் 'பல்லவர்காலத்தைப் போன்று பதிகப் பாடல்களோ. பிற்காலத்தைப் போன்று தனித்த இலக்கிய நூல்களோ தோன்றாது பிற நூல்களின் இடையிற்றும் மறைக்காடு பற்றிய குறிப்புக்கள் வைக்கப் பெற்றன எனல் வேண்டும்.

பிற்காலம் :

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்[1] மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இம்மூன்று பாடல்களிலும் ஊர்ப் பெயர் மறைக்காடு என்றில்லாது வேதவனம் என்றே உள்ளது. மறைக்காட்டைப் பற்றிய தனி இலக்கிய நூல்கள் பிற்காலத்திலே தான் தோன்றியுள்ளன. அவற்றுள் மறைக்காட்டீஸ்வரர் துதி. என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் அச்சு வடிவம் பெறாமல் சென்னையில் உள்ள பழஞ்சுவடிகள் நூலகத்தில் ஓலைச் சுவடி வடிவிலே உள்ளது. இந்நூலில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'மறைக்காட்டிலம் மானை வணங்குவீரே' என்று சொல்லப் பெறுகிறது. அவ்வேட்டில் காணப்பெறும் பாட லொன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

> " ஆகமங்கள் இருக்கவே அதன்மேற் சற்றும்
> அரைச் சணமே யானாலும் மனதில்லாமல்
> பாவ வடிவுருவான பரத்தை மாரைப்
> பலகாலும் நம்புகின்ற பாவிகாளோ
> நாகவிழ மந்திரத் தாற்றிரும்பும் வேசி
> நாய் மருந்து விழச்சிம்பட்டாலே வராற் கூடும்
> வாகனமே யேறிவரும் எம்பிரானை
> மறைக் காட்டிலம்மானை வணங்குவீரே" (66)

பரத்தையரின் உறவை விடுத்து இறைவனை நாடுக என்று கூறும் பாடலிது. இந்நூற்பெயர் மறைக்காட்டம்மான் மாலை என்றும் இதன் ஆசிரியர் மதன சிகாமணி என்று ஒரு கருத்தும் உள்ளது.

இனி யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (கி.பி. 1886) இயற்றிய மறைசையந்தாதி. யாழ்ப் பாணத்து நீர்வையம்பதி பீதாம்பரப்புலவர் இயற்றிய மறைசைக் கலம்பகம், வேதாரண்யேஸ்வரர் திருவூஞ்சல் எனும் நூல்களும் மறைக் காட்டிலக்கியங்களாய் விளங்குகின்றன. இவற்றுள் மறைசையந் தாதி எனும் நூல் மட்டுமே இப்போது கிடைககிறது. திருவாடு துறை துறைசை என்று அழைக்கப்பெறுதல் போல மறைக்காடு மறைசை என்று அழைக்கப்பெறுகிறது. முதன் முதலாக வேதாரண்யம் என்னும் சொல்லாட்சி வருவது மறைசையந்தாதி என்னும் நூலில் ஆகும்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய தனிப்பாடல் ஒன்று அழகிய அங்கதச் சுவை மிகுந்தது.

> " **பாணியிலே புள்ளிமான் பாகத்தே பச்சைமான்**
> **வேணி தனிலேயோர் வெள்ளைமான் – காணு மலர்ச்**
> **செம்மானுலவும் திருமறைக்காட் டீசரே**
> **எம்மானுக்கு எங்கே இடம்''**[3]

அடிக்குறிப்புகள் :

1. தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.11) மு. அருணாசலம் பக்கம் 33–34
2. சேக்கிழார் மு. அருணாசலம் பக்கம் 26
3. தனிப்பாடல் திரட்டு 1 (கழகவெளியீடு) 744

11. தலபுராணங்கள்

சங்க காலத்தில் பாட்டுடைத் தலைவர்களாய் அரசர்கள் திகழ்ந்தனர் தேவாரக் காலத்தில் பாடல்கள் இறைவனையே தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றன. இதற்கிடையில் சிலம்பு மணிமேகலை போன்ற நெடும்பாட்டுக்கள் தோன்றின. இறைவன் வாழும் தலங்களை அடிப்படையாகக் கொண்டு நெடும் பாட்டாகப் பாடப்பெறும் தலபுராணங்கள் பிற்காலப் பாண்டியர் காலத்தில் மிகுதியாகத் தோன்றின. இக்காலத்தில் புலவர்களின் சிந்தனை தலபுராணங்கள் பாடுவதில் திரும்பியது. ஊர்தொறும் உள்ள இறைவனுக்கு அவ் அவ்வூரில் உள்ளார் தபுராணங்கள் பாடத் தலைப்பட்டனர். தல புராணம் என்பது தலத்தின் பெருமையைப் பற்றியும். இறைவனின் பெருமை யையும் சிறப்பாக எடுத்துக் கூறுதற்காக எழுந்த நூல். தலபுராணங் களை இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் நூல்கள் என்றுகூடக் கூறலாம்.

இரு புராண நூல்கள் :

வேதாரண்யம் கோவில் பற்றி இரண்டு தல புராணங்கள் தோன்றியுள்ளன. ஒன்று பரஞ்சோதி முனிவர் செய்த மறைசைப் புராணம் மற்றது அகோரதேவர் அருளிச் செய்த வேதாரண்ய புராணம் புதிய பதிப்புக்கள் இன்மையால் இவ்விருபுரா்ண நூல்களையும் தொன்மை வாய்ந்த பெரிய நூலகங்களிற்றான் காணுதற்கு இயலும். இவ்விரு புராணங்களைப் பற்றியும்,

புராணங்கள் இயற்றிய ஆசிரியர்களைப் பற்றியும் இப்பகுதியில் காண்போம்.

வேதாரண்யபுராணம்

திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வாக்கில் வேதாரண்யத்தில் பிறந்தார் என்பது முன்னரே கூறப்பெற்றது. வேதாரண்ய புராணமும் இப்பரஞ்சோதி முனிவரால்தாம் இயற்றப் பெற்றிருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்.[1] பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் காப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச்சிறப்பு, புராண வரலாறு, அவையடக்கம், சுருக்க அடைவு என்ற பகுதிகளையும் தலை வசிட்ட சுருக்கம் முதல் தீர்த்த முத்திச் சருக்கம் வரை 17 சருக்கங்களையும் கொண்ட பெரு நூலாகும். வேதாரண்யம் கோவிலில் மாசிப்பெருவிழா நடந்தது. அப்பெருவிழாவைக் கண்டு மகிழ்தற்காக அருணந்தி தேவன். பரஞ்சோதி முனிவர் முதலியோர் கூடியிருந்தனர். அதுபோது அருணந்திதேவர் பரஞ்சோதி முனிவர்பால் மறைசைப் புராணம் பாடுக என்று சொல்ல அவரும் பாடுவாராயினர்.

" மண்ணிலிவ் வாறுநீடு வளந்தரு மறைவ னத்துள்
அண்ணலா லயத்து முன்னர் அமரர்சூழ் மண்டபத்துக்
கண்ணுதல் மாசித்திங்கள் விழாவணி கண்டு போற்றி
எண்ணரும் தவத்தோர் அங்கண் இருந்தனர் இருந்தவெல்லை"

(புராண வரலாறு – 63)

" அறையுமத் தவத்தோர் கூட்டத்து அருணந்தி தேவன்பூவை
யுறைபரஞ் சோதி வேந்தன் உலகத்துசெந் தமிழினாலே
மறைசையம் புராணம் தன்னை வகுத்திட வேண்டுமென்ன
விறையருள் முன்னால் கண்டவாறு கொண்டியம்பு கின்றேன்"

(புராண வரலாறு 64)

என்னும் பரஞ்சோதி முனிவருடைய கூற்றே அதற்குச் சான்று இப்புராணத்திற்கு பரஞ்சோதி முனிவர் வேதவன புராணம் என்றுதான் பெயர் சூட்டினார்.

" சூதமுனி புகன்றவட மொழிதமிழால் தொகுத்து
வேதவன புராணமென விளம்புவன்யான் உலகில்" (புராணவரலாறு 67)

என்பது அவருடைய மொழியாகும். அவரே இந்நூலை வேறு ஒன்றின் வழிநூல் என்று கூறுவதும் கருத்திற்கொள்ளத் தக்கது. இனி பரஞ்சோதி முனிவர் இயற்றிய இப்புராணத்தில் எங்கும் வேதாரண்யம் என்னும் சொல்லாட்சியைக் காணவே முடியாது. இவ்வூர் வேதவனம், மறைவனம், மறைசை என்றே அழைக்கப் பெற்றிருக்கிறது.

வேதாரண்யம் பகுதி பிற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உம்பர் வளநாடு என்றும் அழைக்கப்பெற்றிருக்கிறது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறவர்மன் வீரபாண்டிய னுடைய அகத்தியான் பள்ளிக் கல்வெட்டு ஒன்றும்[2] அவ்வூரைச் சேர்ந்த முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1299) கல்வெட்டு ஒன்றும்[3] உம்பர் வளநாடான தரணி முழுதுடய வளநாட்டு குன்றூர் நாட்டு திரு அகத்தியன் பள்ளி என்றே அவ்வூரை அழைக்கின்றன. பரஞ்சோதி முனிவர் இயற்றிய வேதவனப் புராணத்தில் வேதவனம் உம்பர் வளநாட்டைச் சேர்நத ஊர் என்னும் குறிப்பு உள்ளது.

" உம்பரொடு மாதவர்கள் காணவுமை யாளைச்
செம்பொன்வரை மீதரும ணம்புணர்சிறப்பைக்
கும்பமுனி காணவருள் கூர்மறைசை வாழும்
நம்பருறையும்பர்வள நாட்டணியு ரைப்பாம்" (திருநாட்டுச் சிறப்பு:10)

" முன்புநர சிங்கவடன் மோதிவரு நாளீ
சன்பதுமன் மாலமரர் தாபதர்கள் இயாரும்
அன்புகொடவ் வேதவன மிதினில் அமர்ந்தார்
என்பதுகொடும்பர்வள நாடெனவி சைப்பார்" (திருநாட்டுச்சிறப்பு11)

இப்பாடற்பகுதியான் உம்பர் வளநாடு என அழைக்கும் இந்நூலுக்கும் – உம்பர் வளநாடு என அழைத்த பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கும் காலத்தால் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என ஆய்தல் வேண்டும்.

தல புராணங்கள் தலத்தின் பெருமையை எடுத்துக் கூறுவதற்காகவே எழுந்தன என்றாலும் – இத்தல புராணத்துள் நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு ஆகிய பகுதிகளில் இலக்கிய நயம் வாய்ந்த அழகிய பாடல்களைக் காணலாம். வேதாரண்யம் முல்லை நிலம்சான்றதாகத் திகழ்ந்தமையால் ஆக்கள் மிகு எண்ணிக்கையில் விளங்கின. ஆக்கள் தம்முடைய பாலை கன்றினுக்கு அருந்திய பின்னரும் எச்சமாக இருக்கவே முல்லையங் காவினில் பொழிய வேண்டியதாயிற்று. அவ்வாறு பொழியப் பெற்றபால் பாய்ந்தெழுந்து ஒன்று சேர்ந்து ஆறு போலப் பெருக்கெடுத்து ஓடியது. இக்காட்சி பாற்கடலைஅங்கு காண்பது போலாயிற்று.

" ஆவினம் கன்றினுக் கருத்தி மிக்கபால்
பூவினின் முலைபொறாப் பொழிய முல்லையங்
காவினில் பாய்ந்தெழு காட்சி சம்புவண்
தீவினும் பாற்கடல் திகழ்தல் போலுமால்" (திருநாட்டுச்சிறப்பு 28)

மற்றுமொரு அழகிய காட்சி. நெருங்கிய காட்டில் வேல்போலும் விழிகொண்டு, தலையில் தயிர் சுமந்து ஆய்ச்சியர் ஒய்யாரமாக நடையிட்டுச் சென்றனர், 'நடையிலும், விழியிலும் பேரழகு கொண்டவர் நாங்களே' என இறுமாப்புக் கொண்டிருந்தமான் இனம் ஆய்ச்சியரின் விழி கண்டும், நடையில் மயங்கியும் நாம் தோற்றோம் என ஒதுங்கி ஓடத்தொடங்கின சக்கரவாகப்புள் அம்மங்கையரின் அழகுமொழிக்குத் தோற்று அஞ்சி ஓடினவாம் (சகோரம் – சக்கர வாகப்புள்)

" மல்கிய சகோரமும் மானி னங்களும்
நல்குர விடைமட நடைகொள் ஆய்ச்சியர்
வெல்கணை விழிமுலை மேன்மை கண்டுகண்டு
ஒல்கியவ் வனந்தொறும் ஒதுங்கி யோடுமால்" (திருநாட்டுச்சிறப்பு29)

என்பது அழகிய அப்பாடற்பகுதியாம் வேதாரண்யம் கடலை அவர் நன்றாக நோக்கினார். அக்காட்சி அவர்க்கு இல்லறத்தார் படும் துயரத்தையே எடுத்துக் காட்டியது.

" கலையெனப் புடவிசூழ்ந்த கடலெடுங் கரையின் மீதோர்
அலைபுக அதன் பின் மற்றோர் அலைபுகுந்து அலைக்கும் காட்சி
நிலையிலா இல்லறத்தில் நின்றவர் தம்மைத் தாவி
யுலைதுயர் ஒன்றின் மேன்மற்றொருதுயர் உறுவதொக்கும்."

(இலிங்கோத்பத்திச் சருக்கம் – 6)

வேதாரண்யத்தில் கோயில் கொண்டுள்ள இறைவன் (லிங்கம்) இராமனுடைய வழிபாட்டுக்காகத் தோன்றியது (சுவயம்புவாக) என்பது பரஞ்சோதி முனிவருடைய கருத்தாகும்.

" உறைவுறு கமலத்தோனும் அக்கணத்துகாந்தத் தோறும்
மறைவுறு பொருளாய் நிற்குமென்றுமுன் மதித்த லிங்கம்
குறைவுறு கருணைக் குன்றாய்க் கோடிசெங் கதிர்களென்ன
நிறைவுறு தழற்பி ழம்பாய் நின்றிட நேரே கண்டான்"

(இலிங்கோத் பத்திச் சருக்கம் – 40)

[கமலத்தான் – இராமன்]

என்னும் பாடற்பகுதி அக்கருத்தை விளக்கும். தண்ணீர்ப்பந்தல் வைத்தவர்பெறும் பெருமையை அழகாக ஒரு பாடலில் சொல்லுவார். வேதாரண்யத்தில் காரைக்குடியைச் சார்ந்த நகரத்தார் இருவர் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் நடத்துவது குறிப்பிடத் தக்கது.

" ஒத்தருங் கோடைதன்னில் ஒருபலம் தண்ணீரேனும்
இத்தலத் துதவினாக மிரவியை யுறுங்கால் மேரு
அத்தனை பசும்பொன் மேலாம் தலந்தனில் அளித்தா லொக்கும்
வைத்தவர் தண்ணீர் பந்தர் மனிதரே ஈசராவர்"

(தல விசிட்டச் சருக்கம் – 49)

பரஞ்சோதி முனிவர் வேதவனத்துத் தலத்தின் பெருமையை ஏனைய சிறந்த தலங்களோடு ஒப்புக்காட்டி – அவற்றினின்று பன்மடங்கு விஞ்சியது என அழகாக, ஆணித்தரமாக ஒரு பாடலில் கூறியுள்ளார்.

" காசியில் இறக்கமுத்த கமலையிற் பிறக்கமுத்தி
தேசுறு சிதம்பரத்தைத் தெரிசிக்க முத்தியாகும்

மாசிலா மேன்மை பூண்ட மறைசையம் பதியோகூறில்
ஆசறு தீர்த்தம் தன்னில் ஆடவே யளிக்குமுத்தி''

(தலவிசிட்டச் சருக்கம் -26)

தலபுராணத்தின் கடமையை மிகச் சிறப்பாகச் செய்துள்ளது பரஞ்சோதி முனிவரின் வேதாரண்ய புராணம் எனலாம். இப்புராணத்திற்கு வேதாரண்யம் பிரதோஷ மடாதிபராயிருந்த மா. சோமஸ்கந்த பட்டாரகர். அவர்கள்[4] வசன சங்கிரகம் ஒன்றை எழுதியுள்ளார்.

அகோர தேவரின்வேதாரண்ய புராணம்

இவரை அகோர முனிவர், அகோரசிவத் தியாகராச பண்டாரம், அகோரத்தம்பிரான் என்றும் அழைப்பர். இவர் திருவாரூர்க் கோயிலில் அபிடேகக் கட்டளைப் பொறுப்பை நடத்திவந்தார். கமலை ஞானப் பிரகாசருடைய வழியில் வந்த சைவத்துறவியாவர். இலக்கண வைத்திய நாத தேசிகரின் தந்தைார் வான்மீகநாத தேசிகரிடம் தமிழ் பயின்றார். சிதம்பரத்தில் வாழ்ந்த திருமாளிகைத் தேவரிடம் வடமொழி கற்றார். தம்முடைய குருவின் பிள்ளையாகிய வைத்திய நாத தேசிகருக்குக் கல்வி கற்பித்து அறிஞராக்கினார்.

திருவாரூர்க் கோவிலுக்கு இவரால் ஏராளமான சொத்துக்கள் சேர்ந்தன என்பர். இவரது திருவுருவம் திருவாரூர்க் கோயில் வடக்குக் கோபுரவாசலில் உள்ளது. இவர் சிலகாலம் கட்டளை மேற்பார்வை செய்தபின் காஞ்சிபுரம் சென்று அங்கு இறந்தார் என்பர்.

இவர் கும்பகோணப் புராணம், வேதாரண்ய புராணம், திருக்கானப்பேர் புராணம் என்று தல புராணங்களே பாடியுள்ளார்[5] இவர் பாடியுள்ள வேதாரண்ய புராணம் 77 சருக்கங்களையும், 3245 விருத்தங்களையும் உடைய பெரிய நூலாகும். அகோர தேவர் தம்மைப்பற்றித் தாமே சொல்லிக் கொள்ளும் வேதாரண்ய புராணப் பாடலிது.

" துணிவரும் ஆரியம் முற்றும் தோய்ந்துளம்
தணிவறத் தமிழ்க் கடலளக்கும் தன்மையான
மணிவளரின் ஒலிமறைசைத் தீந்தமிழ்
அணிபெற அருளினன் அகோர தேவனே" (பாயிரம் – 18)

இப்புராணத்திலும் வேதாரண்யம் – மறைசை, வேதவனம், மறைவனம் என்றே அழைக்கப்பெறுகிறது. இந்நூல் பாயிரம், கடவுள் வாழ்த்து என்றும், வரன்முறைச் சருக்கம் தொடங்கி நாரதச் சருக்கம் வரை சருக்கங்கள் என்னும் படலங்களையும் கொண்டு விளங்குகிறது. இந்நூலிலும் இலக்கிய நயம் வாய்ந்த பாடல்கள் உள்ளன.

" விரிந்த பூவருந்திய மேதி மென்முலை
சொரிந்த பாலருந்திய வாளை துள்ளிவான்
புரிந்தமீன் போற்பொழில் புகுந்துபூந்துகள்
பரிந்து பொன்மணி யுறைபண் பிற்றாகுமே"

(வரன்முறைச் சருக்கம்–104)

எருமையின் மிகுதியும், வாளைமீன்கள் துள்ளிக்குதிக்கும் நெய்தலங் கானல் அழகும் பிறவும் இப்பாட்டில் சுவை படச் சொல்லப் பெற்றிருக்கிறது.

வேதாரண்ய மாகாத்மியம் :

வேதாரண்யம் கோவிலுக்குச் சமஸ்கிருதத்தில் செய்யப் பெற்ற வேதாரண்ய மாகாத்மியம் என்று ஒரு நூலும் உள்ளது. நூல் கிரந்த எழுத்துக்களால் எழுதப் பெற்றும். அதற்கு ஏற்ற தமிழ் மொழிபெயர்ப்பு கொடுக்கப் பெற்றும் நூல் அச்சிடப் பெற்றுள்ளது.

"இப்பேர்ப்பட்ட வேதாரண்யத்தின் மாகாத்மியம் ஸநத்குமாரஸம்மிதை,. சூதஸம்மிதை, காளிகாகண்டம், பிரம்மா காண்டம், பிரம்மகைவர்த்த மென்கிற ஐந்து புராணங்களில் தொண்ணூற்றியொன்பதத் தியாயத்தால் விரிவாய் வெளியிடப் பட்டிருக்கின்றது. அதனைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்

பெறுகிறது'' என்று அந்நூலின் முகவுரை கூறும். ஸ்தல லிங்கத்தினுற்பத்தி, கோலாகலன் சரித்திரம், கல்யாண தெரிசனம், ஆதிசேது யாத்திரை, யாக்ஞவல்க்கியரின் கதை, ஆதித்தியன் கதை, நாசி கேதுவின் உற்பத்தி, விடங்கரின் வரவு என்று வேதாரண்யம் கோவிலைச் சார்ந்த புராணக் கதைகள் இந்நூலுள் ஏராளமாகக் கூறப்பெற்றுளளன.

புராணக் கதைகள்

தலத்தினுடைய பெருமையைக் கூறுவதற்காகத் தல புராணங்கள் தோன்றின. தல புராணங்களில் தலத்தினுடைய பெருமை பெரும்பாலும் கதைகள் மூலமாகவே சொல்லப் பெறுகின்றன. அவற்றைத் தல புராணக் கதைகள் என்று சொல்லலாம். புராணக் கதைகளைப் பற்றிய ஆய்வு தலபுராணங் களின் நோக்கத்தையும் – தலபுராணம் எழுந்த காலத்தின் சமுதாயச் சிந்தனைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளுதற்கு உதவும். பாரதம் போன்ற இதிகாசக் கதை நிகழ்ச்சியோடு தங்களைச் சேர்த்துக் கூறுவதனைத் தமிழ் மன்னர்கள் எவ்வாறு பெருமையாகக் கருதினார்களோ அதைப்போன்று திருத்தலங் களும் புராண இதிகாச மாந்தர்களோடு தொடர்பு கொண்டிருந் தமையினை அந்நாளைய தமிழர்கள் பெருமையாகக் கருதினர். எனவே, ஒவ்வொரு கோவில் மீதும் புராணக் கதைகள் ஏற்றிச் சொல்லப்பெற்றன. கோவிலைச் சார்ந்த புராணக் கதைகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று புராண இதிகாச மாந்தர்க ளோடு தொடர்புடைய கதை, மற்றொன்றுஇதிகாச மாந்தரோடு தொடர்பில்லா புதிய கதை இக்கதைகள் பெரும்பாலும் தல புராணங்களிற்றாம் காணப் பெறுகின்றன. எனவே கோவில் களுக்குப் புராணப் பெருமை கூறும் வழக்கு பிற்காலத்தியது என்று கருதல் கூடாது. இவ்வழக்கு பக்திப் பாடல்கள் தோன்றிய காலத்துக்கு முன்பே தொடங்கப் பெற்றுவிட்டது. தேவார ஆசிரியர்களே பல திருத்தலங்களுக்குப் புராண இதிகாசப் பெருமையினைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள்.[5]

திருமாலினுடைய வாமன அவதாரம் மாபலிச் சக்கர வர்த்தியை அடக்குதற்காக ஏற்பட்டது. அத்தகு மாபலி எவ்வாறு மாவலியைப் பெற்றான். ஒரு நாள் இரவு அர்த்தயாமம் முடிந்து வேதாரண்யம் கோவில் கதவு திருக்காப்புச் செய்யப்பெற்றது. அப்போது கருவறையில் எரிந்த விளக்கு மங்கத் தொடங்கியது. அவ்விளக்கைத் தூண்டி எரியச் செய்வாரக்கு இம்மையில் அரச பதவியையும். மறுமையில் சிவகதியையும் அளிப்பேன் என்று அப்பன் அம்மையிடம் கூறினார். கதவு சாத்திய பிற்பாடு யார் விளக்கைத் தூண்டப போகின்றார்கள் என்று அம்மை நகைத்தாள்! எங்கிருந்தோ ஓர் எலி பசியால் உந்தப்பட்டு அவ்விளக்கில் உள்ள நெய்கை குடிக்க வந்தது. குடிக்க வந்த வேகத்தில் எலியின் வால்பட்டு விளக்கு பிரகாசமாய் எரிந்தது.

" நாக்கி னொல்லை பருகநெய் நாசியுள்
தாக்க வன்னியப் போது தபித்தெலி
மூக்கை நூக்கிட வேயது மூலமா
யாக்க அச்சுடர் தூண்டிடீ மன்னதாய்.[7]

இவ்வாறு தூண்டிய எலிக்கு மறுபிறவியில் மாபலிச் சக்கர வர்த்தியாகும் மாவரம் தந்தான்இறைவன்.

" மலை மடந்தையிவ் வாறுரை செய்யுமுன்
கலையு கந்த கரத்தனும் அவ்வெலிக்கு
உலக மூன்றும் ஒருகுடை யாள்வதற்கு
அலகி லாவரம் அன்றருள் செய்தனன்.[8]

பரஞ்சோதி முனிவருடைய இப்பாடல் மாபலிக்கு இறைவன் தந்த அருளை நன்றாக உணர்த்தும். இம் மாபலியின் முற்பிறப்பு வரலாற்றுக் கதை திருநாவுக்கரசர் காலத்திலேயே வழக்கில் இருந்தது.

" நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகம் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனாரே"

குறுக்கை வீரட்டப் பதிகத்தில் திருநாவுக்கரசர் மறைக்காட்டுச் கோவிலை சேர்ந்த இதிகாச புராணக்கதையைக் கூறியுள்ளார். எனவே, இதிகாச புராணக் கதைகளைக் கோவிலோடு தொடர்பு படுத்திக் கூறும் வழக்கம் தலபுராணக் காலத்திய தன்று. மிகப் பழமை வாய்ந்தது என்பதை உணர்தல் வேண்டும் மேற் கூறப்பெற்ற கதையால் மறைக்காட்டிறைவன் பெருமையும், கோவிற்கு விளக்கு வைப்பார் பெரும் பயன்பெறுவர் என்பதும் உணர்த்தப்பெற்றன.

இராமனோடும், அகத்தியரோடும் வேதாரண்யம் தொடர்பு படுத்திக் கூறப்பெறுகிறது. இராவணனைக் கொன்ற வீரஹத்தி நீங்கியது இத்தலத்தில்தான் அம்மட்டுமன்று இலங்கைக்குப் பாலம் அமைக்க முதலில் இராமன் தேர்ந்தெடுத்த இடமே வேதாரண்யம்தான் என்றும் புராணக் கதைகள் கூறும். எனவே வேதாரண்யம் கடலை ஆதிசேது என்றும் அழைப்பர். புராணக் கதைகளில் வரும் ஒருகருத்து சமயத்தில் இரு கோவில்களுக்குச் சொல்லப்பெறுவதும். உண்டு. இராமன் இலங்கையினின்று திரும்பி வந்து இறைவனை வழிபட்ட இடம் இராமேஸ்வரம் என்று திருநாவுக்கரசர் பாடலே அறிவிக்கிறது. ஆனால் வேதாரண்ய புராணங்கள் இராமன் வேதாரண்யத்தில் இறை வனை வழிபட்டதாகக் குறிப்பிடும்.

திருவாரூர், திருநள்ளாறு, நாகப்பட்டினம், திருக்காராயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய ஏழு இடங்களில் சப்தவிடங்கர் உள்ளனர். 'சுவயம்பு என்பது தானகாத் தோன்றுவது, விடங்கர் என்பது உருவாகக் கிடப்பது' என்று சுவயம்புலிங்கத்திற்கும் விடங்களுக்கும் உள்ள வேறுபாடு முன்னரே கூறப்பெற்றன. இவ்வேழு தலங்களிலும் ஏழு விடங்கர் எவ்வாறு வந்தன? இதற்கு வேதாரண்ய புராணங்களில் கதையொன்று உள்ளது.

தேவர்கள் அசுரர்கள் போரில் தேவர்களால் வெல்ல முடியவில்லை. அசுரரை வெல்வதற்காகத் தேவர்கள் மண்ணுலகி

லிருந்து சூரியகுலத்தில் தோன்றிய முசுகுந்தனை அழைத்துச் சென்றனர். முசுகுந்தன் உதவியால் தேவர்கள் அசுரரை வென்றனர். வெற்றியின் நினைவாக இந்திரன் முசுகுந்தனுக்குச் சப்தவிடங்கரை அளித்தான். அவற்றை திருவாரூர், திருமறைக் காடு முதலான இடங்களில் வைத்து முசுகுந்தன் வழிபட்டான். மறைக்காட்டில் அவன் வைத்தது புவனி விடங்கராகும்.

" அடங்க லாதமா மேன்மையென் றறிந்துபின் மறைசை
இடங்க ணித்திரண்டாவதென்று இசைத்திடும் புவனி
விடங்கர் தம்மையு நாட்டிலே மீண்டு நன்னாகை
தொடங்கி மற்றுள விடங்கரும் இருத்திமுன் தொழுதான்"

(புவனிவிடங்கச் சருக்கம்–38)

பரஞ்சோதி முனிவருடைய இப்பாடல் அக்கருத்தை நன்றாக உணர்த்துதல் காணலாம்.

அடிகுறிப்புகள் :

1. கலைக்களஞ்சியம் தொகுதி 6 பக்கம் : 743
2. தொ. கு. க. தொகுதி 17:542
3. மேலது 549
4. வசன சங்கிரம் – பாடல வசன நடையில் படுத்தல்
5. தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியும் பகுதி –.1
6. பக்தி இலக்கியம் – ப. அருணாசலம், பக்கம் 71–72
7. பரஞ்சோதி முனிவர் வேதாரண்ய புராணம். மாவலிச் சருக்கம் (8)
8. வேதாரண்ய புராண மாவலிச் சருக்கம் (11)

12. கல்வெட்டுச் செய்திகள்

வேதாரண்யம் வேதாரண்யேஸ்வரர் கோவிலில் 101 கல்வெட்டுக்கள் 1904 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பெற்று கல்வெட்டு ஆண்டு அறிக்கையில் அறிக்கை வெளியிடப் பெற்றது. பின்னர் முழுக் கல்வெட்டுக்களும் 13, 17, 19 என்ற தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதிகளில் வெளியிடப்பட்டன.

இவற்றுள் சோழர் கல்வெட்டுக்கள் 98 ஆகும். விஜயநகரக் கல்வெட்டு இரண்டு ஆகும். மராத்திக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. முதலாம் இராஜராஜன் உட்பட முற்காலச் சோழர் கல் வெட்டுக்கள் 66 என்றும், முதலாம் குலோத்துங்கன் தொடங்கி பிற்காலச் சோழர் கல்வெட்டுக்கள் 32 என்றும் சோழர் கல் வெட்டுக்களை வகைப்படுத்தலாம். முற்காலச் சோழர் எழுத்துப் பாணியில் ஒரு கல்வெட்டுள்ளது. அது எந்த அரசனுடைய பெயரையும் குறிப்பிடாது 'யாண்டு 16' என்று மட்டுமே தொடங்கு கிறது[1] மற்றுமொன்று சமசுகிருதக் கல்வெட்டு கிரந்த எழுத் தாலாய இக்கல்வெட்டு பராந்தக சோழனுடைய கல்வெட்டின்[2] நேரடிமொழி பெயர்ப்பாக விளங்குகிறது[3] பிறிதொன்று ஆட்சியாண்டு சிதைந்து 'ராஜராஜன்' என்று தொடங்குவது. இதன் எழுத்தமைதியைக் கொண்டு இது மூன்றாம் ராஜராஜன் கல்வெட்டு என்று முடிவு செய்யலாம்.[4]

சோழர் கல்வெட்டுக்கள் :

ராசகேசரி என்னும் பட்டப் பெயர் புனைந்த முதலாம் ஆதித்தன் காலக் கல்வெட்டுக்கள் 9 உள்ளன. 'கோப்பர கேசரிபன்மர்' எனத் தொடங்கும் பரகேசரி கல்வெட்டுக்கள் 11 உள்ளன. இது எழுத்து அமைதியால் முற்காலச் சோழர் பாணியை உடையது என்றாலும் எம்மன்னனைச் சார்ந்தது என அறிதற்கு அரிதாக உள்ளது. இவை உத்தம சோழன் காலத்தியவையாகக் கருதப்படுகின்றன. அடுத்து மதுரையும் ஈழமும் கொண்ட மதுரை கொண்ட கோப்பரகேசரியாகிய பராந்தக சோழன் காலத்திற்கென 38 கல்வெட்டுக்கள் உள்ளன. இவனுக்கு அடுத்தது மாபெரும் பேரரசன் முதலாம் ராஜராஜ தேவனுடைய கல்வெட்டுக்களே. இவன் காலக் கல்வெட்டுக்கள் மொத்தம் ஏழு. இது காறும் கூறப்பட்ட கல்வெட்டுக்களை வேதாரண்யேஸ்வரர் கோவில் சுவர்களில் தேடினால் கிடைக்க மாட்டா. இவையனைத்தும் தூண் கல்வெட்டுக்களாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. முற்காலச் சோழர் கல்வெட்டுக்களுள் பராந்தகசோழன் கல்வட்டுக்களே பேரெண்ணிக்கையில் உள்ளன.

'பிற்காலச் சோழர் கல்வெட்டுக்கள் அனைத்தும் கோவிற் சுவர்களிற்றான் உள்ளன. தலைக்கு ஒன்றாக முதலாம் குலோத்துங்கன் , இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜாதிராஜன் ஆகிய மூவர்க்கும் ஒவ்வொரு கல்வெட்டே இருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கனுக்கு 9, மூன்றாம் ராஜராஜனுக்கு 12, மூன்றாம் ராஜேந்திரனுக்கு 8 என்ற எண்ணிக்கையில் இவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. பிற்காலச் சோழர் கல்வெட்டுக்கள் நன்கு வளர்ச்சியடைந்த எழுத்துக்களில் உள்ளன. சமஸ்கிருதம், மராத்தி என்னும் இரண்டு தவிர பிற அனைத்துக் கல்வெட்டுக்களும் தமிழ் வரிவடிவிற்றும் உள்ளன.

உள்ள இடங்கள்

ஆதித்தன், பராந்தகன், முதலாம் ராஜராஜன் ஆகியோர் கல் வெட்டுக்கள் கோவில் தூண்களில் உள்ளமை முன்னரே கூறப் பெற்றது. இத்தூண் கல்வெட்டுக்களை அரத்த மண்டபம், தியாகேசர் மண்டம், ராமனாதேஸ்வரர் மண்டபம் ஆகிய மூன்று இடங்களிலும் காணலாம். தூண் கல்வெட்டுக்கள் மொத்தம் 66 ஆகும். சுவர்க்கல்வெட்டுகள் கருவறை, அர்த்த மண்டபம் வெளித்திருச்சுற்றுச் சுவர் ஆகியவற்றில் உள்ளன. சுவர்க் கல்வெட்டுகளுள் முதற் குலோத்துங்கன் கல்வெட்டுகாலத்தால் முந்தியதாகும். விஜய நகரர் கல்வெட்டுகள் இரண்டும் உட்கோபுர இடப்பக்கவாயிற் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ளன. இக்கோபுர வாயில் தளத்தில் துளசி மகாராஜாவின் மராத்திக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டில் அரசர்கள்

முதலாம் ஆதித்த சோழன் முதல் மூன்றாம் ராஜேந்திரன் வரை 10 சோழ அரசர்கள் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர். அவர்களுடைய சுருக்கமான வரலாற்றையும், வேதாரண்யம் கல்வெட்டுக்களோடு அவ்வரலாறு இயையும் பாங்கையும் இத் தலைப்பில் காணலாம்.

முதலாம் ஆதித்தன் (கி.பி. 871–907)

36 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன். வேதாரண்யம் கோவிலில் மூன்றாம் ஆட்சியாண்டு தொடங்கி 26 ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. வேதாண்யம் கல்வெட்டுக்கள் இவனை 'கோ இராசகேசரிபந்மர்[5]

'கோவிராஜ கேசரிபன்மன்' என்று அழைக்கின்றன. காவிரி ஆற்றின் இரு மருங்கிலும் இருந்த பாடல் பெற்ற கோவில்களை இவன் கற்றளியாக மாற்றியமைத்தான் என்பர். இவனுடைய ஆட்சிக் காலத்திற்றான் வேதாரண்யம் கோவிலும் கற்றளியாக மாறியிருக்க வேண்டும்.

முதல் பராந்தகன் (கி.பி. 906–952)

நாற்பத்தாறு ஆண்டுகள் சிறக்க ஆட்சி புரிந்த சோழன். 43 ஆம் ஆண்டுவரையிலான கல்வெட்டுக்கள் வேதாரண்யத்தில் உள்ளன. இவனுடைய மதுரை வெற்றி மிகச் சிறப்பானது. இவனை மதுரை கொண்ட கோப்பரகேசரி என்று 7 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டே குறிப்பிடும்[7] கி.பி. 910ல் இவன் மதுரையைக் கைப்பற்றினான் என்பர்[8] மூன்றாம் இராஜசிம்ம பாண்டியனை மதுரையில் வெல்லும்போது மதிரையில் இருந்த பெரும் மதிள்களையெல்லாம் சிதைத்தான் என்ற வரலாற்றுச் செய்தியை வேதாரண்யம் கல்வெட்டு குறிப்பிடும்[9] தோற்ற பாண்டியன் 5 ஆம் காசிபனாகிய இலங்கை மன்னனிடம் செல்ல. பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்து ஈழத்தையும் வென்றான். 43 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவனை மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்று அழைக்கும்.[10] இவன் காலத்து உத்திரமேரூர் குடவோலைக் கல்வெட்டு உலகப் புகழ் பெற்றது.

உத்தம சோழன் (கி.பி. 970–985)

வேதாரண்யத்தில் 'கோப்பர கேசரி பந்மர்' என பதினோரு ''கல் வெட்டுக்கள் உள்ளன.[11] இக்கல்வெட்டுகள் எழுத்தமைதியைக் கொண்டு இவை இராஜராஜனுக்கு முன்னரே வரையப்பெற்றவை என அறியலாம். பரகேசரி எனப் பெயரிட்டு இவை 4 ஆம் முதல் 14 ஆம் ஆட்சியாண்டுவரை கிடைக்கின்றன.

எனவே, இராஜராஜனுக்கு முன்பாக ஆட்சி புரிந்த பரகேசரியாகிய உத்தமசோழன் கல்வெட்டுக்களாய் இவை இருத்தல் வேண்டும் என்று முடிவு செய்யலாம். இக்கல் வெட்டுக்களின் கொடைஞர் களாக நென்மலை நாட்டு கோட்டூர் சிறியான் குவாவனாகிய உத்துங்க பல்லவரையன் (19:83), கருவூர் வியாபாரி சேனன் ஆனமரதகச் செட்டி முதலியோர் குறிப்பிடப் பெறுகின்றனர்.

முதலாம் இராஜராஜன் (கி.பி. 985–1014)

தஞ்சைக் கோயிலை அமைத்து தரணியெங்கும் தமிழகத்தின் புகழைப் பரப்பிய மாபெரும் பேரரசன் ராஜராஜன் 29 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ராஜராஜனுக்கு 22 ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் வேதாரண்யத்தில் உள்ளன. தொடக்க காலக் கல் வெட்டுக்கள் மெய்க்கீர்த்தியின்றி – பழைய மரபைப் பின்பற்றி ''இராசகேசரி என்றே இருக்கும் என்பதற்குத்தக 9 ஆம் ஆண்டு வரையிலான கல்வெட்டுக்கள் இவனை 'கோராஜ ராஜகேசரி பன்மர் என்றே அழைக்கின்றன.

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 – 1126), சோழமன்னர்களுள் 56 ஆண்டுகள் வரை ஆட்சி புரிந்த பெருமன்னன். இவனுடைய 23 ஆம் ஆண்டைய கல்வெட்டு மட்டும் வேதாரண்யத்தில் உள்ளது. இரண்டாம் குலோத்துங்கனின் (கி.பி. 1133–1150) 'பூமேவி வளர்' என்ற மெய்க்கீர்த்தியுடன் கல்வெட்டு இங்குள்ளது. இரண்டாம் ராஜாதிராஜனின் (கி.பி. 1155–1178) வேதாரண்யம் கல்வெட்டு ''மிதுன நாயற்று அபரபக்ஷத்துப் பஞ்சமியும் புதன் கிழமையும் பெற்ற சோதி நாள்'' என்று கொடை கொடுக்கப் பெற்ற 14 ஆம் ஆண்டைக் குறிப்பிடும். இக் குறிப்பைக் கொண்டு தென்னிந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை கி.பி. 1177–78 அல்லது 1180–81 என இரண்டு

காலங்களும் அதற்குப் பொருந்தும் என வரைந்துள்ளது. முன்னதன்படி கி.பி. 1163 என்றும், பின்னுள்ள காலக் கணக்குப்படி அவன் ஆட்சிக்கு வந்தது கி.பி. 1166 என்றும் இருவேறு காலங்கள் கிடைக்கின்றன. பல்லவராயன் பேட்டை சாசனத்தை வைத்து அமைந்த திருசேதுராமன் அவர்களது ஆய்வு இராஜாதிராசனுடைய ஆட்சியாண்டு கி.பி. 1166ல் தான் தொடங்குகிறது எனத் தெளிவாக வரையறுப்பதால் பின்னுள்ள காலக் கணிப்பையே பொருத்தமானது எனக் கொள்ளலாம்.

மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி. 1180–1212) 15 ஆம் ஆண்டுக் கல்வெட்டு மதுரை கொண்டு பாண்டியன் முடித்தலை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்' என்பதால் அவ்வாண்டு வாக்கில் அவன் வீரபாண்டியனை வென்றிருக்க வேண்டும். 20 ஆம் ஆண்டுக் கல்வெட்டு அவனுடைய ஈழ வெற்றியையும்,[12] 32 ஆம் ஆண்டுக் கல்வெட்டு கருவூர் வெற்றி யையும்[13] சேர்த்துக் குறிப்பிடும் எனவே, இவன் மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டு வீரா அபிஷேகமும் விசையா அபிஷேகமும் பண்ணியருளிய 'திரிபுவன வீரதேவன்' எனக் கல்வெட்டுக்களில் புகழப் பெறுவானாயினன்.

மூன்றாம் ராஜராஜன் (கி.பி. 1218 – 1256)

கல்வெட்டுக்களில் எதிராமாண்டு என்னும் குறிப்பு, வேதாரண்யம் கல்லெழுத்துகளுள், இவன் காலத்தில் மட்டுமே காணப்படுகிறது. பராந்தகனுடைய கல்வெட்டு .ஒன்றில்.[14] யாண்டு வந்தநவோர் எண்ணாங்கு'என்று காணப்பெறுவதும் கருதத் தக்கது. எதிராமண்டு என்று வரின் கூட்டிக் கொள்ள வேண்டும்.

மூன்றாம் ராஜேந்திரன் (கி.பி. 1246–1279)

கல்வெட்டில் 'வாணாதிராயன் ஓலை' என்று ஒரு குறிப்பு காணப்படுகிறது.[15] இவன் சடையவர்மன் சுந்தர பாண்டியனை வென்றாலும் இவனோடு எல்லையில்லா சோழப் பேரரசும் முடிவுபெற்றது.

கொடைகள்

கல்வெட்டுக்கள் என்பன பெரும்பாலும் கோவிலுக்குக் கொடுக்கப் பெற்ற கொடைகளையே கூறும். வேதாரண்யத் திலுள்ள அனைத்துக் கல்வெட்டுக்களும் கொடைச் செய்தியைத் தாம் செய்திகளாகக் கொண்டன. கொடைகளை விளக்குக் கொடைகள் பிற கொடைகள் என இரண்டாகப் பகுக்கலாம்.

விளக்குக் கொடை :

101 கல்வெட்டுக்களில் 66 கல்வெட்டுக்கள் விளக்குக் கொடை பற்றியே பேசுகின்றன. திருவாரூர் தேர் அழகு – வேதரரண்யம் விளக்கழகு என்னும் பழமொழியை மெய்ப்பிக்கும் வண்ணம் இவ்வறுபத்தாறு கல்வெட்டுக்களும் கோவிற்கு விளக்கு நல்கியதையே குறிக்கும். விளக்கு வைப்பவரால் அதை எரிப்பதற்கு ஆடுகள், பொன், காசு, நிலம் முதலியவை சேர்த்தே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் ஆதித்தன் காலம் முதல் முதலாம் ராஜராஜன் காலம் வரையிலும் ஒரு விளக்கை எரிப்பதற்காக 90 ஆடுகளே கொடுக்கப்பெற்றன. அக்காலம் வரையிலும் கொடுக்கப்பெற்ற ஆடு எண்ணிக்கையில் மாற்றமே நிகழவில்லை. முதற் பராந்தக சோழன் காலத்தில் ஆடுகளுக்குப் பதிலாக 10 பொன்

கொடுக்கப்பெற்றிருக்கிறது.[16] என்வே 10 பொன்னுக்கு அவன் காலத்தில் 90 ஆடுகள் கிடைத்திருக்கின்றன எனலாம்.

கொடுக்கப் பெற்றது 90 ஆடானால் நிசதம் உழக்கு நெய்யும், கொடுக்கப் பெற்றது 180 ஆடானால் நிசதம் உரி நெய்யும் ஆடு பெற்றுக் கொண்டோரால் கோவிலுக்குக் கொடுக்கப் பெற்றன.

ஒரே கல்வெட்டில் இருவர் ஒன்று சேர்ந்து இரண்டு விளக்குகளை வைத்து. 180 ஆடுகள் கொடுத்தமையையும் காண்கிறோம். ''மலை நாட்டு விழாநாட்டு அமணப் புலத்து சாத்த சான்றன் வைத்த விளக்கு ஒன்று இவ்வூரே சாத்ததாற் மோதிரநார் வைத்த விளக்குக்குமாக ஆடு நூற்றெண்பது''[17] என்ற ஆதித்தன் கல்வெட்டு இதற்குச் சான்றாகும். மேலே குறிப்பிட்ட இருவரும் ஒரே ஊராதலின் தனித்தனியாக இரு விளக்கு வைத்தும், ஒரே கல்வெட்டில் செய்தி பொறிக்கப்பெற்றது எனலாம். ஒரே நாளில் இருவர் விளக்குகள் கொடுத்தால் அவற்றையும் ஒரே கல் வெட்டில் பொறித்து விடுவர்போலும். ஒருவனே இரு விளக்கும் 180 ஆடும் கொடுக்கின்ற தன்மையும் காணப்பெறுகிறது.[18]

அளவைகள் :

நெய்யை அளந்து ஊற்றுவதற்கு 'திருமறைக் காடன்', 'காண நாழி' என்ற இரு அளனாவகள் பயன்படுத்தப் பெற்றன. திருமறைக் காட்டு ஆளவார்க்கு பயன்படுதலால் 'திருமறைக் காடன்' எனப் பெயர் கொடுக்கப்பெற்றது போலும். காண நாழி என்பது பொன்னால் செய்யப் பெற்றிருத்தல் வேண்டும்? முதலாம் ராஜராஜன் காலத்தில் காண நாழியோடு 'கேரளாந்தகன்' நாழி' என்ற புதியதொரு நாழியும் காணப்பெறுகிறது. முதலாம் ராஜராஜசோழனுடைய சேரர் வெற்றியின் நினைவாக வந்தபெயர்

'கேராளந்தகன்' என்பது. இறைவனுடைய பெயரை நாழிக்குச் சூட்டுவதோடன்றி அரசனுடைய பெயரும் அதற்குச் சூட்டப் பெற்றது என்பதற்கு இது சான்றாகும்.

திருமறைக்காடன் என்றிருந்த வழக்கின் பெயர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில். 'வேதவன நாயகன்[19] என்று பெயர் பெற்றது. புதிதாக 'கருநாகரன் நாழி' என்பதும் அவன் காலத்தில் வழக்கில் இருந்தது. இது முதற்குலோத்துங்கன் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் நினைவாக சூட்டப் பெற்ற பெயர் என்று கருதலாம். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விளக்கு எரிப்பதற்கு காக 1500 காசும்,[20] பொலிசையாக 150 காசு வரும் வண்ணம் பொன்னும்.[21] சந்திவிளக்கு மூன்று வேளையும் எரிய 1450[22] காசும் – கொடுக்கப்பெற்றன. மேலே காட்டப்பெற்ற 150 காசை கல்வெட்டு அன்றாடு நற்காசு என்றழைக்கிறது. உதைய அற்தமனம், அற்தனமன உதைய விளக்கும் வைக்கப் பெற்றன.

நிலக்கொடை :

விளக்கெரிப்பதற்காக நிலத்தைக் கொடுக்கும் வழக்கம் மூன்றாம் ராஜராஜன் காலம் முதலாகக் காணப்பெறுகிறது. மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் மலைமண்டலத்து படப்பை நாராயணன் என்பான் திருவிக்கிரமன் சந்தியன்று இரு சந்தி ஆடியருளவும், அமுது செய்யவும், 3 நந்தாவிளக்கு எரியவுமாகக் கொடுத்த 24 வேலி, 6 மா, 3 காணி நிலமே கொடைகளுள் மிகப் பெரியது எனல் தகும்.[23]

இரண்டாம் ராசாதிராசனுடைய ஒரு கல்வெட்டு விளக் கெரிப்பதற்காக நிலம் – திருநந்தாவிளக்குப் புறம் என்றபெயரில் கொடுக்கப் பெற்றதென்பதையும் உணர்த்துகிறது.[24]

வழிபாட்டுக் கொடைகள் :

முதலாம் ஆதித்த சோழன் காலத்திலும் உத்தம சோழன் காலத்திலும் முறையே நிசதி மத்தியான சந்திக்கும் அய்ப்பிகைத் திருநாளுக்கும் மாசித்திருநாளுக்குமாக ஆண்டுதோறும் 40 கலம் நெல்லும்,[25] **புவனி விடங்க தேவர்** திருவாதிரை விழா எழுந்தருளி புகுந்தபோது அமுது செய்வதற்காகக் காணநாழியால் முந்நாழி அட்டுவதற்காக இரண்டு காசும்.[26] கொடுக்கப்பெற்றன. எனவே, இறைவன் அமுது செய்தற்காக நெல் கொடுக்கப் பெற்றதை அறியலாம். மூலஸ்தானத்தின் தெற்கில் வீற்றிருப்பவர் தென்றளி மாதேவர். மாசித் திருநாளுக்காக நாள்தோறும் பதிந்கலமாக ஏழு நாளைக்கு எழுபதிந் கலம் நெல் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இஃது உத்தமசோழன் கல்வெட்டுச் செய்தி[27]

மறைக்காட்டீஸ்வரரே மறைக்காடர் இவருக்கு முதலாம் பராந்தகன் காலத்தில் உத்தரநயநம் பெற்ற சங்கிராந்தி நான்று வேண்டும் திரு அமுதரசிக்காக திருமறைக்காடனால் நிசதம் நானாழி அரசி அட்டுவித்தற்காக 25 கழஞ்சு பொன் கொடுக்கப் பெற்றது.[28] சங்கிராந்தி தொறும் இறை நாழி நெய்யாடியருள் 12 ஆடும் கொடுக்கப் பெற்றன.[29] இராசகசரி எனும் அளவையால் மறைக்காட்டு மகாதேவர்க்கு முந்நாழி தயிர் படைப்பதற்காகவும் பராந்தகன் காலத்தில் நிலம் கொடுக்கப் பெற்றது.[30]

முதல் ராஜராஜன் காலத்தில் நிசதம் இருபல சக்கரைக்காக பாண்டி நாட்டு நாராயணனாகிய செம்பியன் ஏழு காசு வழங்கி யிருக்கின்றான்.[31] ராஜராஜன் சதையத் திருநாளன்று 108 கலசம் ஆடியருள 10 காசு கொடையாகக் கொடுக்கப் பெற்றது.[32]

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் சித்திரை வசந்தத்துக்கும். திருத்தமனாகப் படிக்கும், ஆடியருளவும், அமுது செய்தருளவும் நிலம் கொடுக்கப்பெற்றது.[33] மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் திருவிக்கிரமன் சந்தியன்று இருசந்தி இறைவன் ஆடிஅருளவும் அமுது செய்தருளவுமாக நிலம் கொடுக்கப் பெற்றது.[34] இதுகாறும் கூறப்பெற்றவற்றான் மறைக்காடர் சித்திரை வசந்தம், ஐப்பசி சதையம், தை – சங்கிராந்தி, மாசி மகம் திருவிக்கிரமன் சந்தி முதலிய திருவிழாவிற்காகவும், நித்திய பூசைக்காகவும் நெல், காசு, பொன், ஆடு, நிலம், தயிர் சக்கரை முதலியன கொடைகளாக வழங்கப் பெற்றன என்பதை உணரலாம். மேலும் ராஜராஜன் காலத்தில் பீட பூஜைக்காக 20 காசு கொடுக்கப்பெற்றிருந்தது.[35]

பிற கொடைகள்

பராந்தகன் காலத்தில் வேதம் வல்ல பிராமணர் ஒருவர்க்கு ஜீவிதமாக ஆண்டு தோறும் 60 கலம் நெல் கொடுக்கப் பெற்றது.[36] மறைக்காட்டுக் கடம்பபட்டர் எடுப்பித்த அம்பலத்துக்கு இராவிளக்கிட 100 ஈழக்காசு கொடுக்கப் பெற்றது.[37]

அணிகலன்கள் :

காடுபட்டிகள் மகள் மூத்த கிழானடிகள் என்பாள் பொன்னாலும் வெள்ளியாலும் ஆகிய வெண்சாமரை ஒன்றைக் கோவிலுக்குக் கொடுத்தாள்.[38] மூன்றாம் ராஜராஜன் காலத்தில் மறைக்காட்டு மணவாள நாயனாற்கும் சாத்தியருள்வதற்காக திருநெற்றிமாலை, திருவாரம், உதரபந்தனம், திருப்பிறை, பாகுவலையம், திருக்கைச்சரி, இரண்டு, மான், மழு முதலியனவும் நாச்சியாற்கு திருவபிசேகம், திருநெற்றிமாலை, திருவாரம், திருமுலைத்தடம், முதலியனவும் செய்து கொடுக்கப்பெற்றன.

உதரபந்தனம் என்பது வயிற்றணி. பாகுவலையம் என்பது தோளனி இவை செய்வதற்காக' பொன் ஐம்பத்தேழு கழஞ்சே முக்காலே மஞ்சாடியும், எழுமாக்குச்சைக்கு இடம் வெள்ளி எண்பத்தைங் கழஞ்சரையே மஞ்சாடியும் பிறவும் ஆயின.[39]

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் மழுவாளி செல்வன் என்பான் கோவிலில் ஓர் இறையை எழுந்தருளிவித்து நித்திய பூஜைக்காக நிலமும் வைத்தான்.[40] அவன் எழுத்தருளிவித்த இறைவன் பெயர் கல்வெட்டில் அறிய இயலாதவாறு சிதைந்து போயுள்ளது. மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் கொடுமளூர் கிழவன் திருமறைக் காட்டுடையான் கற்பகப் பெருமான் திருநா மத்துக் காணியாக 2½ வேலி மாகாணி நிலம் வழங்கியுள்ளான்.[41]

முதலாம் ராஜராஜன் காலத்தில் ஏழு காசுக்கு ஆண்டு வட்டியாக 12 அக்கம் கிடைத்தது என்று ஒரு கல்வெட்டு வழி உணரலாம்.[42]

கொடை நல்கிய செம்மலார்

வேதாரண்யம் கோவிலுக்குக் கொடை நல்கிய செம்மலாரைப் பற்றிய ஆய்வு பல புதிய சுவையான செய்தி களைத் தரும் என்று எதிர்பார்க்கலாம் இக் கொடைஞர்களைக் கால வாரியாக நோக்குவதினும் பண்பு வாரியாக நோக்குதலே ஏற்புடையதாகத் தெரிகிறது. கொடை கொடுத்தோரை மறைக் காட்டைச் சேர்ந்தோர், உம்பள நாட்டைச் சேர்ந்தோர். மலை நாட்டைச் சேர்ந்தோர். பாண்டி நாட்டைச் சேர்ந்தோர். அண்டை நாட்டைச் சேர்ந்தோர் என்று வாழ்கின்ற இருப்பிடத்தைக் கொண்டு பகுக்க முடிகிறது. கொடைகளை வியாபாரிகள், அதிகாரிகள் என்றும் பகுத்தும் காண இயல்கிறது. சிறப்பாக

பெண்டிரும் ஏராளமான கொடைகளைக் கொடுத்துள்ளனர் இவர்களைப் பற்றியும் தொகுத்துக் காணலாம்.

மறைக்காட்டுக் கொடைஞர்:

மறைக்காடர்க்கு மறைக்காட்டு ஊரைச் சேர்ந்தவர்களும் கொடைகள் நல்கியுள்ளனர் என்றாலும் பிறவற்றோடு ஒப்பு நோக்க உள்ளூர்க் கொடைஞர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே. உள்ளூரைச் சேர்ந்தவர ஏழு கொடைகளே கொடுத்துள்ளனர். மறைக்காட்டில் பெரும்பான்மையாக சைவர்களே வாழ்ந்தாலும் வைணவத்தைச் சிறப்பாகப் பின்பற்றிய வைஷ்ணவரும் வாழ்ந்தனர். வடக்கிற்றளியில் விஷ்ணு கோவிற்கென மறைக் காட்டில் வாழ்ந்த சூலபாணி பட்டசாலி என்பார் விளக்குக் கொடை தந்துள்ளார்[43] இவர் 'பாஞ்சராத்திரம், வைகானசம் என்ற இரு ஆகமங்களுள் விகனஸ் முனிவரால் உரைக்கப்பெற்ற வைகானசத்தைச் சிறப்பாகப் பின்பற்றியவர். மறைக்காட்டில் கோவிற்பணி செய்வதற்காக ஆதித்த சோழன் காலத்திலேயே 'தேவரிடைச் சான்றார்' எனும் இடையர் அமைப்பு அமைக்கப் பெற்றது. அவ் அமைப்பைச் சேர்ந்த அமரகாலங்காடி, கிழங்காரி என்ற இருவரும் கொடைகள் வழங்கியுள்ளனர். பராந்தக சோழன் காலத்தில் இருந்த கோவில் கணக்கு வழக்குகளை, நோட்டம் செய்யும் 'தண்டீஸ்வரத்தார்' என்னும் அமைப்பினர் ஒன்று கூடி இறைவற்குக் கொடை ஈந்தனர். அவ்வூரில் மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் வாழ்ந்த 'பரம மாமுனி எழுநூற்றுவரும்' நிலம் கொடுத்துள்ளனர். திருமறைக் காடனான சொக்கனும், வீர சோழ அணுக்கன் காடன் மேல் வாயில் என்பானும் கொடுத் துள்ளனர். தம்முடைய பெயரோடு இறைவன் பெயரையும் இணைத்துக் கொள்வதை அவ்வூர் மக்கள் பெருமையாகக் கருதி

இருத்தல் வேண்டும். எனவே, சொக்கன் தன்னை 'திருமறைக் காடனான சொக்கன்' என்று அழைத்துக் கொண்டான். இவன் ஆதித்த சோழன் காலத்தில் வாழ்ந்தவன் வீரசோழ அணுக்கன் 100 ஈழக் காசுகளைக் கொடுத்தவன் ஆதலின் பராந்தக சோழன் காலத்தில் அவ்வூரில் ஈழக் காசுகள் வழக்கில் இருந்தன என்று தேறலாம்.

உம்பள நாட்டார் :

மறைக்காடும் அதனைச் சேர்ந்த பகுதிகளுமே உம்பளநாடு என்று 'ஊரும்பேரும் பகுதியில் விளக்கப்பெற்றது. மறைக்காட்டு ஊரைத் தவிரத்த பிறர் இக்கட்டுரையுள் அடங்குவர். 'ஆதநூர் கிழான் மகன் பாரதாயன் பள்ளி, உம்பள நாட்டுப் 'பால்புலம் கிழான்' சாத்தன் திருமறைக்காடன் என்ற இவ்விருவரும் உழவர் குடியைச் சேர்ந்தவர்கள். உம்பள நாட்டு குமாரமங்கலம் பாரதாயந் உழுந்தங்கண்டன், உம்பள நாட்டு நந்திபுரத்து நக்கி, கிளியூர் பாங்கன் வாயுடையான், குன்றூர் பூசனூர் உடையான் கொற்றம் பெரியன் முதலியோரும் திருமறைக் காட்டிற்கு அண்மையில் உள்ள ஊர்களில் வாழ்ந்து ஈந்து சிறந்தவர்கள் கொடைஞருள் வாகைக் குடி 'சாலாபத்தியன் சோமன் தூவேதி' என்று ஒரு பெயரும் காணப்பெறுகிறது. கொடைஞன் பெயரைச் சொல்லும் போது இன்னார் மகன் என்று கூறும் வழக்கும் கல்வெட்டில் காணப் பெறுகிறது. சான்று செம்பியன் காரைக் காடுடையான் மகன் நக்கன் கலிகேசரி.[44]

பாண்டி நாட்டார் :

மறைக்காட்டுக் கோயில் அக்காலத்தில் புகழ் பெற்ற கோவிலாக இருந்தது. எனவே, அண்டை நாட்டைச் சார்ந்தோரும்

அக்கோவிற்குச் சென்று இறைவனை வழிபட்டு இனிய கொடை களை அளித்துள்ளனர். கொடைகள் நல்குவதில் பாண்டி நாட்டார் சிறிதும் இளைத்தவரல்லர். பாண்டி நாட்டு அள்ளூர்க் குளக்கீழ் மாதநத்து' நக்கன் தூணியும் அள்ளூருடையான் கவையப்பியும் ஒன்று சேர்ந்து கொடுத்துள்ளனர். புகழ்பெற்ற களக்குடி நாட்டு மானநிலை நல்லூரைச் (மானூர்) சார்ந்த கடம்பன் என்பான் வேதம் வல்ல பிராமணர் ஒருவரை கோவிற்கு வேதம் ஓதுதற்காக அமர்த்தினன். கோவிற்கு சக்கரை கொடுத்தவன் முத்தூற்றுக் கூற்றத்து விறைகுடி கிழவன் வேளான் நாராயணனாகிய செம்பியன் கீழ்க்கரை வேளான் என்னும் பாண்டி நாட்டானே மூன்றாம் ராஜேந்திர சோழன் காலத்தில் கரிகால சோழப் பல்லவரையன் என்னும் பாண்டி நாட்டினன் பெயர் காணப் பெறுகிறது.[45]

மலைனாட்டார்:

மலைனாட்டைச் சேர்ந்தார் 5 கொடைகள் தந்துள்ளனர். மலாடுடையான் அகளங்கண் மலையராதித்தன். மலைநாட்டு விழா நாட்டு அமணப் புலத்து சாத்த சான்றன், கங்க பாடிகை மலை நாட்டு மருதூர் நல்லமன், மலைமண்டலத்து படப்பை நாராயணன் முதலியோர் அக்கொடைஞராவர். மலைநாடு, மலைமண்டலம் என்றும் அழைக்கப்பெற்றது.

பிற நாட்டார்:

அளநாட்டு கிழையில் இருந்து வாழும் வெள்ளாட்டி சாத்தன் மல்லி, இடையள நாட்டுச் சிறிஞார் கிழவன் களப்பாள தன்னிச்சை இருவரும் அருகருகு நாட்டைச் சேர்ந்த கொடைஞர் பெருமக்கள் சிறிஞார் கிழவன் களப்பாளன் என்று அழைக்கப்

பெறுவது ஆராயத்தக்கது. இக்களப்பாளன், ஆர்வலக் கூற்றத் துத் திருக்காச்சீர், பெரும்புலியூர் என்ற இரு ஊரைச் சார்ந்தாரும், கொடைஞர் பட்டியலில் வருகின்றனர். புலியூர் நாட்டு சிகாருடையான் திட்டை மாறனும் கொடை கொடுத்துள்ளான். இச்சிகார் என்னும் ஊரைப் பற்றிய ஆய்வு தனியே நிகழ்த்தப் பெற்றுள்ளது. ஓய்மாநாட்டுவேலூருடையான், தொண்டை நாட்டு எழுவன், நின்றயூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான், ஜயங்காட்டுக் கோட்டத்து காக்கலூர் நாட்டு பொத்தூர் மாம்பாற் கிழான், மருகல் நாட்டு பொக்காக்குடையான், கானத்தூர் நாட்டு அக்களூர்க்காணி உடைய கானத்தூர் கிழவன். திருக்கானப்பேர் நாட்டு உரசடம் உடையான் என்ற இவர்களெல்லாம் தமிழகத்தின் வெவ்வேறு மூலைகளில் வாழ்ந்து வேதாரண்யம் கோவிலில் வழிபட்ட பெருமக்கள் போக்குவரத்து நிறைந்த இக்காலத்தில் இருந்து கொண்டு அவ்வசதி குறைந்த அக்கால மக்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டே எவ்வாறு ஒரு கோவிலில் கூடினர் என்று நினைத்துப் பார்க்கும்போது வியப்பினும் வியப்பே மேலிடுகிறது.

மருகல் நாட்டு பொக்காக்குடையான் இயற்பகையாண்டான் என்று அழைக்கப் பெறுகிறான்.[46] மருகல் திருத்தொண்டர் ஊரான திருச்செங்காட்டங்குடியை அடுத்ததிருமருகல் ஆகும். எனவே இவன் திருத்தொண்டர் புராணம் கூறும் இயற்பகை நாயனாருடைய நினைவாக இப்பெயரைக் கொண்டனன் போலும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கொடைஞன் ஒருவன் ''கங்கை கொண்டான் ராசராச தேவரான பொத்தப் பிச்சோழன் என்று அழைத்துக்கொண்டான்.[47] எனவே, இவன் முன்னர் ஆண்ட தம்முடைய சோழ அரசன்பால் ஆராக் காதல்

கொண்டவன் போலும். திரு ஒற்றியூர், கொடுமளூர் என்ற இரண்டு ஊர்களிலிருந்து வந்து கொடை கொடுத்தோரும் உளர்.

அதிகாரிகள்

சோழர்கள் காலத்தில் அரசியல் தலைவர்களாயும் சபையினராயும் விளங்கியவர்களும் வேதாரண்யம் கோவிற்குக் கொடைகள் வழங்கியுள்ளனர். **அருணிதி கலியன்** என்பான் முதற்பராந்தக சோழ அரசனுடைய அதிகாரிகளுள் ஒருவன். சோழ நாட்டு மருதூர் என்னும் ஊரவன். இவனைப்பற்றி ஆனைமலை நரசிங்கப் பெருமாள் குடைவரையிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு கூறும். மருதூர் என்பது தஞ்சை மாவட்டத்திலுள்ள மருதூர் ஆகும். இம் மருதூர் புறங்கரம்பை நாட்டைச் சேர்ந்தது என்று பராந்தக சோழன் கல்வெட்டுக்கள் கூறும். வேதாரண்யம் கல்வெட்டு இவனை 'பரகேசரி பந்மர் அதிகாரி புறங்கரம்பை நாட்டு மருதூர் மருதூருடையான் அருணிதி கலியன்' என்று பெருமிதமாய்க் கூறும்.[48] இவன் பராந்தக சோழனுடைய 28 ஆம் ஆட்சியாண்டியில் வேதாரண்யம் கோவிலுக்கு விளக்கு ஒன்றையும் அதற்காக 90 ஆடும் கொடுத்துள்ளான்.

சோழர் காலத்து அதிகாரிகள் என்று வீரசோழ அணுக் கரையும் கூறலாம். பராந்தக சோழன் காலத்தில் இருந்த வீரசோழ அணுக்கருள் ஒருவனாகிய காடன் மேல்வாயிலும், மூன்றாம் குலோத்துங்க காலத்து வீரசோழ அணுக்கனாகிய இளையாழ்வான் திருவிடை மருதுடையானும் கொடைகள் கொடுத்துள்ளனர். மூன்றாம் ராஜராஜன் காலத்தில் ராஜேந்திர சோழ வளநாட்டு பெரிஞாரில் 'நியாயத்தார்' என்னும் ஒரு அமைப்பு இருந்தது. இதைச் சேர்ந்தாருள் ஒருவனாகிய திருவரங்க மாராயன் என்பான் நிலம் கொடுத்துள்ளான்.

கொடைஞருள் குன்றூர் யாளும் எயினநூர் வெள்ளாளன் நாரணன் சாத்தன் என்று ஒருவன் குறிக்கப் பெறுகிறான். குன்றூர் என்பது குன்றூர் நாட்டின் தலைமையிடம். எனவே, இவன் முதலாம் ராஜராஜன் காலத்து அதிகாரிகளுள் ஒருவன் எனலாம். முதலாம் ராஜராஜன்பால் பேரன்பு கொண்ட ராசராசவாஜ்யமா ராயர் அவனுடைய பிறந்த நாளாகிய சதைய விழாவை வேதாரண்யம் கோவிலில் சிறப்பாகக் கொண்டாடுதற்குக் காசுகள் கொடுத்துள்ளான். மக்களும் அதிகாரிகளும் மன்னன்பால் பக்தி பூண்டு விளங்கினர் போலும்.

சிறுமுத்தரை ஊரவர் என்னும் அமைப்பினரும், பாரத்துவாசி பெரிய நம்பி திருத்துறைப் பெருமாள் என்பாரும் நிலக் கொடை கொடுத்தவராவர்.

கொடைப் பெண்டிர்:

முதலாம் ஆதித்தசோழன் தன்னுடைய 23ஆம் ஆட்சி யாண்டில் பல்லவரோடு மணம் கொண்டான். ஆதித்த சோழ னோடு தொடர்பு கொண்டவள் காடுபட்டிகள். இக்காடு பட்டிகள் என்னும் பெயரே இவள் பல்லவ மரபினள் என்பதை உணர்த்தும்.[49] இக்காடுபட்டிகளுக்கு முத்தகிழானடிகள் என்று ஒரு மகள் இருந்தாள் என்று வேதாரண்யம் கல்வெட்டு உணர்த்துகிறது[50] அம்முத்தகிழானடிகள் பராந்தக சோழனுடைய 38 ஆம் ஆட்சியாண்டில் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப் பெற்ற வெண்சாமரை ஒன்று கோவிற்கு நல்கியிருக்கின்றாள். மூவேந்த வேளார் என்று பட்டம்பெற்ற இருவருடைய தேவிமார் கொடை கொடுத்துள்ளனர்.

மற்றொருவர் வேதாரண்யம் கல்வெட்டில் தஞ்சாவூரில் விச்சாதிரப்பெருந்தெருவில் கழனாடிகள் என்று குறிப்பிடப் பெறுகிறார்.[5] ஆதலின் இவள் தஞ்சாவூரில் உள்ள விச்சாதிரப் பெருந்தெருவில் வாழ்ந்திருக்க வேண்டும். இவளது வேலைக் காரியாக காரி சாத்தி என்பாள் இருந்தாள். இவளை வேளத்துப் பெண்டாட்டி காரி சாத்தி என்றனர். கோவிலுக்கு இவள் தன் மக்களைக் கொண்டு கொடை கொடுக்கச் செய்துள்ளாள். பராந்தக சோழன் காலத்தில் தஞ்சாவூரில் வாழ்ந்தாளாக பெரிய வேளத்து பெண்டாட்டி இலத்தநங்கை என்பாளையும் அறிகிறோம். திருவாரூர் பெரிய கோயிலில் நாயனார் பாரிகை நங்கை பரவை, சோழமானார் மணவாட்டி நங்கையார் நக்கன் வரகுனி, சிறுவாய் முகம் பெரியாண்டாளான அன்னதான நங்கை, ராஜேந்திர சிங்கபுரத்து சாந்திக்கூத்தி தேமாங்குடிப் பெருந்திருவாட்டி முதலிய பெண்டிரும் கொடை கொடுத்துள்ளனர். எனவே, அரசி, அரசியைச் சார்ந்தோரேயன்றி நாட்டிய மகளிரும், கோவில் பணிபுரியும் மகளிரும் பிறரும் கோவிற்குக் கொடை நல்கும் அளவிற்கு உரிமையும் செல்வமும் பெற்றுத் திகழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை.

வணிகர்கள் :

மலைனாட்டு அரிமுக்கபுரத்து வியாபாரி புல்லுஞ்சிறு நம்பி, கருவூர் வியாபாரி சேனன் ஆன மரதக செட்டி, உய்யக் கொண்டான் பட்டினத்து வியாபார் நெல்வேலியுடையான் செல்கலாண்டான், குலோத்துங்க சோழபட்டினத்து வியாபாரி சுந்தரன் அநபாய தேவன், திருவாரூர் கூற்றுத்து தந்திரத்து வியாபாரி காடன் கலி தொங்கல் முதலிய வணிகர்கள் மறைக்காட்டுக் கொடைஞர் களாவர். பல பகுதிகளிலிருந்து மறைக்காட்டிற்கு இவ்வியாபாரிகள்

வியாபாரம் செய்யவந்தபோது இக்கொடைகள் கொடுக்கப் பெற்றிருத்தல் வேண்டுமென்று கருதலாம். வியாபாரிகள் பெய ரோடு, விளநாட்டு அரும்பூர் மாணிக்கச் செட்டி என்றவாறு செட்டி என்னும் சொல்லாட்சி கலந்துள்ளமையும் நோக்கத் தக்கது.

சாத்திக்கொடுத்த கொடைகள்:

பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்து பெரு வெற்றி கண்டான். அவ் வெற்றியை நல்கியவன் இறைவனே என்று மக்கள் கருதினர் போலும் எனவே வெற்றியை ஈந்த மறைக்காட்டு இறைவற்கு இடையூர்க் குரிசில் குணவன் என்பான் விளக்குக் கொடையை நல்கி மகிழ்ந்தான்[52]. இது பராந்தகனுடைய 32 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சி. போலும் பராந்தகனுடைய 37 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் பெரிய வேளத்து பெண்டாட்டி இலத்த நங்கையினுடைய மகளின் நன்மை கருதி இவள் தம்பியர் இருமுடிச்சோழ அனுக்கிலிச் சாமநாச்சனும் கனாச்சனும் கொடை நல்கினர்[53]. தங்கையின் நலனுக்காகவும், தம்பியின் நலனுக்காகவும் கொடை கொடுத்த அண்ணன்மாரும் உளர். சாத்துக் கொடைஎன்பது ஒருவர்மற்றொருவரின்நன்மையைச்சார்த்திகொடுக்கும் கொடையாம்.

குழு அமைப்புக்கள்

சோழ மன்னர்களின் ஆட்சி சிறப்புற்றிருந்த மைக்கும் நாட்டுமக்கள் பன்னலங்களும் எய்தி அமைதியாக வாழ்ந்து வந்தமைக்கும் முதற்காரணம் அக்காலத்தில் ஊர்தோறும் நிலைபெற்றிருந்த மன்றங்களின் தன்னலமற்ற தொண்டேயாகும். இத்தகைய அமைப்புக்களை இப்பகுதியில் காலவாரியாகக் காணலாம். கல்வெட்டுக்களில் கொடையைப் பெற்றுக் கொண்டார் யாவர் என்று கூறப் பெறுகின்றனர். அவர்களைத் தொகுத்து நோக்க

அக் காலத்தில் இருந்த அமைப்புக்கள் (அவை) தெள்ளிதின் புலனாம்.

ஆதித்தன் காலக் கல்வெட்டுக்களில் தேவரிடைச் சான்றார் என்ற ஓர் அமைப்பு மட்டுமே காணப்பெறுகிறது. தேவராகிய இறைவனுக்குப் பணி செய்வதற்கென்று அமைக்கப் பெற்ற இடையர் குழுவை தேவரிடைச் சான்றார் என்றனர். வேதாரண்யத்தில் பராந்தகன் காலத்தில் திருக்கோயிலுடையார், தேவரிடைச்சான்றார் பன்மா ஹேஷ்வரர், பதிபாதமூலத்தார் என்ற நால்வகை கோவில் அமைப்புக்கள் இருந்தன. திருக்கோயி லுடையார் தேவதாநத்தார் என்றும் உறுப்பினர்கள் தேவகன் மிகள் என்றும் அழைக்கப் பெற்றனர். பொதுவாக ஆடுகள் தேவரிடைச் சான்றார் பாலே கொடுக்கப் பெற வேண்டும். ஆனால் பராந்தக னுடைய 7ஆவது ஆட்சியாண்டில் ஆடுகளைத் திருக்கோயி லுடையார் பெற்றிருக்கின்றனர். கோயிற்கு வரும் பொன், காசு முதலியவைகளை மேற்பார்வையிடுவதற்காக இவ்வமைப்பு அமைக்கப் பெற்றது என்று கூறலாம். உப்பில் குமாரனடிகள், குமாரப் பித்தன் என்ற இருதேவதாநத்தார் பெயர் கல்வெட்டால் அறிய முடிகிறது[54]. இவர்கள் கோயில் காரியம் தவிர அம்பலத் திற்கு இராவிளக்கிடுவதற்கான மேற்பார்வையையும் சேர்த்துக் கொண்டனர்[55].

ஒருவர் விளக்கெரிப்பதற்காகப் பொன்னும் ஆடும் கொடுத்தார். பொன்னை திருக்கோயிலுருடையாரும் ஆடுகளை தேவரிடையரும் பெற்றுக் கொண்டனர். எனவே ஆடுகள் தேவரிடையரிடமே ஒப்படைக்கப்பெற்றன. பராந்தகன் காலத்து தேவரிடைச் சான்றருள் 'அமரகாலங்காடி' என்பான் ஒருவன்

பெயரை அறியமுடிகிறது[56]. கிழங்காரி என்பானும் தேவரிடையன் போலும்.

ஒருவன் கோவிலில் வேதம் ஓதுவதற்காக வேதம் வல்லான் ஒருவனுக்கு ஜீவிதமாக அறுபது கழஞ்சு பொன்னை வைத்தான். நறுகடம்பிச் சதுர்வேதி மங்கலத்தார் அதனைப் பெற்றுக் கொண்டு வேதம் வல்ல பிராமணரைப் பொறுக்குதற்கு, மறைக்காட்டில் இருந்த மூன்று அமைப்பினர் பால் பொறுப்பை ஒப்படைத்தனர். அவர்கள் தேவகன் மிகள் பன்மாகேஸ்வரர். பதிபாதி மூலத்தார் ஆவர்[57]. எனவே இம்மூவரும் வேறு வேறு அமைப்பினர் என்று உணர்தல் வேண்டும். பன்மாஹேஷ்வரர் என்பார் சைவசமயத் தைச் சார்ந்தவர். பதிபாதமூலத்தார் பூசை செய்வோரைக் கொண்டசபையினர். தகுதியுள்ளவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்காக இக்கால அமைப்புக்கள் போன்றன அன்றும் இருந்தன என்பது இனிய செய்தி கோவில் கணக்குகளை நிர்வகிப்பதற்காக தண்டீஷ்வரத்தார் எனும் அமைப்பும்[58] வீரசோழ அணுக்கர் என்னும் அமைப்பும் அமைப்பினர் கூடுதற்காக அம்பலம் ஒன்றும்[59] பராந்தக சோழன் காலத்திலே இருந்தன.

முதலாம் ராஜராஜன் காலத்தில் தேவகன்மிகள், தேவரிடைச் சான்றார். கிராம கிழவர்கள், ஸ்ரீ காரியம் ஆராய்வர் முதலியோர் அடங்கிய அமைப்புக்கள் தனித்தனியே இருந்தன. ராஜராஜன் சதய விழாவை தேவகன்மிகள், கிராம கிழவர்கள், கண்காணி, ஸ்ரீ காரியம் ஆராய்வார் கண்காணி முதலியோர் வேதாரண்யத்தில் ஆண்டுதோறும் நடத்தினர்[60] கிராமகிழவர்கள் உழவுத் தொழில் செய்யும் நாட்டாராக இருத்தல் வேண்டும். இராஜராஜன் காலத்தில் புதிதாக உம்பளநாட்டு பிரமதேய மகாசபை அமைக்கப் பெற்றது[61]

இது பிராமணர்கள் அடங்கிய சபை. பராந்தகன் காலத்தில் உம்பள நாட்டு நாட்டார் அமைப்பு அமைக்கப் பெற்றது போன்று இவன் காலத்தில் ஒரு நாட்டிற்கான மாசபை அமைக்கப் பெற்றது போலும். மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து பிராமணர்கள் மிகு செல்வாக்குப் பெறத்தொடங்கியிருக்க வேண்டும். இவன் காலத்தில் மறைக்காட்டில் கோவிலுக்கு வரும் பொன்னைப் பெற்று ஒழுங்கு படுத்தற்காகவே அமைக்கப் பெற்ற பதினைவர் அடங்கிய பிராமணர், முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப் பிராமணர், முந்நூற்று அறுபது வட்டத்து காணி உடைய சிவப்பிராமணர் என மூன்று சிவப் பிராமணர் அமைப்புகள் இருந்தன. மூன்றாம் குலோத்துங்கனுடைய தொடக்க ஆட்சியாண்டில் 15 பேராக, இருந்து பின்னர் படிப்படியாக 30 வட்டம், 320 வட்டப் பிராமணர் என உயர்ந்த னர். என்று கூறமுடியாது. ஏனென்றால் ஒரே ஆட்சியாண்டில் 15 பேரும் முப்பது வட்டத்துப் பிராமணரும் காணப் பெறுதலால். இனி 15 பிராமணரே முப்பது வட்டத்துக்காணி உடைய சிவப்பிரா மனராயும் ஏன் இருக்கக் கூடாது என்று கருதுதலும் தவறாம் என்னயெனில் ஒரே கல்வெட்டு 15பேர் பிராமணர் குழுவும் மற்றுமுள்ள முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமணரும் கொடையைப் பெற்றுக் கொண்டனர் என்று கூறுதலால்[62]. விளக்கு எரிப்பதற்காக கொடுக்கப் பெற்ற பொன்னைப் பெற்ற பதினைவர் அந்தணர் பெயர்களையும் இரண்டு கல்வெட்டுக்கள் வழி அறிகிறோம்.[63] **அவர்கள் பின்வருமாறு:**

1. கவுதமந் உமையாழ்வான் ஆதித்ததேவனான திருமறைக் காடுபட்டன.
2. கங்கை கொண்டானான அண்டமுற நிமிர்ந்த பட்டன் (இவன் மேலவன் தம்பியாவான்)

3. மருந்தான நாயகர் தேவபட்டன

4. அரிகண்டதேவன் ஆளுடையான் மாணிக்க கூத்தன்

5. அரிகண்டதேவன் உய்யக் கொண்டாநான இராசராச பட்டன்

6. அரிகண்டதேவன் ஆதித்ததேவனான எதிரிலி சோழபட்டன்

7. வேதவனமுடையான் பிள்ளநான விக்கிரம சோழபட்டன்

8. ஆதித்தன் அந்தியர் காலகெதியான குன்றூர் நாட்டு பட்டன்.

9. தேவன் பெருமாநான நாற்பத்தெண்ணாயிர பட்டன்

10. திருமறைக் காட்டு உடையான் பெருமாநான குலோத்துங்க சோழபட்டன்.

11. ஆதிதிரையன் திருவையாறுடையான் பெருமாநான வேதவன நாயக பட்டன

12. ஒமயிந்தன் முத்தான தேவநாந ஆலால சுந்தரபட்டன்

13. பாரத்துவாசி பிச்சன் பெருமாநான பழியஞ்சிபட்டன்

14. பஞ்சநெதிப் பிராநான ஆதித்தபட்டன்

15. திருச்சிற்றம் பலமுடையான் சங்கரநான திருமறைக் காடு பண்டிதன்

அந்தணர்கள் தங்கள் பெயரோடு அரசர்கள் பெயரையும் தாம் பிறந்த ஊர்ப் பெயரையும் தம்முடைய கோத்திரப் பெயரையும் இணைத்துக் கொள்கின்றமையை அவர்கள் பெயர்களிலிருந்து அறியலாம். அரிகண்ட தேவன் என்று அழைத்துக் கொள்ளும் மூவரும் அண்ணன் தம்பிகளாய் இருக்கலாம். பராந்தக சோழன் காலத்தில் இருந்தது போல மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் வீரசோழ அணுக்கர்

என்னும் அமைப்பைச் சேர்ந்த இளையாழ்வான் திருவடை மருதுடையான் என்பவன் மறைக் காட்டில் வாழ்ந்திருக்கின்றான.[64] மூன்றாம் இராஜராஜன் காலத்தில் முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமணர், தேவகன் மிகள், தேவரிடையர் என்ற மூன்று அமைப்பும் இருந்தன. தேவகன்மிகள் அமைப்பில் அடங்கிய ஆதி சண்டேசுரத்தார், சீபண்டாரத்தார் என்று அழைக்கப் பெறுகின்றனர். இந்த சீ பண்டாரத்தார் வசம் கோவிலுக்கு அடிமைகளை ஒப்பண்டத்தனர்[65] எனவே இவ்வமைப்பார் அடிமைகளை ஏவல் கொள்ளவும் உரிமை பெற்றிருந்தனர்.

குன்றூர் நாட்டு பட்டன், ஆசாற்றூருடையான், சீமாஹோவரக் கண்காணி பெரிய திருமறைக் காட்டுப் பிரான். விரிக்குழலழகிய மாராயன் என்பார் ராஜராஜன் காலத்தில் மறைக்காட்டில் தேவர்கன்மிகளாய் ஊழியம் செய்தவர்[66].

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் மற்றுமொரு புதிய செய்தியைக் காண்கிறோம். கொடை ஆடாக இருப்பின் தேவரிடையரும் பொன் நிலமாக இருப்பின் சிவப் பிராமணர் பாலும் கொடுக்கப் பெறுதலே மரபு ஆயின் இம் மரபுக்கு மாறாக விளக்கெரிக்கக் கொடுக்கப் பெற்றகாசைத் தேவரிடையர் பெற்றுக் கொண்டனர் இதன் காரணம் ஏன் என்று பலப்பட வில்லை. 1. குலோத்துங்க சோழகோன், 2. நாற்பத்தெண்ணுயிர கோன், 3. கண்ணப்பகோன், 4. வேதவனக் கோன், 5. குடும்ப பொன்னன் உமைபங்கனான குன்றூர், நாட்டுக்கோன், 6. களத்தூர் நாட்டு மழவராயக் கோன் ஆகிய அறுவரும் பெற்றுக் கொண்டனர்.[67] சோழர்கள் காலத்தில் நாயனார் கதைகள் நன்கு பரவியிருந்தது போலும். திருவாரூரில் வாழ்ந்த ஒருத்தி பரவை என்று பெயர் வைத்துக் கொண்டாள் மற்றொருவன் இயற்பகையாண்டான்

என்று பெயர் வைத்துக் கொண்டான். இங்கே இடையன் ஒருவன் கண்ணை அப்பிய வேடனாகிய கண்ணப்பன் பெயரைச் சூட்டிக் கொண்டான். மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் பரம மாமுன் எழுநூற்றுவர் என்னும் புதிய அமைப்பு காணப்பெறுகிறது.[68] எனவே முனிவர் பெயரால் எழுநூறுபேர் சேர்ந்த அமைப்பு ஒன்று மறைக்காட்டில் இருந்து தன்னலமற்ற சமயப்பணி செய்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம் இவர்கள் துறவிகளாகவோ வாணிகர்களாகவோ இருத்தல் வேண்டும். பராந்தகன் காலத்தில் காணப் பெற்ற உம்பள நாட்டு அமைப்பாகிய 'உம்பள நாட்டு நாட்டார்' என்னும் அமைப்பு இவன் காலத்திலும் திகழ்ந்தது[69] ஆதலின் இவ்வமைப்பு பராந்தகன் காலம் தொடங்கி மூன்றாம் ராஜோந்திரன் காலம் வரையிலும் உழவர் பெருங்குடி மக்கட்கு வேண்டும் உதவிகளை அரசிடம் பெற்றுத் தந்தது எனலாம். முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமணரும் இவன் காலத்தில் வாழ்ந்தனர்.

கல்வெட்டுகளில் நாடும் ஊரும்

வேதாரண்யம் கல்வெட்டுக்களிலிருந்து அறியலாகும் நாடுகளையும் ஊர்களையும் வகைப்படுத்தி அவை இன்று எங்ஙனம் இருக்கின்றன என்று ஆராய முற்படுவது இப்பகுதி[70].

உம்பள நாட்டு ஊர்கள்:

வேதாரண்யம் பகுதியே உம்பள நாடு என்பது முன்னரே தெளிவாக்கப் பெற்றது. குமாரமங்கலம், காரைக்காடு, பால்புலம், நாற்றுணிக் கிளியூர், திலக்காணம், நறுகடம்பிச் சதுர்வேதி மங்கலம், தாமரைப் பூண்டி, கிளியூர், குலோத்துங்க சோழபட்டனம், ராஜேந்திரசிங்கபுரம், குந்தவை சருபபேதி

மங்கலம் முதலிய ஊர்கள் உம்பள நாட்டு ஊர்களாக அறியப் பெறுகின்றன. இங்கு கூறப் பெற்றவை இன்று எப் பெயரில் விளங்குகின்றன என்று அறிதற்கு இயலவில்லை. ஆயின் சில ஊர்களை இன்று அறிய முடிகின்றன. இடையூர்[71] ஆதநூர்[72] என்பன இன்றும் அப்பெயராலே திருத்துறைப்பூண்டி வட்டத்துள் உள்ளன. குன்றூர்[73] என்பது குன்னூர் என்றும் பூசனூர் என்பது பூசலாங்குடி என்னும் பெயராலும், வெட்டை வயல்[74] என்பது வீரன் வயல் என்றும் இன்று அழைக்கப் பெறுகின்றன. கல்வெட்டில் வரும் தேமாங்குடி[75] என்னும் ஊர் மாங்குடி தேத்தாகுடி என்ற இரு ஊர்களுள் ஒன்றாக இருக்க வேண்டும் மேலே கூறப் பெற்றவற்றுள் குமாரமங்கலம். நறுகடம்பிச்சதுர் வேதி மங்கலம், குந்தவை சருப்பேதி மங்கலம் என்ற மூன்றும் அந்தணர்கள் வாழ்ந்த ஊராகும். உம்பள நாட்டு நுந்திபுரம் (17:483) என்பது திருவாரூர்க்கு அருகுள்ள தேவதான ஊராகும். கருணாகர நல்லூர் என அதற்கு வேறு ஒரு பெயரும் இருந்தது[76].

அண்டை நாட்டு ஊர்கள்:

ஆதித்தன் கலவெட்டில் திருவாரூர் குறிக்கப் பெறுகிறது. பராந்தகன் கல்வெட்டால் திருவாரூர் கூற்றம். நின்றயூர் நாடு ஆர்வலக் கூற்றம் புறங்கரம்பை நாடு, அளநாடு முதலிய நாட்டுப் பிரிவுகளை அறிகிறோம் செங்கை மாவட்டம் திருவள்ளூர் வட்டமே நின்றயூர் நாடு ஆகும்[77] மன்னார்குடி திருத்துறைப் பூண்டி வட்டங்களுள் ஒரு பகுதி ஆர்வலக் கூற்றம் எனப்பெற்றது. ஆர்வலம் என்னும் ஊர் இன்று ஆலிவலம் என மாறிக் காணப் பெறுகிறது. பராந்தகன் காலத்தில் மன்னார்குடி திருத்துறைப் பூண்டி வட்டங்கள் புறங்கரம்பை நாடு எனப் பெற்றன. நாகப் பட்டினம் பகுதி அளநாடு ஆகும். மேலே கூறப்

பெற்ற புறங்கரம்பை நாட்டைச் சார்ந்த மருதூர் இன்றும் அப்பெயரால் தான் விளங்குகிறது. இம் மருதூரில் தான் பராந்தகனுடைய அதிகாரியாகிய மருதூருடையான் அருணிதி கலியன் பிறந்தான் பராந்தகனுடைய காலத்தில் தஞ்சாவூர் புறம்படி, உள்ளாலை என இரு பகுதிகளாய்த் திகழ்ந்தது. நகரத்தின் உள்பகுதி உள்ளாலை என்றும் வெளிப்பகுதி புறம்படி என்றும் அழைக்கப் பட்டது[78]. உத்தம சோழன் காலத்தில் மன்னார்குடி வட்டம் நென்மலி நாடு என்று அழைக்கப் பெற்றது. (19:83) நென்மலி என்னும் ஊர் இப்போது நெமலி எனச் சிதைந்து உள்ளது. நென்மலி நாட்டு கோட்டூர் என வேதாரண்யம் குறிப்பிடும் ஊர் இன்றும் உள்ளது.

சிகார்:

கல்வெட்டு இவ்வூரை புலியூர் நாட்டுச் சிகார் (17:468) என அழைக்கும். இவ்வூர் வரலாற்றில் தனித்த இடம்பெற்றுள்ளது. புலியூர் நாடு என்பது நாகப் பட்டினம் வட்டமாகும். நாகப் பட்டினம் பகுதியில் 'சிகார்' என்னும் பெயரோடு இன்றும் இவ்வூர் இருப்பதைக் காணலாம். முதன் முதலாக இவ்வூர் முதலாம் இராஜராஜன் கல்வெட்டில் வருகிறது. இவ்வூரைச் சேர்ந்த மல்லாண்டார் என்னும் பெயர் பெற்ற சோழகோனார் என்பான். திருத்துறைப் பூண்டி கோவிற்குப் பஞ்சமுக வாத்தியம் என்னும் இசைக் கருவியைச் செய்து கொடுத்து வரலாற்றுப் பொன்னேட்டில் சிகாரையும் தம்முடைய பெயரையும் நிலை நிறுத்திச் சென்றிருக்கின்றான். பஞ்சமுக வாத்தியத்தில்

> " இக்குடவிழா சமைப்புத்திட்டார் சிகாருடையார்
> மல்லாண்டாரான சோழ கோனார்"

என்று அதனுடைய எடையையும் பொறித்து வைத்துள்ளான்.[79]

திருத்துறைப் பூண்டி வட்டத்துள் புகழ் பெற்ற ஊர்களுள் ஒன்று தலைஞாயிர். திலைஞாயிறு என்றும் இவ்வூரை மக்கள் அழைக்கின்றனர். வேதாரண்யம் கல்வெட்டுக்கள் இவ்வூரை இடையளநாட்டுச் சிறிஞார் (17:509) என்றும், ராஜேந்திரசோழ வள நாட்டு பெரிஞார் (17:460) என்றும் அழைக்கின்றன. முன்னது முதல் ராஜராஜன் கல்வெட்டு, பின்னது மூன்றாம் ராஜராஜன் கல்வெட்டு எனவே மூன்றாம் ராஜராஜன் காலத்தில் இடையள நாடு என்றிருந்த தலைஞாயிருபகுதி, ராஜேந்திர சோழ வளநாடு என்று மாற்றம் பெற்றிருக்கிறது. இனி பெரிஞார், சிறிஞார், தலைஞார் என்ற மூன்றும் ஒரே ஊராகுமா என்னும் வினா எழுதல் இயல்பே. வேதாரண்யம் பகுதியில் ஒரு ஊரே ஒன்னாஞ்சேர்த்தி இரண்டாம் சேர்த்தி (சேத்தி) மூன்றாம் சேர்த்தி என்று விடுதலே இத்தகு பெயரமைப்பிற்குக் காரணமாகும். எனவே கிழக்கே தலையில் இருந்த ஊர் தலைஞார் என்றும் (தலைஞாயிறு பாண்டியன் கல்வெட்டு ஒன்று. அவ்வூரை தலைஞாரான மதுராந்தகிச் சதுரவேதி மங்கலம் என்கிறது. இடையில் இருந்த சிறிய பகுதி சிறிஞார் என்றும். இறுதியாக இருந்த பெரிய பகுதி பெரிஞார் என்றும் அழைக்கப் பெற்றன எனலாம். இனி இவ்வூரின் பெயர்க் காரணம் இன்னதென புலப்படவில்லை தலைஞாயிரு என்பது தலைஞாயிர் தலைஞார் என்று வந்திருக்கலாம். என்று ஒரு கருத்து உள்ளது. ஞாயிறு புறப்படக் கூடிய கடலோரம் இவ்வூர் இருப்பதால் இக்காரணம் சொல்லப் பெறுகிறது. ஞாயிர் என்பதற்குத் தாய்மார் என்று ஒரு பொருளும் உள்ளது. இவ்வூரில் அழகிய சோழர்காலத்துக் கோயில் ஒன்றும் (திருமாகாளம் கோயில்) பிற்காலப் பாண்டியர் காலத்துக் கோயில் ஒன்றும் உள்ளன.

இடையள நாட்டைச் சார்ந்தது. தலைஞாயிறுக்கு அருகில் உள்ள ஊர் இப்போது மணக்குடை என்று அழைக்கின்றனர். வேதாரண்யம் கல்வெட்டு மணற்குடை என்றே அழைக்கும் (17:535) மணல் மேடுகள் திட்டுத் திட்டாகச் சேர்ந்து குடைபோலக் காணப்பெற்றன போலும் ஒட்டக் கூத்தர் இங்குதாம் பிறந்தார் என்று அவ்வூரினர் சொல்லிக் கொள்கின்றனர்

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு கானத்தூர் நாட்டு கல்யாணபுரங்கொண்ட சோழபட்டினம் என்று ஓர் ஊரைக் குறிக்கிறது(17:458). கானத்தூர் நாடு என்பது திருத்துறைப் பூண்டி வட்டத்தின் ஒரு பகுதியாம். கல்யாணபுரங்கொண்ட சோழ பட்டினம் என்பது இன்றுள்ள கரியாபட்டினமாக இருக்கலாம் என்று எ.சுப்பராயலு தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கல்யாணபுரம் என்பது மேலைச் சளுக்கியர் தலைநகரமாகும். முதல் இராசாதிராச சோழன் மேலைச் சளுக்கியர் தலைநகரை தீக்கிரையாக்கி அதனைக் கைப்பற்றி அங்கு வீராபிடேகஞ் செய்து கொண்டமையால் கல்யாண புரங்கொண்ட சோழன் என்று வழங்கப்பெற்றான். அவ்வெற்றியின் நினைவாக கல்யாண புரத்தினின்று துவாரபாலர் படிமம் ஒன்றை எடுத்து வந்தான். ''ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீவிசயராசேந்திரதேவர் கல்யாணபுரம் எறிந்து கொடுவந்த துவாரபாலர்'' என்று வரையப் பெற்றுள்ள அப்படிமம் இப்போது தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ளது. ஆதலின் இத்தகு சிறந்த வெற்றியின் நினைவாகத் திருத்துறைப் பூண்டிப் பகுதியில் .'கல்யாணபுரங் கொண்ட சோழ பட்டினம்' என்று ஒரு நகரம் அமைக்கப் பெற்றது என்று கருதலாம். இனி மூன்றாம் ராஜராஜன் கல் எழுத்து ஒன்று கொடுமளூர்(17:536) என்னும் ஊரைக் குறிப்பிடுகிறது. இது கொடும்பாளூராக இருக்கலாம்.

பாண்டி நாட்டு ஊர்கள்:

பாண்டி நாட்டைச் சேர்ந்த சில நாடு, ஊர்ப் பெயர்களையும் அறிய முடிகின்றது பாண்டி நாட்டு அவ்வூர்க் குளக்கீழ் (17:522), பாண்டி நாட்டு களக்குடி நாட்டு மானநிலைநல்லூர் (17:495), திருக்கானப்பேர் நாடு (17:339), நெல்வேலி (17:455) என்பனவாம்.

மலைநாட்டு ஊர்கள்:

மலைநாட்டு ஊர்களென, மலைநாட்டு விழா நாட்டு அமணப்புலம் (13:318). மலை நாட்டு அரிமுக்கபுரம் (13:205), மலைமண்டலத்து படப்பை(17:491), கங்கபாடிகை மலைநாட்டு மருதூர்(17:415), என்பன குறிக்கப் பெறுகின்றன. கங்க பாடிகை என்பது இராஜராஜன் மெய்க் கீர்த்தியில் கங்கபாடி என்று குறிக்கப் பெறுகிறது. இக் கங்கபாடி என்பது மைசூர் இராச்சியத்தின் தென் பகுதியும் சேலம் மாவட்டத்தின் வடபகுதியும் தன்னகத்துள் கொண்ட நாடு ஆகும்.

ஒரு பராந்தகன் கல்வெட்டு தொண்டை நாட்டை (13:487), குறிப்பிடுகிறது. 'ஓய்மானாட்டு வேலூர்' ஆதித்தன் கல்வெட்டில் குறிப்பிடப் பெறுகிறது(13:25) விழுப்புரம். செஞ்சி, திண்டிவனம் வட்டங்கள் அடங்கிய பகுதியே ஓய்மானாடு ஆகும். (17:205, 222,236), ஒரு கல்வெட்டு கருவூரையும் (19:216) அங்கு வணிகர்கள் மிகுதியாக வாழ்ந்தனர் என்பதையும் கூறுகிறது.

மறைக்காட்டுப் பெயரினர்

சோழர்கள் காலத்தில் தம்முடைய பெயரோடு தாம் பிறந்த ஊர்ப் பெயரையோ, தாம் வாழும் ஊர்ப்பெயரையோ, தமக்குப்

பிடித்தமான ஊர்ப் பெயரையோ, தம் நெஞ்சில் குடிகொண்டுள்ள இறைவன் வாழும் ஊர்ப் பெயரையோ இணைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது மறைக்காடு என்னும் பெயரை தம் பெயரோடு பெயராக ஒட்டிக்கொண்டார் பலர். மறைக்காட்டுக் கல்வெட்டுக் களிலும் பிறவூர் கல்வெட்டுக்களிலும் வாழ்கின்றனர். மறைக்காடு என்ற பெயரைவிட அதற்கு மக்கள் வழங்கிய வேதவனம் என்னும் பெயரே பெயர்களில் மிகுதியாக இயைந்துள்ளன வேதாரண்யம் கல்வெட்டுக்களில் இருந்து பராந்தக சோழன் காலத்திலேயே இப்பழக்கம் இருந்தது என அறிகிறோம். பால்புலம் என்னும் ஊரில் வாழ்ந்த கிழான் சாத்தன என்பான் தன்னை திருமறைக்காடன் என்று அழைத்துக் கொண்டான் (17:507). சீர்த் மறைக்காடனான திருவெள்ளறைச் சாக்கை என்பவன் திருவிடை மருதூரில் உள்ள கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றான் (5:718) இவன் இராஜராஜ சோழனுடைய அண்ணன் இரண்டாம் ஆதித்த சோழன் காலத்தில் வாழ்ந்தவன்

> " இமையவள் ஆடிய கொட்டிச் சேதம்
> பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
> கூத்தச் சாக்கையன் ஆடலில் மகிழ்ந்து" (நடுகற்காதை–77)

எனவரும் சிலப்பதிகாரப் பகுதியால் சாக்கை என்பது சங்க காலம் தொட்டு தமிழகத்தில் நடந்து வரும் ஒரு வகைக் கூத்து என உணரலாம்.

வேதவன முடையான் என்னும் பெயரில் எளிய மாந்தரேயன்றி அரசியலில் பெரும் மாற்றத்தை விளைவித்த அரசியல் அதிகாரிகளும் இருந்திருக்கின்றனர். மேலே குறிப்பிடப்பெற்ற இருவருள் வேதவனமுடையான் அம்மையப் பனான பல்லவராயன் இரண்டாம் ராசாதிராச சோழனிடம் அமைச்சர் தலைவனாக விளங்கியவன்.

திருச்சிற்றம் வேதனமுடையான் கருணாகர தேவனான அமரகோன் என்பவர், மேலே கூறப்பெற்றவரின தம்பியாக இருக்கலாம். இவன் திருவலஞ்சுழியிலுள்ள திருச்சத்திமுற்றக் கோயிற்கு 5 விளக்கும் வைத்து அவற்றிற்குக் கொடையும் நல்கியுள்ளான்.

இரண்டாம் குலோத்துங்கனுடைய அவைக்களப் புலவர் 'தொண்டை மண்டலத்தில் களத்தூர்க் கோட்டத்தைச் சார்ந்த மருத்தூருடையான் குன்றன் திருச்சிற்றம்பல முடையார் என்பவர் ஆவர். இவர் பையூரடையான் வேதவன முடையான் மீது ஒரு நூல் பாடி இரும்பூதி என்ற ஊரைப் புலவர் முற்றூட்டாகப் பெற்றார். பெற்ற அவ்வூரை அப்புலவர் பையூர் சிவன் கோயிற்குக் கொடுத்தார் என்று புதுக்கோட்டைப் பகுதிக் கல்வெட்டு ஒன்று செப்புகிறது.

வேதவனம் என்னும் பெயரைக் கொண்டார் சிலர் மறைக்காட்டிலும் வாழ்ந்திருக்கின்றனர். கௌதமன் உமையாழ் வான் ஆதித்ததேவனான திருமறைக்காடுபட்டன். ஆத்திரையன் திருவையாறு டையான் பெருமாநான வேதவன நாயகபட்டன் என்ற இருவரும் மூன்றம் குலோத்துங்கன் காலத்தில் கோவிற் பணி செயவோராய் மறைக்காட்டில் வாழ்ந்தனர். (17: 445) பெயரோடு ஊர்ப்பெயரை இணைத்துக் கொள்ளும் வழக்கம் விஜயநகர மன்னர்கள் காலம் வரை நீண்டு வந்தது என்று சொல்லலாம். மறைக்காட்டில் உள்ள பிரதாபதேவ மகாராயர் காலத்துக் கல்வெட்டு வேதவனப் பிரமராயன். திருமறைக் காடுபட்டன் வேதவன நம்பி என்ற மூவர் பெயரைத் தெரிவிக் கிறது.[71] (17: 531) மறைக்காட்டிலே இம்மூவரும், வாழ்ந்து பணிபுரிந்தமை. அறிய முடிகிறது. ராஜராஜனுடைய கலைக்

கண்களில் அகப்பட்டு தஞ்சைக் கோவிலில் பணிபுரிந்த மறைக்காட்டு ஊரினர் பலராவர். அவர்களைப் பற்றி இப்பகுதி விளக்கும்.

தஞ்சைக் கல்வெட்டில் திருமறைகாட்டினர்

வழக்குக் குன்றியிருந்த தெய்வத்தமிழ் தேவாரத் திருப்பதிகங்களை மீண்டும் கோவில்களில் ஒலிக்கச் செய்தான். ராஜராஜன் திருப்பதியம். பாடுவார் 48 பேரைக் கோயிலில் நியமித்தான். இந்த நாற்பத்தெண்மருள்(48) மறைக்காட்டைச் சேர்ந்த இருவர் இருந்தனர் (2:65) அரையன் அணுக்கனான திருமறைக்காடன் தர்மசிவன், மறைக்காடன் நம்பி அரூரனான ஞானசிவன் என்னும் இருவரே அவர்கள்.

பல ஊர்களில் இருந்து நாட்டியப் பணி புரிதற்காகத் தஞ்சாவூர் வரவழைக்கப் பெற்ற 400 தளிச் சேரிப் பெண்டிர் தங்குதற்காக ராஜராஜன் தஞ்சாவூரில் ஐந்து சிறகுகள் அடங்கிய குடியிருப்புப் பகுதி ஒன்றை அமைத்தான். தெற்குத் தளிச சேரித் தென் சிறகில் மொத்தம் 92 வீடுகள் இருந்தன. அவ்வீடுகளுள் பன்னிரண்டாம் வீட்டில் நக்கன் மறைக்காடு என்பாளும், எழுபத்து மூன்றாம் வீட்டில் திருமறைக் காட்டு நக்கன் மாதேவி என்பாளும், 91 ஆம் வீட்டில் திருமறைக்காட்டு நக்கன் சாத்தி என்பாளும் வசித்துவந்தனர். இவ்வீடுகளுள் நாற்பத்து மூன்றாம் வீட்டில் மறைக்காட்டைச் சேர்ந்த 'திருமறைக்காட்டு நக்கன் மாறி' என்பாள் வசித்து வந்தாள்.

வடக்கில் தளிச்சேரித் தென்சிறகில் மொத்தம் 95 வீடுகள் இருந்தன. அவற்றுள் நாற்பத்து நாலாம் வீட்டில் 'திருமறைக் காட்டு நக்கன் நி... என்பாள் வசித்து வந்தாள் 400 தளிச்சேரிப் பெண்டிரில் மறைக்காட்டைச் சேர்ந்தோர் ஐவராவர்.

நட்டவஞ் செய்வார் :

தஞ்சைக் கோயிலில் இராஜராஜனால் நட்டவம் செய்ய எழுவர் நியமிக்கப் பெற்றனர். இவர்கள் நாட்டியக் கலையைக் கற்றுத்தர வல்லவராவர். நிருத்தமாராயன், நிருத்தப்பேரரையன் என்றவாறு பட்டப்பெயர்கள் அவர்களுக்கு வழங்கப்பெற்றன. இவ்வெழுவருள் 'மறைக்காட்டுக் கணவதியான திருவெள் ளறைச் சாக்கை' என்பானும் ஒருவன். 'மறைக்காட்டுக் கணவதி யான' என்றிருத்தலின் இவன் மறைக்காட்டைச் சேர்ந்தவன் என்பதில் ஐயமிருக்க இயலாது. ஆனால் 'திருவெள்ளறைச் சாக்கை' எனவும் பெயர் இறுதியில் வருதலால். சாக்கைக் கூத்துக்குச் சோழர்காலத்தில் திருவெள்ளறை ஊர் நல்ல பெயரைப் பெற்றிருந்தது போலும் .

சில குறிப்பிடத்தக்க கல்வெட்டுச் செய்திகள்

முதற் பராந்தகனுடைய இரண்டு கல்வெட்டுக்கள் வடக்கிற்றளியில் விஷ்ணுவைப் பற்றிக்கூறுகின்றன[80] எனவே பராந்தகன் காலத்தில் திருமறைக்காட்டில் விஷ்ணுகோவில் இருந்திருக்கிறது பராந்தகன் கல்வெட்டு (17:461) 'திருமறைக் காட்டு மாதேவர் கோயிலின் வடக்கில் ஸ்ரீ கோயில் விஷ்ணு என்றும், வடக்கிற்றளி விஷ்ணு என்றும் (17:518) அழைப்பதால் திருமறைக்காட்டுக்கு வடக்கே விஷ்ணு கோயில் இருந்தது என அறியலாம். அக்கோயிலில் விளக்கு எரிப்பதற்காக அளநாட்டுக் கிழியில் இருக்கும் வெள்ளாட்டி சாத்தன் மல்லி என்பவரும், மறைக்காட்டைச் சேர்ந்த வைகாநஸன் ஆலபாணி பட்டசாலி என்பானும் தனித்தனியே இரு விளக்குகளை வைத்து அவ்விளக்கு களை எரிப்பதற்கு 9'0 ஆடுகளையும் அவ்வூர் தேவரிடைச்

சான்றாரிடம் கொடுத்தனர். இச்செய்தி விஷ்ணு கோவிலில் வெட்டப்பெறாமல், வேதாரண்யம் கோவிலில் பொறிக்கப்ப பெற்றுள்ளது. எனவே, பராந்தகன் காலத்தில் விஷ்ணுகோயில் கற்றளியாக இல்லாமல் செங்கல் கட்டிடமாக இருந்தது என ஊகிக்கலாம். விஷ்ணு கோவில் செய்தியைச் சிவன் கோவிலில் பொறித்தமை கொண்டு அக்காலத்தில் சைவ வைணவ வேறுபாடு பூசலாக இல்லாமல் ஒற்றுமையாக இருந்தன எனவும். உணரலாம். கல்வெட்டு குறிப்பிடும் இவ்விஷ்ணு கோயில் மறைக்காட்டுக்கு வடக்கே, தோப்புத்துறை என்னும் ஊர்க்கு அருகே, வரதராஜபெருமாள் கோவில் என்னும் பெயரில் செங்கல் கட்டிடக் கோவிலாக உள்ள கோயிலாகலாம்.

மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் மறைக் காட்டில் இளமறைக்காடர் கோயில் என்று ஒரு கோயில் இருந்தது (17:539) இளமறைக்காடு உடையார்க்காக 3/4 வேலி நிலம் கொடுக்கப்பெற்றது மறைக்காட்டுக் கோவிலில் கல்வெட்டாகப் பொறிக்கப்பெற்றது. இன்று இளமறைக் காடர் கோயில் என்ற பெயரில் கோவில் எதுவும் இல்லையாயினும் – வேதாரண்யத் திற்கு மேற்கே மேல மறைக்காடர் கோயிலும், வடக்கே வடமறைக் காடர் கோயிலும் உள்ளன. விடுபட்ட இரு திசைகளிலும் இத்தகு கோவில்கள் முன்னர் இருந்தன என்று அங்குள்ளோர் கூறு கின்றனர். எனவே மறைக்காட்டுக் கோயிலை நடுநாயகமாகக் கொண்டு நான்கு திசைகளிலும் கிளைக் கோவில்களை அமைக்கும் வழக்கத்தை இவ் இளையறைக் காடர் கோயில் தோற்றுவித்தது என்று கூறலாம்.

திருப்பதியம் பாடுவார் :

தஞ்சையில் திருமறைக் காடர் என்னும் பகுதியில் திருப்பதியம் பாடுவார் பலர், மறைக்காட்டினின்று தஞ்சை சென்றிருந்தனர் என்பது கூறப்பட்டது. எனவே, தேவாரத் திருப்பதிகங்களை முறைப்படிக் கற்று பாடவல்லார் பலர் திருமறைக் காட்டில் வாழ்ந்திருக்க வேண்டும். இரண்டாம் குலோத்துங்கனுடைய வேதாரண்யம் கல்வெட்டு ஒன்று (170:453) திருப்பதியம் பாடுவார் பலர் மறைக்காட்டில் இருந்தமையைத் தெரிவிக்கிறது திருப்பதியம் பாடுவார் பலரும் ஒரு குழுவாக (சமுதாயமாக) வாழவே அவர்களுக்கு நாயகமாகத் (தலைவனாக) திரச்சிற்றம்பலமுடையான் தியாக சமுத்திரப் பிச்சன் என்பான் திகழ்ந்தான். குலோத்துங்கன் காலத்தில் மறைக் காட்டுக் கோவிலில் திருப்பதியம் பாடும் உரிமை இப் பிச்சனுக்கும், இவன் வற்கத்தார்க்குமே உரியதாக ஆக்கப்பெற்றது. எனவே, திருப்பதியம் பாடும் வேறு வற்கத்தாரும் அவ்வூரில் இருந்தனர் போலும். இன்று இசைவல்ல தேசிகர்கள் பலர்இன்றும் வேதாரண்யத்தில் வாழ்கின்றனர்.

ஆள்வலை பிரமாண இசைவு தீட்டு:

அடிமை முறையைப் பற்றிக் கூறுகின்ற கல்வெட்டுகள் இரண்டு வேதாரண்யத்தில் உள்ளன. (17: 541, 544) இவ்விரு கல்வெட்டுக்களும் மூன்றாம் ராஜராஜன் காலத்தைச் சார்ந்தவை.

மேற்புரம் காவலனாக இருந்த அரியான் பிச்சனான் எதிரில் சோழ கங்கை நாடாழ்வான் என்பான் தன்பால் பல அடிமைகளை வைத்திருந்தான். அவர்களுள் பதின்மரை 1000 காசுக்கு மறைக்காட்டுக் கோவிற்கு விற்று இருக்கின்றான். அடிமைகளைப் பெற்றுக் கொண்ட ஆதி தண்டேசுர தேவர்கன்மிகன் ஸ்ரீ பண்டாரத்

திலிருந்து 1000 காசுகளைக் கொடுத்தனர். அவ்வடிமைகள், வேதனான பட்டநாயக்கண்ணப்பன், குரம்பன், ஆதிநாயக கண்ணப்பன், சொக்கநாயகக் கண்ணப்பன், கங்கன், திருவன், கழனி ஆண்டி, ஆண்டாளி, ஆண்டான், திருக்களம் அழகியான் ஆகியோராவர்.

சோழர்கள் காலத்தில் ஒரு மனிதன் 100 காசுக்கு விற்கப் பெற்றிருக்கிறான். அடிமை முறை இப்பதின்மர் மண்ணுக்குள் சென்ற நாளோடு முடிவடைந்துவிடாது. இப்பதின்மரின் வற்கத்தாரும் அடிமைகளாகவே ஆதல் வேண்டும் என்பதை 'இவர்களையும் இவர்கள் வற்கத்தாரையும் விற்றுக் கொடுத்தேன்' என்னும் கல்வெட்டு வரி தெரிவிக்கிறது. சுந்தரர் இந்த முறையில் தான் அந்தணருக்கு அடிமையானது என்பது இங்கு எண்ணத் தக்கது. மேற்பாடி காவலனான 'அரியான் பிச்சனான கங்கை நாடாழ்வான்' என்பானும் தன்னடிமைகளுள் கழனி, குடியாள் என்னும் இருவரையும் மறைக்காட்டுக் கோவிறகு விற்றிருக் கின்றான்.

குழகர் கோவில் திருப்பணி :

போசள வேந்தனாகிய வீர நரசிம்மனுக்குப் பிறகு பட்டம் பெற்ற அவன்மகன் வீர சோமேசுவரன் என்பவன்.

வீர சோமேசுவரனுடைய படைத்தலைவன் சிங்கண்ண தண்ட நாயகன் என்பான். இவன் கி.பி. 1241ல் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தான். அப்படையெடுப்பால் கோடியக் காடு குழகர் கோவில் சிதைவு பெற்றது. பூசையும் வழிபாடும் நின்று போயிற்று. கோயிலைப் புதுப்பித்தற்கோ ஸ்ரீ பண்டாரத்தில் (கருவூலம்) உடல் இல்லாது (பொருள் இல்லாது) போயிற்று. 'கனத்தூர் நாட்டு அதுலபராக்கிரமபுரத்து சாத்தன்

பட்டன் நம்பியான உத்தமன் நம்பி (17:543) சிதைந்த கோவில் மீண்டும் எழுதற்காக ஐம்பதினாயிரம் காசைக் குழகர் கோயில் தானத்தாரிடம் கொடுத்து திருப்பணியைத் தொடங்கி வைத்தான். தானத்தார் இறைவன் திருவுலாச் செய்யும் போது இவனையும் இவனது வர்க்கத்தாரையும் மரியாதை செய்ய ஒப்பினர், கோடியக்காடு கோயில் தொடர்பான இக்கல்வெட்டு திருமறைக் காட்டுக் கோயிலில் வெட்டப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள் :

1. தெ. இ. க. தொகுதி, 17:496
2. மேலது 17:522
3. மேலது 17:523
4. மேலது 17:450
5. தெ. இ. க. தொகுதி 13:24
6. மேலது 128
7. தெ.இ.க. தொகுதி. 17:527
8. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1, பக்கம்.40
9. தெ.கு.க. தொகுதி 17:501
10. மேலது 17:530
11. மேலது 19: 83, 119, 120, 156, 157, 194, 195, 216, 217, 317, 339
12. தெ. இ. க. தொகுதி. 17: 461
13. மேலது 458
14. மேலது 501
15. மேலது 452
16. தெ. இ. க. தொகுதி 17:152
17. மேலது 318
18. மேலது 527
19. தெ. இ. க. தொகுதி. 17: 461
20. மேலது 446
21. மேலது 449

22. மேலது 459
23. மேலது 491
24. தெ. இ. க. தொகுதி 17 : 546
25. மேலது 13 : 128
26. மேலது 19 : 317
27. மேலது 19 : 194
28. தெ.இ.க.தொகுதி 17:484
29. மேலது 317
30. மேலது 478
31. மேலது 472
32. மேலது 492
33. மேலது 463
34. மேலது 491
35. தெ.தொகுதி. 17:470
36. மேலது 475
37. மேலது 486
38. மேலது 517
39. மேலது 455
40. மேலது 17:462
41. மேலது 536
42. மேலது 472
43. தெ.தொகுதி. 17:481
44. தெ.தொகுதி. 17:524
45. தெ.தொகுதி. 17:53
46. தெ.தொகுதி. 17:451
47. மேலது 449
48. இ.க.தொகுதி. 17:476
49. **The Colas K.A. Nilakandasastri P.114**
50. தெ.தொகுதி. 17:517
51. தெ. இ. க. தொகுதி 17:501
52. மேலது 480
53. தெ. இ. க. தொகுதி 17:480

54. மேலது 448
55. மேலது 527
56. மேலது 466,
57. தெ.இ.க.தொகுதி 17:415
58. தெ.இ.க.தொகுதி 17:485
59. தெ.இ.க.தொகுதி 17:466
60. மேலது 492
61. தெ.இ.க.தொகுதி 17:472
62. மேலது 445
63. தெ. இ.க.தொகுதி 17:442
64. மேலது 446
70. **Palitical Geography of the chola cocentry - y. subba rayaluu** என்ற நூலில் உதவியுடன் இப்பகுதி அய் மேற்கொள்ளப்படுகிறது.
71. தெ. இ.க.தொகுதி. 17:501,
72. மேலது 19:157,
73. மேலது 17:506, 471,
74. மேலது 19:195,
75. மேலது 17:463.
76. தெ. இ.க.தொகுதி. 17:597
77. மேலது 17:686, 694,
78. ஆய்வுக்கொத்து. பக். 50
79. இக்கருவி தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மையில் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றது.
80. தெ.இ.க.தொகுதி 17:481, 518

13. இன்றைய வரலாற்றுப் பொன்னேட்டில் வேதாரண்யம்

இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் பெருமிதத்தோடு குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகள் சில வேதாரண்யத்தில் நடந்துள்ளன. அவற்றுள் உப்பு சத்தியாக்கிரகப் போரும், கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுல அமைப்பும் குறிக்கத் தக்கன.

காந்தியடிகளார் சட்ட மறுப்பு இயக்கத்தை 1930ல் தொடங்கினார். பூரண சுயராஜ்யம் இந்திய மக்களின் பிறப்புரிமை யென்றும், அதனைப் பெறுதற்குப் பாடுபட வேண்டுமென்றும் ஜனவரி 26 ஆம் நாள் காங்கிரசு தீர்மானித்தது சட்ட மறுப்பு இயக்க வேலைகளில் ஒன்றாக அண்ணலார் வாழ்வின் ஜவாதாரமான உப்புக்கு விதிக்கப்பட்ட உப்புவரியை மீறுகின்ற உப்புச்சத்தியாக கிரகத்தை ஆரம்பித்தார்.

வெற்றி அல்லது வீரமரணம் என்ற மணிவாக்கை வழிகாட்டியாகக் கொண்டு காந்திஜி உப்பு சட்டத்தை மீற 1930 மார்ச்சு 13ம் தேதி தண்டிக்க யாத்திரை கிளம்பினார். நடெங்கிலும் பரபரப்பு. ஏப்பரல் ஆறாம்தேதி காந்திஜி தண்டியில் உப்பு எடுத்து சட்டத்தை மீறினார். மே 4 ஆம் தேதி அண்ணலார் கைது செய்யப்பட்டு ஏரர்வாடா சிறையில் வைக்கப்பட்டார்.

காந்தியடிகள் 79 தொண்டர்களுடன் தண்டிக்குக் கால்நடையாகச் சென்றதைப்போல 13-4-1930 பிரமோதூத

சித்திரை முதல் நாள் விடியற்காலைப் பொழுதில் ராஜாஜி தலைமையில் 100 தொண்டர்கள் அவரவர் முட்டைகளுடன் திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்கு யாத்திரை புறப்பட்டனர். டி.எஸ்.எஸ். ராஜன் பங்களாவிலிருந்து இப்பாத யாத்திரை ஆரம்பமாகியது. சர்வசமயப் பிரார்த்தனைக்குப் பிறகு 'ரகுபதி ராகவா ராஜாராம் பாடப்பட்டது. சிவகுருநாதன் என்கிற யாழ்ப்பாணத் தொண்டர் சங்கு ஊதினார். பாத யாத்திரை துவங்கியது.

திருராஜன் அவர்களுடைய 'சுதந்திரச் சிந்தனைகள்' என்னும் நூற்பகுதிகள் சில போற்றிக்கொள்ளப்பெற்றுள்ளன.

இத்தொண்டர் படையை நசுக்கியே விழுவதென்று வீராப்புடன் இருந்தார் தஞ்சை கலெக்டர் தார்ன் துரை. இவர்களுக்கு வரவேற்பு அளிக்கக் கூடாது, குடிக்கக் கூட தண்ணீர் தரலாகாது என்று அவர் மக்களை எச்சரித்திருந்தார். ஆனால் இதை லட்சியம் செய்யாமல் மக்கள் 'தொண்டர் படைக்குப்' பெரும் வரவேற்பு அளித்தனர். தேசிய உணர்வு மிக்க சிலர் தொண்டர் களுக்கு உணவு சமைத்து. உணவுப் பொட்டலங்களை ஆல மரத்தின் அடியில் வைத்துவிடு – தொண்டர்கள் செவியில் விழு மாறு '22 ஆம் நம்பர் ஆலமரம் எனக்கூவி விருந்தும் படைத்தனர்.

பாரதியார் தேசிய கீதங்களும் – இந்த யாத்திரைக்காகவே நாமக்கல் கவி இராமலிங்கன் பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்ற 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது. என்றுற உணர்ச்சிக் கனலும் அடிக்கடி பாடப்பெற்றன. வேதாரண்ய சத்தியாக்கிரக வெற்றிக்குக் காரணமானவர் சர்தார் வேதரத்னம் பிள்ளையவர்கள். வேதாரண்யத்தில் வயர்லஸ் டெலிபோன் நிலையம் நிறுவப்பட்டது. வேதாரண்யம் ஒரு பெரும் போர்க்களமாகவே காட்சியளித்தது. வேதரத்னம் அவர்கள்

தொண்டர்கள் தங்குதற்காகத் தம்முடைய புகையிலை தோட்டத் தையே அழித்து பெரிய முகாமொன்றைக் கட்டியிருந்தார். வேதரத்தினம் அவர்களைக் கைது செய்துவிட்டால் தொண்டர்களுக்கு உணவு வசதி கிடைக்காதென்று போலிசார் அவரைக் கைது செய்தனர் அவருடைய உப்பளமும் பறிமுதல் செய்யப்பட்டது.

பெண்கல்வியின் இன்றியமையாமையையும் உணர்ந்த சர்தார் வேதரத்தினம் பிள்ளையவர்கள் 1946ஆம் ஆண்டு காந்திஜியின் ஆசிபெற்று 'ஸ்ரீ கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்' என்னும் மகளிர்பள்ளியை அமைத்தனர். தொடக்கப் பள்ளியாக தொடங்கப்பெற்று இப்போது உயர்நிலைப் பள்ளியாக வளர்ந் துள்ளது.

குருகுலத்தில் ஹரிஜனப் பெண்களுக்கே முதலிடம் அளிக்கப்பெறுகிறது. அனாதை, திக்கற்ற பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பெறுகின்றனர். இங்கு தாய்மொழி, ஆங்கிலம், இந்தி எனமூன்று மொழிகள் கற்றுத்தரப்பெறுகின்றன. பாடங்கள் யாவும் செய்து கற்றுத்தரப் பெறுகின்றன. பாடங்கள் யாவும் செய்து கற்றல் முறையிலே சொல்லித் தரப்பெறுகின்றன. திக்கற்றார்க்கு இலவச உணவு உடையளித்தும், கூட்டு வழி பாட்டால் உள்ளத்தைப் பண்படுத்தியும், இசைக் கருவிகளை இயக்கச் சொல்லிக் கொடுத்தும் நடைபெறும் இக்குருகுலம் இந்தியாவிலேயே சிறந்தஸ்தாபனம் என்று மத்திய கல்வித்துறை அறிவித்துள்ளது.

14. பிற்சேர்க்கை

அச்சில் வராதகல்வெட்டுகள்

வேதாரண்யம் கோவிலில் இதுவரை பதிப்பிக்கப் பெறாத சில கல்வெட்டுகள் உள்ளன. அவை திருச்சுற்றுச் சுவர்களில் மட்டுமே உள்ளன. இவை பிற்காலச் சோழர்காலத்தியவை. இவற்றில் சிறந்தக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இதன் பெரும் பகுதியை பிற்காலச் சுவர்பகுதி மறைத்துள்ளது.

1. இடம் : மேற்குப் பிரகாரச்சுவர்

1. ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் இராஜராஜ சோழவேவக்கு யாண்டு பதினாறாவது விஹா நாயற்று பஹு வக்ஷத்து...

2. வளநாட்டுக் குறுக்கை நாட்டு... டையான் திருச்சிற்றம் பலமுடையான் திருநட்டமாடிபாரி...

3. திரு நட்டமாடி நாராயணனை முதுகண்ணாகக் கொண்டு உடையார் திருமறைக் காடுடையார்க்கு நான்.

4. முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிரா மணர் என்பக்கல் உபையமாகக் கொண்ட இத்திருவிளக்...

5. இக்காசு நாலாயிரமும் இக்கோயில் முப்பது வட்டத்து சிவப் பிராமணரோம் உபையமாகனாங்கள் பொருள் குறிப்பு : திருச்சிற்றம்பல முடையான் திருநட்டமாடி விளக்கு எரிக்க 4000 காசு கொடுத்துள்ளான்.

2. இடம் : மேற்குப் பிரகாரச் சுவர் :

1. ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசேந்திர சோழதேவற்கு யாண்டு ய ஆனி மீ 2ந்தியதி...

2. அருமொழிதேவ வளநாட்டுப் புலியூர் நாட்டு சிகாருடையான் அரயன் ஆதி... ராயனேன்.

3. திருமறைக்காடுடையார்க்கு நான்வைத்த திரிநுந்தா விளக்கு இரண்டுக்கு கோயில் முப்பது வட்டத்து உடைய சிவப்பிராமணர் என்பக்கல் (உ)

4. பையமாகக் கொணடு கல்வெ(ட்) ட இத்திருவிளக்கு எரிக்க இவர்க(ள்) குடுத்த காசு பதினாயிரமும் கைக் இத்திரி நுந்தாவிளக்கு.

5. சந்திராதிததவற் எரிப்போமானோம் பொருள் குறிப்பு : புலியூர் நாட்டு சிகாருடையான் அரயன்[2] எரிப்பதற்காக முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமன் பதினாயிரம் காசு கொடுத்தான்.

3. இடம் : மேற்குப் பிரகாரச்சுவர் :

அரசன் : மூன்றாம் ராஜேந்திரன்

1. திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசேந்திர சோழ யாண்டு யக குலோத்துங்க சோழ பட்டினத்து வியாபாரிகளில் இங்கணாட்டு நெல்வேலி உடைய செல்கலாண்டான் மரு... பிதாக்கள் ஆட்டை பிறந்த நாள்.

2 .... திருமறைக் காடுடையார் ஆடி அருளவும் செய்தருளவும்.

4. இடம் : மேற்குப் பிரகாரச் சுவர் :

அரசன் : கோமாறவர்மன் குலசேகரன்

1. கோமர்றபன்மரான திரிபுவனச் சக்கர ஸ்ரீ குல சேகர தேவர்க்கு யாண்டு (நு)ய வது மிதுன நாயற்று அபரபக்ஷத்து... யும் செவ்வாய்ககிழமை பெற்ற பூசத்து நாள்... நாட்டவரோம் உடையா திருமறைக்காடுடையார் திருத்தமனகந் சாத்தி.

2. அருளவேண்டும் உழிகை முதலுக்கு நாட்டு இளைஞர் செய்து குடுத்த நிலமாவது இந்நாட்டுக்கு குன்று நாட்டுப் பெரும்புயம்... நெல்லு எண்ண செம்பாதியால் வ.

3. ந்த நிலமும் நெல்லும் நாட்டு வினியோகம் வகை வினியோகம் உளப்படத் திருத்தெமகைஞ் சாத்தியள உழிகை முதலாக ... குடுத்தமையில்

4.....

5. இப்படிக்கிவை நகரக்குடையன் வானவதரயன் எழுத்து இப்படிக்கிவை குன்றூருடைய கங்கை கொண்ட சோழ... (இப்) படிக்கிவை அவையம் பக்கான எழுத்து (இப்படிக்) கிவை செம்பிய சோழன் எழுத்து.

6. இப்படிக்கிவை பாங்கர் வாயுடையான் தென்னவை தரையன் எழுத்து இப்படிக்கிவை கொல்லை... சோதி மிதித்தான் எழுத்து இப்படி (க்கிவை)... எழுத்து)

பொருட்குறிப்பு :

இறைவன் திருத்தமனகம் (மருக்கொழுந்து) சாத்தியருள் வதற்காக நாட்டவர் நிலத்தை இறையிலி செய்து கொடுத்தனர்.

கல்வெட்டுப் பதிப்புக்களைக் கொண்டு வேதாரண்யம் கோவிலில் பாண்டியர் கல்வெட்டே இல்லை என்று தான் முடிவு செய்ய வேண்டும். ஆயின் பாண்டியன் கல்வெட்டு ஒன்று புதிதாகக் கிடைத்துள்ள. மற்றொரு கல்வெட்டுச் சிதைவில் மறைக்காட்டுக் கோவிற்கு செப்பேடு இருந்தது என்னும் குறிப்பை அறியமுடிகிறது.

மேற்கோள் நூல்கள்

பாட்டு நூல்கள் :

1. தொல்காப்பியம்
2. மூவர் தேவாரம்
3. கல்லாடம்
4. பதினோராம் திருமுறை
5. பெரிய புராணம் – சேக்கிழார்
6. திருப்புகழ் – அருணகிரி
7. வேதாரண்ய புராணம் – பரஞ்சோதி முனிவர்
8. வேதாரண்ய புராணம் – அகோர தேவர்
9. மறைசையந்தாதி – யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பி புலவர்
10. தனிப்பாடல் திரட்டு

தமிழ் நூல்கள் :

1. தமிழக் கோயிற்கலைகள்
2. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்
3. கல்வெட்டு 1974

4. மாமல்லை –இரா. நாகசாமி

5. யாவரும் கேளிர் – இரா. நாகசாமி

6. கையேடு

7. கலைக் களஞ்சியம் – தொகுதி 6

8. பிற்காலச் சோழர் சரித்திரம் – பண்டாரத்தார்

9. பாண்டியர் வரலாறு – பண்டாரத்தார்

10. சிற்பரத்தினம் – சரசுவதி மஹால் வெளியீடு

11. முற்காலச் சோழர்கலையும் சிற்பமும் – எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்

12. ஆராய்ச்சித் தொகுதி – மு. ராகவையங்கார்

13. தமிழகம் ஊரும் பேரும் – ரா.பி. சேதுப்பிள்ளை

14. தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் – அண்ணா மலை பல்கலைக் கழகவெளியீடு

15. தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.11) – மு. அருணாசலம்

16. சேக்கிழார் – மு. அருணாசலம்

17. பக்தி இலக்கியம் – ப. அருணாசலம்

18. சாசனமும் தமிழும் – ஆ. வேலுப்பிள்ளை

19. ஆய்வுக் கொத்து – பதிப்பாசிரியர் க.ப. அறவாணன்

20. திருத்தலப்பயணம் – ராய சொ

21. தமிழ் இலக்கிய வரலாறு – மு.வ.

22– சோழர்கால அரசியல் தலைவர்கள் – கா.ம. வேங்கடராமையா.

23. தஞ்சாவூர் மாவட்டம் – சோமலெ

24. சுதந்திரச் சிந்தனைகள் – எஸ். நடராஜன் பி.ஏ.,

25. சிவஸ்தல மஞ்சரி – வடக்குப்பட்டி த. சுப்பிரமணிய பிள்ளை

ஆங்கில நூல்கள் :

1. தெ.இ.க. தொகுதிகள் 17, 19, 13, 2

2. A.R.E. on 1904. 1927

3. The Colas - K.A. Nilakanta Sastri M.A.

4. South Indian Bronzes C.Sivarama murthi

5. Early chola Art - part I - S.R. Balasubrahmanyan

6. Epigraphica India Volume - XXII

7. Political Geography of the Chola Country - Y. Subbalayalu

8. Tanjavur Temples - K. Chockalingam.

வரைபடம்



1. உப்புனார் அறு
2. மனம்கொண்டான் ஆறு
3. முல்லி ஆறு
4. வளவனாறு

வேதாரண்யேஸ்வரர் கோவில் வரைபடம்

1. வேதாரண்யேஸ்வரர் (மூலவர்)
2. சண்டிகேஸ்வரர்
3. மண்டபம்
4. தியாகராசர் சந்நிதி
5. தச்சிணாமூர்த்தி
6. வேதவன பிள்ளையார்
7. லிங்கங்கள்
8. காட்சிகொடுத்த நாயகர் (ரிஷபவாகனர்)
9. திருமலைபதி
10. சுப்பிரமணியர் சந்நிதி
11. மகாலட்சுமி
12. சரஸ்வதி
13. நடராசர்
14. பரிவட்ட அறை
15. அன்னபூரணி
16. காப்பகம்
17. துர்க்கை சந்நிதி
18. நவக்கிரகம்
19. சூரியன்
20. செப்புப்படிம மண்டபம்

21. 63 நாயன் மார் மண்டபம்
22. விளக்கு அறை
23. வாகன அறை
24. திருமலை அறை
25. மேலகுமரன் சந்நிதி
26. சுப்பிரமணியர்
27. அம்மன் மேல மண்டபம்
28. புன்னை மேடை
29. காசி லிங்கம்
30. 60 தூண் மண்டபம்
31. நர்த்தன பிள்ளையார்
32. பலிபீடம்
33. நந்தி
34. ஆலய மணி
35. மேல மண்டபம்
36. வன்னியடி பிள்ளையார்
37. மடப்பள்ளி
38. விசுவநாதர்
39. அறை
40. முன்னைய சமையல் அறை
41. சப்த கன்னிகள்
42. காசி லிங்கங்கள்
42. காசிலிங்கங்கள்
43. பிள்ளையார்
44. பைரவர்

வரைபடம்



தேவஸ்தானத்துக்குச் சொந்தமான ஊர்களின் வரைபடம் அட்டவணை

வரிசை	ஊரின் பெயர்	தலைமையிடத் திலிருந்து	ஏக்கர்	சென்ட்
1.	நாலுவேதபதி	12	36	11
2.	புஷ்பவனம்	8	30	76
3.	தேத்தாகுடி வடக்கு சேத்தி	6	117	46
4.	செம்போடை	7	68	53
5.	கரியாபட்டிணம்	13	237	92
6.	கத்திரிபுலம்	8	182	08
7.	செண்பகராய நல்லூர்	10	108	77
8.	மருதூர் வடக்கு சேத்தி	9	19	65
9.	தென்னம்புலம்	14	345	98
	வடமழை மணக்காடு	14	7	91
10.	வேதாரண்யபுரம்			
11.	மஹாராஜபுரம் மேல்பாதி	15	15	05
12.	மஹாராஜபுரம் கீழ்பாதி	14	11	24
13.	பெரியகுத்தகை	4	35	94
14.	ஜாம்பு வானோடை	37	3	24
15.	தில்லை விளாகம்	37	1	82

16.	வாய்மேடு	15	35	80
17.	குன்னலூர்	30	1559	43
18.	எக்கல்	30	1	91
19.	தகட்டூர்	15	35	80
20.	மருதூர் தெற்கு சேத்தி	10	1	58
21.	பன்னாள்	9	46	43
22.	கடினவயல்	8	152	63
23.	ஆதனூர்	4	298	39
23/1	கோவில் தாழ்வு	4.30	167	75
23/2	அண்டர் காடு	4	371	19
24.	கருப்பம் புலம்	6.30	682	61
25.	ஆயக்கரம் புலம்.3	7	42	70
26.	ஆயக்காரம் புலம் 1	9	2	51
27.	குரவப் புலம்	6	28	09
28.	தேத்தாகுடி தெற்கு சேத்தி	6	866	46
29.	வட்டகட்டளை	2	130	64
29/2	மறை ஞாய நல்லூர்	2	665	45
29/3	பண்ணின் நேர்மொழியாள்புரம்	3	1339	73
30.	நெய்விளக்கு	322	59	
31.	தோப்புத்துறை	2	5	56
32.	வேதாரண்ய பட்டினம்		191	10
33.	அகத்தியான் பள்ளி	2	1416	74
34.	கோடியக்காடு	8	9	65

35.	கோடியக்கரை	10	1704	36
36.	எட்டுகுடி	32	1	12
37.	நடுவிக்காடு	48	12	79
38.	திருவாரூர்	42		8
39.	தாமரைப்புலம்	9	29	83
40.	கொள்ளுக்காடு	50	156	11
41.	சின்னமனை	53	42	00
42.	அண்டகத்துறை	13	62	62
43.	மகராஜபுரம் கீழ்பாதி	14	246	57
			1305	07



கீழைக்கோபுரம்
வேதாரண்யேஸ்வரர் கோயில்



கீழைக்கோபுரமும் திருக்குளமும்
வேதாரண்யேஸ்வரர் கோயில்



திருவோலக்கமண்டபமும் அணித்தூண்களும்



சிவபெருமான் கருவறை விமானங்கள்,
சோழர்கால வேதாரண்யேஸ்வரர் கோயில்



கருவறை விமானங்களும்
கீழைக் கோபுரமும்



வேதாரண்யேஸ்வரர் கோயில் பொதுத் தோற்றம்
(கீழைக் கோபுரத்திலிருந்து)



பிள்ளையார்
சோழர்காலம்



சரஸ்வதி
மராட்டியர் காலம்



கங்காதரர்,
சோழர் காலம்



சூரியன்
சோழர்காலம்



பைரவர்,
விஜயநகரர் காலம்



இராசி மண்டலம்,
மகாமண்டப விதானம்



பெரிய புராணை ஓவியங்கள், மராட்டியர் காலம்,
2ள் திருக்கற்றுக்கவர்



எரிபத்த நாயனார் கதை,
மராட்டியர் கால ஓவியம், உள் திருச்சுற்றுச் சுவர்.



